KALKI
4.1.87
ரூ. 1.50

கல்கி



சுஹாசினி

சினிமாவைக்
கொஞ்சம் மறந்தபோது...

'I thought my wardrobe was comprehensive. Until I saw a new suiting range that proved me wrong.'

'They say that you often discover happiness right in your own backyard. I've always known that there is no country like India. And it's here that we produce some of the best textiles in the world: like the new range from Gwalior Suiting. Impeccable, international-class fabric, a perfectionist's dream. Gwalior's Golden Glade Worsted Suiting and Domfab.

Now that more connoisseurs will get to hear of Gwalior Suiting and Shirting, I won't be able to keep them to myself.

But this is what democracy is all about, isn't it?.'

M. A. K. PATAUDI

GWALIOR SUITING

IN A CLASS OF ITS OWN



MAPP-GR-86-114

சங்கடத்துக்குள்ளான சங்கீத கலாநிதி!

செம்மங்குடி இப்போதெல்லாம் பாடுவதைக் குறைத்துக் கொண்டு விட்டதாலோ என்னவோ நிறையப் பேசுகிறார். ஆச்சர்யம் என்னவென்றால், அவர் பாடக் கேட்க ரசிகர்கள் எத்தனை ஆர்வமாகச் சென்றார்களோ, அதே ஆர்வத்துடன் பேச்சைக்கேட்கவும்போகிறார்கள்! அகாடமி ஆரம்ப விழாவில் அவர் பேச்சு ரத்தினச் சுருக்கமாக மட்டுமின்றி ரத்தினக் கருத்துக்களையும் அளிப்பதாய் இருந்தது. ஒலிபெருக்கியை எப்படிக் கையாள வேண்டும் என்பதை அவர் விளக்கியது ரொம்ப அவசியமான ஒன்று. ரொம்ப பேருக்கு மைக்குக்கு மிக அருகே நெருங்கிப் பாடக் கூடாது: அதனால் இசை, இரைச்சலாகிவிடும் என்பது கூடத் தெரிவதில்லைதான். குருகுலவாசம் என்பதெல்லாம் பழங் கதை என்பதை உணர்ந்து நிகழ்காலத்துக்கு வந்தார் செம்மங்குடி. இசைக் கல்லூரிகளில் மூன்று மணி நேரத்துக்குக் குறையாமல் ஒரு பீரியட் (பிராக்டிகல் இசை வகுப்பு) இருக்க வேண்டும் என்பதையும் மாணவர்களின் எண்ணிக்கை எட்டு, பத்துக்கு மேல் போகக் கூடாது என்பதையும் வலியுறுத்தினார். ரசிகர்களையும் விட்டு வைக்கவில்லை; குட்டு வைத்தார்! கச்சேரியின் இடையில் பேசுவது, தனி ஆவர்த்தனத்தின் போது எழுந்து போவது, பாடகருடன் கூடச் சேர்ந்து பாடுவது, பலமாகத் தாளம் போடுவது முதலியவற்றைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டார். பாடகர் உயிரை விட்டுப் பாட வேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கும்போது, அந்த ரசிகர்களின் முழுக் கவனமும் பாட்டில் இருக்க வேண்டும் என்று பாடகர் எதிர்பார்ப்பதிலும் தவறில்லை அல்லவா?

அத்தனை சங்கீத கலாநிதிகளையும் ஒரு சேர ஒரே நேரத்தில் மேடையில் பார்க்கப் பிரமிப்பாகத்தான் இருந்தது. விழாவும் கச்சிதமாக நடந்து கொண்டிருந்தது. அகாடமியின் முன்னாள் தலைவர் சுந்தரம் அய்யர், தம்மைக் கௌரவித்ததற்குத் தாம் பதில் கூறியாக வேண்டும் என்று எதிர்பாராதவிதமாகப் பிடிவாதத்துடன் மைக் முன் வந்து நின்றபோதுதான் இன்றைய அகாடமியின் தலைவர் டி.டி. வாசு நிர்ணயித்திருந்த காலப் பிரமாணம் தப்பிப் போய்விட்டது! அந்த நேரத்தை ஈடுகட்டுவதற்காக, கே.வி. நாராயணசுவாமியைத் தமது பேச்சைச் சீக்கிரம் முடித்துக் கொள்ளுமாறு வாசு கேட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. தலைமையுரையைப் பாதிக்குமேல் கே.வி.என். அவசர அவசரமாகப் படித்ததில் அதன் ஜீவன் போய்விட்டது. இவ்வாண்டு சங்கீத கலாநிதியை இப்படி ஒரு தர்ம சங்கடத்துக்கு உள்ளாக்கியது — திருஷ்டிப் பொட்டு!

சிலரது கச்சேரி முடிந்த பிறகு, 'அடடா, இன்னும் சற்று நேரம் கேட்க முடியாமலிருக்கிறதே' என்று தோன்றும். ஆனால் மகாராஜபுரம் சந்தானம் பாடும் போது, ராக ஆலாபனை முடிந்தால், 'அடடா,

— தொடர்ச்சி — கடைசி பக்கம்...



இவர் சினிமாவைக் கொஞ்சம் மறக்க முயன்ற போது...



சத்யா ஸ்டுடியோ.

ஃபிளோரில், டெட்டால் வாசமில்லாத அட்டை ஆஸ்பத்திரி.

இன்டென்ஸிவ் கேர் யூனிட்டில் நாயகன் படுத்திருக்க, கட்டில் விளிம்பருகே நிற்கும் நாயகி சோகமாய் உதடுகளைத் துடிக்கவிட—

''கட்! ஷாட் ஓ.கே.''

நாயகி திரும்பினால், சுஹாசினி! பார்த்தவுடன் மூக்கோரம் சுருங்கும் அந்தச் சிரிப்பு!

''ஹலோ!''

''ஹலோ. நாங்கள் உங்களோடு பேச வந்திருக்கிறோம்'' என்றோம்.

''வெல்கம். உக்காருங்க.''

''தாங்க்ஸ். கொஞ்ச நேரம் சினிமாவை மறந்துட்டுப் பேசுவோமா?''

''சினிமாவை மறக்கறதா? **Nothing can separate me from cinema.**''

''ஆக்ட்ரஸ்ங்கறதை மறந்துடுங்க. ஒரு பெண் என்ற நிலையில இருந்துக்கிட்டுப் பேசுங்களேன். உங்க குடும்பத்தைப் பத்தி... உங்க ஃப்ரெண்ட்ஸ்.''

''ஸ்டாப். குடும்பத்தைப் பத்திச் சொல்றேன் மொதல்ல. எங்க குடும்பத்தில இருக்கணும்னா அசாத்திய தைரியம் வேணும். ஏன்னா ஒவ்வொருத்தரும் கிரேட். எங்கப்பா சாருஹாசனுக்கு ஸ்போர்ட்ஸ்ல தெரியாத ரெகார்டே கிடையாது. சங்கீதம், இலக்கியம், தத்துவம் எல்லாத்திலயும் எக்ஸ்பர்ட். சித்தப்பா சந்திரஹாஸனுக்கு அபார மூளை. வீட்டிலேயே அவர்தான் ஸ்மார்ட்டஸ்ட்னு சொல்லலாம். நல்லாப் பாடுவாரு. அத்தை—நளினின்னு பேர். ஹப்பா, ரொம்ப அழகு அவங்க. நான் அவங்களை மாதிரி இருக்கிறதா வீட்டுல சொன்னாலும், நான் அழகுல அவங்ககிட்டக் கூடப் போக முடியாது. ரொம்ப நல்லாப் பாடுவாங்க. சாஸ்திரிய நடனம் தெரியும். பாம்பேல டான்ஸ் ஸ்கூலே நடத்தறாங்க. கடைசியா கமல். நடிப்பைத் தவிர கமலுக்கு வேற எந்தவித குவாலிஃபிகேஷனும் கிடையாது. அப்படிப்பட்ட கமலே இப்படி இருக்காருன்னா மத்தவங்களைப் பத்தி நீங்களே யோசிங்க.''

''உங்க அம்மா?''

''அம்மா ஒரு **walking dictionary.** இங்கிலீஷ் வார்த்தை எது புரியலைன்னாலும் அம்மாகிட்டேதான் தாத்தாலேர்ந்து எல்லாரும் கேட்பாங்க. அம்மா அர்த்தத்தைச் சொல்லிட்டு அவங்க பாட்டுக்கு மறுபடியும் கறிகாயை நறுக்க ஆரம்பிச்சுடுவாங்க.''

''இவங்ககிட்டல்லாம் நீங்க நல்லதுன்னு கத்துக்கிட்டது என்னென்ன? கெட்டதுன்னு ஒதுக்கினது என்ன?''

''மேடம், ஷாட் ரெடி'' — சினிமா உலகின் பழகிப் போன டயலாக் வெகு அருகில் கேட்க, சுஹாசினி எங்களைப் பார்த்துக் கேட்ட கேள்வி இது:

''எப்படி, எப்படி, கொஞ்ச நேரம் சினிமாவை மறந்துட்டுப் பேசறதா? எக்ஸ்க்யூஸ் மீ. நான் இதோ வந்துடறேன்.''

மறுபடி லைட்ஸ் ஆன்கள். ஸ்டார்ட்கள். காமிராவின் வெகு உன்னதமான 'கிர்' ஒலிகள்.

மறுபடியும் எங்களை நெருங்கிய உற்சாக சுஹாசினி.

''எங்க ஃபாமிலி மெம்பர்ஸ் கிட்ட கத்துக்கிட்ட நல்லது, கெட்டது—ம்? கெட்டதுன்னு நான் நெனைச்சதைச் சொல்லி, அவங்க பலவீனத்தை **expose** பண்ண விரும்பலை. நல்லதை மட்டும் சொல்றேன். எங்கப்பாகிட்ட சுயநலமே கிடையாது. யார் மேலேயும் பொறாமை கிடையாது. அம்மா ரொம்ப ஸிம்பிள். ஆடம்பரமே இல்லாதவங்க. பறந்த மனப்பான்மை உள்ளவங்க. இந்தக் குணங்களையெல்லாம் நான் கத்துக்க முயற்சி பண்ணிட்டிருக்கேன். கமல் சித்தப்பாகிட்ட, ஒண்ணைத் தெரிஞ்சிக்கணும்னு ஆசை வைச்சா, தெரிஞ்சுக்கற வரைக்கும் தூக்கம் வராத அந்தப் பிடிவாதம், அந்த ஆர்வம். அதைக் கத்துக்கிட்டிருக்கேன்.''

"மத்தவங்க பலவீனத்தை விடுங்க. உங்க பலவீனம்?"

"ம். முன் கோபம். இந்த இண்டஸ்ட்ரீல இருக்கறவங்களால டென்ஷன் இல்லாம இருக்க முடியாது. காலேல ஏழுலேர்ந்து, எட்டரை வரைக்கும் நான் ராட்சஸி மாதிரி இருப்பேன்! அப்புறம் நைட் ஒன்பது மணி வரைக்கும் சினிமா, சினிமா, சினிமாதான்."

"இப்படி காலேல சீக்கிரம் கிளம்பி அர்த்த ராத்திரில திரும்பி வந்தீங்கன்னு, உலக நடப்புகளைப் பத்தித் தெரிஞ்சுக்க உங்களுக்கு நேரம்?"

"என்னோட பொது அறிவு ஒரு **Big Zero**தான். பஞ்சாப் பத்தியோ, பாகிஸ்தான் பத்தியோ, அமெரிக்கா பத்தியோ எனக்குத் தெரியாது. நான் ஒரு கிணத்துத் தவளை. இப்படி இருக்கிறது ரொம்ப ரொம்பத் தப்புத்தான். ஆனா என் ஒரு ஸிஸ்டர் டாக்டர். இன்னொரு ஸிஸ்டர் ட்ராவலிங் பிஸினஸ்ல இருக்கா. அவங்ககிட்டல்லாம் பேசி ஜெனரல் நியூஸ் தெரிஞ்சிப்பேன். ஆனா தீபாவளிக்குக்கூட என் குடும்பத்தோட இருக்கவே நேரம் தர மாட்டேங்கறாங்களே, சினிமா உலகத்திலே... வாங்க வெளியே போய் உக்காந்து பேசுவோம்."

ஷூட்டிங் ஸ்பாட்டிலிருந்து வெளியே வந்தோம். இயற்கைக் காற்றுடன் மூன்று சினிமா நாற்காலிகளில் அமர்ந்து கொண்டோம். ஒரு கார் 'ஸ்' என்று சுமறி 'கிர்' என்று சீறி சிமெண்ட் தரையைத் தேய்த்துக் கொண்டு பறந்தது.

"தீபாவளிக்குக்கூட குடும்பத்தோட இருக்க முடியலேன்னு சொல்றீங்களே, இவ்வளவு பிஸியா ஏன் இருக்கணும், அதான் புரியலே."

"எனக்கு இன்னும் இந்தத் துறையில் ரெண்டு வருஷமோ, மூணு வருஷமோ?"



"ஒரு சிலுக்கோ, அனுராதாவோ நம்ம சினிமா வாழ்க்கை கம்மிங்கற பயத்தில கெடைக்கிற சினிமாவையெல்லாம் இழுத்துப் போட்டுக்கிட்டு ராப்பகலா நடிச்சா அர்த்தம் இருக்கு. உங்களுக்கு அப்படியென்னங்க அவசியம்?"

"இந்தக் கேள்விக்கு எந்த ஆர்ட்டிஸ்ட் கிட்டேயும் சரியான பதில் கெடைக்காது. இப்ப என்னைத் தேடிட்டுச் சினிமா வருது. அப்புறம் நாந்தான் மத்தவங்க பின்னால் போகணும்."

"அதுக்காக ஆக்ரோஷம், ராட்சஸன் போலத் தெலுங்குப் படங்களில எல்லாம் தையத் தக்கான்னு குதிக்கறதுக்குக் கூடத் தயாராயிடறதா?"

"தெலுங்குன்னாலே மட்டம்னு நெனைக்கிறது தப்பு. ஒரு சங்கராபரணமோ ஸ்வாதி முத்யமோ, பூ ஒன்று புயலாகிறதோ தெலுங்குலதான் வந்தது. தமிழ்ல இல்லே."

"நாங்க தெலுங்கு இண்டஸ்ட்ரியைப் பத்திப் பேசலே. உங்களோட பங்கைச் சொல்றோம். வருஷத்துக்கு ஒரு படம் முத்து மாதிரி பண்ணாப் போதுமே!"

"நான் நடிச்ச எவ்வளவோ நல்ல தெலுங்குப் படங்களை நீங்க பாக்கலே. சிரஞ்சீவியோட நடிச்ச ரெண்டு மூணு ஆக்ஷன் படத்தைப் பத்தி மட்டும் பேசறீங்க."

"உங்களைக் குடும்பப்பாங்கான பாத்திரத்தில பாக்கறதுதான் தமிழ் ரசிகர்களுக்குப் பிடிச்சிருக்கு."

"ஐயோ, என்னை ஏன் அந்த மாதிரி கட்டுப்படுத்தணும்? எப்பவுமே ஒரு கொழந்தைக்கு அம்மாவாதான் நான் நடிக்கணுமா? ஒரு காலேஜ் ஸ்டூடண்ட்டா மாடர்ன் டிரெஸ்ல வரவே கூடாதா? இன்னும் சொல்லப் போனா தமிழ்ல ஒரு ரொமாண்டிக் ரோல்



"என் கணவர் என்னைவிடச் சிறப்பானவரா இருக்கணும்"

பண்ணணும்னு நான் துடிச்சிட்டிருக்கேன். இப்பக் கூப்பிட்டா சகல கலா வல்லவன்லே கூட நடிப்பேன். பெண்களை இழிவு படுத்தற படங்களில நடிக்கறதைத்தான் நான் வெறுக்கறேன்.''

''அப்ப **women's liberation**ல நம்பிக்கை இருக்கு?''

"**No, I don't, as such believe in women's lib.** இண்டஸ்ட்ரி ஆண்களால் ஆளப்படுது. வேறே எந்தத் தொழிலிலயும் பெண்கள் இல்லாம சமாளிக்கலாம். சினிமால பெண் இல்லாம ஒருநாள்கூட ஓடாது. வேலே செய்யறப்ப பெண்களுக்கு இங்கே கெடைக்கற மரியாதை திரையில் ஓடற சினிமாவில அவங்களுக்குக் கெடைக்கிறதில்லே.''

''ஆண்கள்தான் பெண்களை இழிவு படுத்தறாங்கன்னு சொல்றீங்களா?''

''அடிப்படையில ஒரு ஆண் பலம் வாய்ந்தவன். பெண்ணை விட சக்தி வாய்ந்தவனாய்ப் படைக்கப்பட்டிருக்கான். கவிதைகளில மட்டும் பெண்களைத் தூக்கி வச்சிப் பேசுவாங்க. இலக்கியத்திலயும், சினிமாவிலயும் அசிங்கப்படுத்தறாங்க. இது தப்பு இல்லேயா?''

''நீங்க நடிக்கற படத்தில இந்தக் குறையில்லாம நீங்க பாத்துக்கலாமே?''

''இந்த மாதிரி கொள்கைங்கறது டைரக்டருக்குத்தான் இருக்க முடியும். ஒரு கலைஞனுக்குக் கொள்கை இருக்க முடியாது. உதாரணமா காதல் தோல்வியால ஒரு பெண் வாடறது எனக்குப் பிடிக்காது. ஒருதலைக் காதல்ங்கறதும் பிடிக்காது. ஆனா இந்த மாதிரி ரோல் செய்யமாட்டேன்னு சொல்ல முடியுமா? முடியாது!''

''முரண்படறீங்களே. நீங்க ஒரு சுதந்திரமான பெண்ணா இருக்க ஆசைப்படறீங்க. ஆனா நாளுக்கு ஒரு டைரக்டர் சொல்ற இடத்தில நிக்கறீங்க. ஆட்டி வைக்கிறபடி நடக்கறீங்க. குதிக்கறீங்க. இது கஷ்டமாயில்லேயா?''

''ரொம்பக் கஷ்டந்தான். ஆனா எனக்கு ஆரம்பத்திலரொம்ப ஈகோ இருந்தது. அந்தப் பயங்கரத் திமிரைக் குறைக்க இதுதான் வழின்னு நெனேக்கிறேன். என் திமிரை மூடி மறைச்சி, பந்தா இல்லாத நடிகையா நடந்துக்கறது அவ்வளவு சுலபமான சாதனை இல்ல. ஆனா அதை நான் சந்தோஷமாச் செஞ்சிட்டிருக்கேன்! என்னோட பலவீனமே இன்னிக்குப் பிடிவாதமா இருக்கறதில, நானேக்கு காம்ப்ரமைஸ் பண்ணிக்கறது தான்.''

''உங்க பலவீனம் பத்திச் சொன்னீங்க. பலம்னு எதை நெனேக்கறீங்க?''

''தேடிப் பாத்துதான் சொல்லணும். என்னோட காமன்ஸென்ஸ், சமயோசிதம், முன்னெச்சரிக்கை இதெல்லாம் பலம்னு மத்தவங்க சொல்றாங்க.''

''உங்களோட பொழுதுபோக்கு?''

''சினிமா. முன்னயே சொன்ன மாதிரி சினிமாலேர்ந்து என்னை எதாலயும் பிரிக்க முடியாது. என் கல்யாணத்தாலகூட அதைப் பிரிக்க முடியாது. கல்யாணத்துக்கு அப்புறம் நான் நடிக்காம இருக்கலாம். ஆனால் ஏதோ வொரு வடிவத்தில சினிமாவோட சம்பந்தப் பட்டுத்தான் இருப்பேன்! அந்த ஆர்வத்துக்கு அழிவே கிடையாது.''

''கல்யாணம்? முடிவு பண்ணியாச்சா?''

''நமஸ்காரம் சுஹாசினி காரு... நமஸ்காரம்.''

''ஆ... ரண்டி.... ரண்டி.... நமஸ்காரண்டி.''

தெலுங்குப் படவுலக பிரமுகர். மரியாதைக்கு இரண்டொரு வார்த்தைகள். முடித்துக் கொண்டு பிரமுகர் விலகினார்.

''கல்யாணந்தானே, முக்கால்வாசி காதல் கல்யாணமாத்தான் இருக்கணும்னு விரும்பறேன். ஆனா என் கணவனைத் தேர்ந்தெடுக்கற தகுதி எனக்கு இருக்கான்னு தெரியலே. சினிமாக் கதை செலக்ட் பண்றதிலேகூட அப்பாவையும் கன்சல்ட் பண்ணிக்கிட்டிருக்கேன். அதுல ஒரு வசதி. சரியா இல்லாமப் போயிட்டா பழியைத் தூக்கி இன்னொருத்தர் மேல் போடலாம் பாருங்க.

''உங்க கணவர் எப்படி இருக்கணும்?''

''என்னேவிடச் சிறப்பானவரா.

''ஆண் டாமினேஷன் கூடாதுன்னு சொன்னீங்களே?''

''இப்பவும் சொல்றேன். எனக்குச் சமான மரியாதைகொடுக்கணும். ஆனா என்னே விடச் சிறப்பானவரா இருக்கணும். **If I fall in love with somebody, it will be admiration first.**''

''அப்படி யாரும் இந்த இண்டஸ்ட்ரில கெடைக்கலேயா?''

கல கல கல கல கல.

''இருக்காங்க. ஆனா பிரமிப்பா பாக்கற, மரியாதை கொடுக்கற எல்லா ஆண்களுக்கும் ஏற்கெனவே கல்யாணம் ஆய்டிச்சு. மிச்சமிருக்கிறது வெறும் பையன்கள்தான். கமல் மாதிரி ஒரு தைரியமான முடிவை ஒரு பெண்ணால எடுக்க முடியாது.

''கமல் இன்னொரு பெண்ணே வாழ்க்கைல சேர்த்துக்கிட்டது தவறுன்னு நீங்க சொன்னதாச் செய்தி வந்ததே?''

''ஏதாவது சாப்பிடறீங்களா?''

''பரவாயில்லை. வேண்டாம் தாங்க்ஸ்.''

''காப்பி மட்டும். ம்? வேணு, இங்க மூணு காப்பி.''

காப்பி சாப்பிடும் சம்பிரதாயத்தில் மூன்று நிமிடங்கள். ஒரு வேன் டீஸல் புகையைக் கக்கி, ஆகாய நட்சத்திரங்களை மறைத்தது.

''கமல்....?''

''ஸீ... நான் கமலைப் பத்திப் பேசாம இருக்கறதே நல்லது. கமல் எனக்குச் சித்தப்பாவா இருக்கலாம். ஆனா அவர் ஒரு தனி மனிதர். அவரைப் பத்திப் பேச எனக்கு உரிமை கிடையாது.''

''ஏற்கெனவே கல்யாணமான ஆணை ஒரு பெண் ஆசைப்படறது தப்பில்லையா?''

''எல்லாக் காதலுமே, கல்யாணத்தில தான் முடியணும்னு என்ன அவசியம்? நம்ப நாட்ல ஆரம்பத்திலேர்ந்தே ஆணையும், பெண்ணையும் பிரிச்சுப் பிரிச்சு வக்கறதால முதல்ஆணைப்பார்த்தவுடனேமேலேயோசிக்காம அந்த ஆணையே கல்யாணம் செய்துக்கணும்னு அவசரப்பட்டுடறாங்க! காதல் எந்த வித்தியாசமும் பார்க்கிறதில்லை. வயசானவனா, நம்ப ஜாதியா, பணக்காரனா, கல்யாணமானவனான்னு பாத்துத் திட்டமிட்டு வரது பேர் காதல் இல்லை. அது இயல்பா வர்ற நாட்டம். ஆனா கல்யாணமானவனை விரும்பற பொண்ணு, அந்தப் பொண்ணு வர்றதால இந்தக் குடும்பத்தில என்னென்ன பாதிப்பு வரும்னு யோசிச்சுப் பாக்கணும்.''

கடைசி வாக்கியத்தில் குரலில் நெகிழ்ச்சி. கண்களில் நீர் படர்ந்துவிட்ட மாதிரி ஒரு பிரமை. இல்லை நிஜமாகத்தானோ? மூடு மாறினால் சரியாகிப் போகும்?

''உங்களுக்கு எழுத்தில ஆர்வம் உண்டா?''

''எழுதுவேன். என் டயரியை. அதைப் படிச்சா மர்மக் கதை படிக்கற மாதிரி இருக்கும். அத்தனை சங்கேத வார்த்தைங்க. ஆனா முழு மூச்சா எழுத்துல ஈடுபடலை. ஈடுபட்டு அது சரியா வரலைன்னா நான் ரொம்ப அப்செட் ஆயிடுவேன்கற பயம்.''

''வழக்கமா போரடிக்கற ஒரு கேள்வி. உங்க லட்சியம் என்ன?''

''You mean ambition? My ambition in life is to have lots of ambitions.''

''இப்ப என்ன லட்சியம்?''

''நல்ல சினிமாலே பங்கெடுத்துக்கணும். இன்னும் ரெண்டு வருஷம் கழிச்சி சமுதாயப் பிரச்னைகளை அலசற படத்திலதான் நடிக்கணும்னு இருக்கேன்.''

''ரெண்டு வருஷம் கழிச்சி உங்களுக்கு நடிக்க வாய்ப்பு வராம போய்ட்டா?''

''ஸ்கிரிப்ட் எழுதுவேன். காமிரா பின்னாடி இருப்பேன். ஏதாவதொரு வழியில சினிமால என் பங்கு தொடரும்.''

''ஒரு சோப் விளம்பரத்தில மாடலா நின்னிருக்கீங்க. உங்க இளமையை உபயோகப்படுத்தி மக்களை அந்தப் பொருளை வாங்க வைக்கிறது தப்புன்னு படலியா?''

''நீங்க நல்லாப் பார்த்தா அந்த விளம்பரத்தில நான் இஷ்டமில்லாம முழிச்சுக்கிட்டு நிப்பேன். விளம்பரங்களுக்கு மாடலிங் செய்ய எனக்கு என்னிக்குமே இஷ்டம் கிடையாது. ஒரு நாளைக்கு ஒரு லட்சம் ரூபா கொடுக்கத் தயார்னு எத்தனையோ புடைவைத் தயாரிப்பாளருங்க வந்து கேட்டபோதுகூட நான் கடைசி வரைக்கும் விடாப்பிடியா மறுத்துட்டேன்.''

ஸ்ரீதேவி ஒரு பிறவி நட்சத்திரம்; நதியா முதலில் ஆக்ட் பண்ணியபோது நதியாவுக்கு, தானே பொது ஜனத் தொடர்பு அதிகாரி போல் பார்த்தவர்களிடமெல்லாம் பேசிப் பேசி மகிழ்ந்தது என்று எத்தனையோ விஷயங்கள் பேச்சில் உருண்டன. உற்சாகம் பொங்கியது. குரல் ஏறி இறங்கி, ஏறி இறங்கி நடனம் ஆடியது! 'சரி' என்று புறப்பட்ட நேரத்தில் ஓர் இளைஞர் வந்தார்.

''ஹாய்'' என்று வரவேற்ற சுஹாசினி, ''இவர் எங்கூட ஃபிலிம் இன்ஸ்டிட்யூட்ல படிச்சவர்'' என்று அறிமுகப்படுத்த, ''ஹலோ'' என்றோம்.

''சுஹாசினி, I have a bad news for you. நம்ப கூட படிச்ச கிருஷ்ணகுமார் ரெண்டு நாளைக்கு முன்னால இறந்து போய்ட்டான், சுஹாசினி!''

''யாரு, ஒரு தடவை பெங்களூர்லே...''

''அதே கிருஷ்ணகுமார்தான்.

சுஹாசினியின் முகத்தில் துக்க மேகங்கள் சூழ, அந்த க்ளாஸ்மேட்டுடன் துள்ளித் திரிந்த நாட்கள் மனத்தில் அலைய மௌன சுஹாசினி. சோக சுஹாசினி. எங்களையும் ஒரு கனத்த திரை வந்து சூழ்ந்து கொண்டது.

இது செலுலாயிட் துக்கம் இல்லை. நிஜத் துக்கம். திரையை விட்டுக் கொஞ்ச நேரத்திற்கு விலகி நின்று உற்சாகக் களஞ்சியம், சிங்காரச் சிரிப்பு, மௌன ராகம் அத்தனையும் காட்டிய சுஹாசினியைச் சந்தித்த உணர்வுடன் கிளம்பினோம்.

சந்திப்பு: **ஜெயமன்மதன்**

புகைப்படங்கள்,
மேலட்டை வண்ணப்படம்: **யோகா**

மார்க் ட்வெய்னின் நூல் நிலையம்

மார்க் ட்வெய்னைப் பார்க்க வந்த நண்பர் ஒருவர் ''என்ன, புத்தகங்கள் இப்படி இறைந்து கிடக்கின்றன?'' என்றார்.

அதற்கு மார்க் ட்வெய்ன், ''நான் என்ன செய்யட்டும். புத்தகங்களைத்தான் கடன் வாங்கலாம்; பீரோக்களையுமா கடன் வாங்க முடியும்?'' என்றார்!

ஆதாரம்: சிரியுங்கள், சிந்தியுங்கள்

— எச்.எம்.ஏ. அஷ்ரப்

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி



பொன்னியின் செல்வன் — அறிவிப்பைப் பார்த்ததும் ஏற்பட்ட மகிழ்ச்சியை வார்த்தைகளில் வடிக்க இயலவில்லை. காலத்தால் அழியாத அந்தப் பொக்கிஷத்தை என் நூலகத்தில் சேர்த்துக்கொள்ள வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

— க. இராசசேகரன், பேரளம்.

அமரர் கல்கி அவர்களின் அழியாக் காவியமாம் பொன்னியின் செல்வன் மீண்டும் கல்கியில் வீர நடை போடப் போவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியுற்றேன். மீண்டும் பொன்னியின் செல்வனை வெளியிடுவதால் என்னைப் போன்ற இளைஞர்களின் நீண்ட நாள் ஆவலைப் பூர்த்தி செய்கிறீர்கள்.

— எஸ். ஸ்ரீதரன், சென்னை—17

சரித்திரக் கதை எப்படி எழுத வேண்டும் என்பதற்கு எடுத்துக்



காட்டாக உள்ள கதை பொன்னியின் செல்வன். அது மீண்டும் பொங்கல் சிறப்பிதழிலிருந்து தொடராக வர இருப்பது கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இன்னும் நூறு முறை வந்தாலும், அலுக்காத ஒரே சரித்திரக் கதை பொன்னியின் செல்வன். வந்தியத்தேவனே வருக.... வருக.... என வரவேற்கிறேன்.

— ராஜிராதா, திருச்சி—18.



இன்றும் இராமாயணம் உபன்யாசம் பல இடங்களில் நடந்து கொண்டுதானிருக்கிறது.

இராமாயணக்கதைஎல்லாரும் அறிந்ததே ஆனாலும் அதை கேட்கக் கேட்க இனம் புரியாத இன்பமும், பக்தியும் ஏற்படுவது போல நம் அமரர் கல்கி அவர்களின் 'பொன்னியின் செல்வன்- மீண்டும் கல்கி வார இதழ்களிலேயே பவனி வரப்போவது கண்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய இளம் எழுத்தாளர்கள்—வாசகர்கள் அனைவருக்கும் கிடைத்துள்ள ஓர் அரிய பொக்கிஷம் இந்தத் தொடர்.

— சுகந்தி நாராயண்,
சென்னை—39.

பொங்கல் சிறப்பிதழில்



அட்டகாசமாக ஆரம்பமாக இருக்கும் அமரர் கல்கியின் 'பொன்னியின் செல்வன்' தொடரைப் படிக்க ஆவலுடன் காத்திருக்கிறோம். பொங்கலே! நீ உடனே வரமாட்டாயா?

— கருணா மதுரை மூர்த்தி,
மதுரை—1.



'பொன்னியன் செல்வன்' கல்கி பொங்கல் சிறப்பிதழில் ஆரம்பம் ஆவது குறித்து அறிந்த போது மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

கதை என்றால் என்ன என்று அறிந்து கொள்ளவும், எழுத்தின் ஆற்றல் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளவும்,









தமிழின் அழகு என்ன என்பதை உணர்ந்து கொள்ளவும், வர்ணனை என்பது எப்படிப்பட்ட சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளவும், எல்லாவற்றிற்கும் மேலாய், சரித்திர நாவலை ரசித்து ருசிக்கவும், அமரர் கல்கி அவர்களின் 'பொன்னியின் செல்வன்' கதையைப் படிக்க வேண்டும் என்று பலபேர் சொல்லிக் கேள்விப்பட்டுள்ளேன்.

பொருளாதார வசதியும் நேர வசதியும் இல்லாததால் அந்த 'பொன்னியின் செல்வன்' கதையைப் படிக்கும் அரிய வாய்ப்பு இந்த ஜன்மத்தில் நமக்குக் கிட்டாமல் போகப் போகிறது என்று பலமுறை நான் எண்ணி வருத்தப்பட்டதுண்டு!

ஆனால் அந்த வருத்தமும்

தேவையற்றது என்று சொல்லாமல் சொல்லியது கல்கியில் வந்த அந்த அறிவிப்பு!

— பி. அனிதா, கோவை—16.





'பொன்னியின் செல்வன்' கல்கியின் பொங்கல் மலரிலிருந்து மலரப் போவதை எண்ணி இப்பொழுதே எங்கள் வீட்டில் பொங்கல் விழாவைக் கொண்டாடிவிட்டார்கள்.

— ராஜயோகி, சேலம்—14.

பொன்னியின் செல்வனை வரவேற்று வாழ்த்தி எழுதிய கணக்கற்ற வாசகர்களுக்கு இதயம் கனிந்த நன்றி.





மகத்தான சரித்திரத் தொடர்கதை
கல்கி '87 ஜனவரி 11
பொங்கல் சிறப்பிதழில் ஆரம்பம்

இந்தச் சிறப்பிதழில் உங்களுக்கு மிகவும் உபயோகமான ஒரு பகுதி இடம் பெறுகிறது. மறதியை முறியடிப்பது எப்படி; டென்ஷனைக் குறைப்பது எப்படி; அச்சத்தைப் போக்குவது எப்படி என்பது போன்ற பல அம்சங்களைப் பற்றி மனோதத்துவ நிபுணரான டாக்டர் தமது யோசனைகளை அனுபவ பூர்வமான சம்பவங்களை மேற்கோள்கள் காட்டிக் கூறுகிறார். இதைத் தொடர்ந்து டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி எழுதிய 'வாழ்க்கை வளம் பெற.... கட்டுரைகளும் வாரம் ஒன்றாகக் கல்கியில் இடம் பெறும்:

அதிக பக்கங்கள்! அதே விலை!

குமுறுமல் குமுறி...

* 'என்னைக் காக்க வந்தாயா?' படித்தேன். திருமண வீட்டின் களையுடன் துவங்குகிற கதை — ஓர் இசைக் கலைஞனின் உள் மன ஏக்கங்களை எல்லாம் தேக்கி நகர்ந்து — கிடைக்கும் ஒரு ரசிகரின் நேச இழையுடன் — குமுறுமல் குமுறி முடிகிறது! அற்புதம் என்னவென்றால், இக்கதையில் நவரசங்களும் ததும்புவதுதான்!

திருப்பத்தூர், ஜி. தனியன்.

* 'கருச் சிதைவு' கவிதைகள் வந்து கொண்டிருப்பதை மறுக்கவில்லை. ஆனால் கேள்வி—பதிலில் இடம் பெற்றிருந்த 'கருச் சிதைவு' கவிதையில் என்ன குற்றம் கண்டீர் தராசே?

தக்கலை, இராமலிங்க்.

* கலைவிழாவில் சுந்தன் கருணை கவர் ஸ்டோரி தொடங்கி, இசை பற்றிய கட்டுரைகளும், சிறுகதைகளும், ஜோக்குகளும் படிப்பவர்க்குப் பரவசமூட்டின. ஹும் 'எம்.எஸ்.ஸுக்கு எழுபது' தலையங்கம் இவ்வார இசைச் சிறப்பிதழின் மணிமகுடமாக விளங்கியது!

அப்பாடா...! இவ்வளவு காலம் கடந்து பாலைவன ரோஜாக்களுக்கு விமர்சனம் எழுதிவிட்டீர்களா....? பேஷ்.... பேஷ்....! விமர்சனம் தந்ததில் ஆமை வேகமானாலும், விமர்சித்த முறையில் தூள் கிளப்பி விட்டீர்கள் போங்கள்!

ஒண்டிப்புதூர், கா.க.வே. ரோகிணி.

* 21.12.86 இதழின் தராசு பதில்கள் அட்டகாசம் போங்கள்!

மன்னம்பந்தல், எஸ். சிவசங்கர்.

* அசோகமித்திரனின் 'புதுப் பயன்' படித்ததும் வழி தவறிய ஆடு தவிப்பது போல என் மனம் தவித்தது. இந்தச் சிறுகதைக்காக அந்த மாபெரும் எழுத்தாளரின் காலடியில் என்னைச் சமர்ப்பிக்கிறேன்.

கடலூர்—2, ஆர். வேலுமணி.

* இவ்வருடம் தாங்கள் வழங்கிய இசைவிழா சிறப்பிதழ் உண்மையிலேயே பக்கத்திற்குப் பக்கம் படு ஜோர் போங்கள்....! இதில் குறிப்பாக நான் பாராட்ட விரும்புவது ஜோசியர் சீனு—பாஸ்கர் இருவரும் இணைந்து கர்நாடக சங்கீதத்தை மையமாகவைத்து எழுதி, நடித்து, இயக்கிய 'ஞானம் பொறந்துருச்சு' நாடகத்தைப் பாராட்டிய விதமும் அவர்களை பேட்டி கண்ட விதமும்தான். எந்தவித ஆபாசமோ அபத்தமோ இல்லாமல் உருவாக்கப்பட்டிருந்த ஞானம் பொறந்திருச்சு நாடகத்தை சமீபத்தில் ரசித்துப் பார்த்தோம். இப்பேர்ப்பட்ட சிறந்த நாடகத்தை எந்தப் பத்திரிகையும் பாராட்டி எழுதவில்லையே என்று நினைத்த நேரத்தில் தாங்கள் பாராட்டி எழுதியதைப் படித்ததும் மெய்சிலிர்த்துப் போனேன்.

ஈரோடு—10, மேஜர்தாசன்.

* திருவையாற்றில் தியாகையர் வீட்டைச் சம்பந்தப்பட்டவர்கள் புதுப்பித்து நல்லபடியாகப் பாதுகாத்து வரக் கூடாதா? இசை விழா வேளையில் இம்மாதிரி விவரங்களை வெளியிட்டதற்குப் பாராட்டு.

சென்னை — 17, எஸ். வி. ராஜசேகர்.

* 'இந்த வருஷம் என்ன ஸ்பெஷல்?' இன் இடையிடையே இடம் பெற்றிருந்த உமது நிருபரின் கமெண்ட்ஸ் — அபாரம்!

வேலாயுதம்பாளையம், எம். சம்பத்.

* ஏதோ டி. ராஜேந்தருக்குப் போட்டியாகத்தான் பாக்யராஜ் இசையமைக்கிறார் போலும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், அதற்குக் காரணம் இளையராஜாதான் என்பதைக் கல்கியைப் படித்த பிறகு தெரிந்து கொண்டேன். பாக்யராஜின் தன்னம்பிக்கை பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

நத்தியநல்லூர், க. இளங்கோ.

* பாட்டூன்.... சங்கீதக் கார்ட்டூன் படு ஜோர்! பாராட்டூன்!

அயன்புரம், த. சத்தியநாராயணன்.

* பாட்டூன் பக்கத்தில் சீக்கிய 'தீவிரவாதிகள்' என்று குறிப்பிடாமல், வெறுமனே சீக்கியன் என்று மட்டும் குறிப்பிட்டுவிட்டீர்களே? நியாயமா?

திருச்சி—6, எஸ். ஆர். சுவாமிநாதன்.



பாப்பா வளர்ச்சிக்கான திட உணவுகளில் பாசத்தாய் அளிக்கும் முதலிடம் ஃபாரெக்ஸ்®

தாய், தன் குழந்தைக்கு தேர்ந்தெடுக்கும் முதலான திட உணவு புதிய செழுமையான ஃபாரெக்ஸ். காரணம்:

பாப்பாவின் உடல் நலத்திற்கான புரதமும், ஜீரணத்திற்கு உகந்த கொழுப்புச் சத்தும் சரியான அளவில் கொண்டது.

பாப்பாவுக்கு ஆரோக்கியமான ரத்தத்தை தரவல்ல இரும்புச் சத்துள்ளது.

எலும்பும் பற்களும் வலுவோடு வளர்ந்திட கால்சியமும் ஃபாஸ்ஃபரஸும் 2:1 என்ற அளவில் சேர்க்கப்பட்டது.

தின்னத் தெவிட்டாதது; கலப்பதும் கொடுப்பதும் எளிது.



பால் சேர்க்கத் தேவையில்லை! நீருடன் கலந்து கொடுத்தாலே போதும்.

தாயன்பைக் கூறிடும் தரமிக்க திட உணவு ஃபாரெக்ஸ்®

CLARION/B/GX/15/203

ஆர். வெங்கடராமனின் பெயர் பல நாட்களாகவே தலைநகர் தில்லியில் பெருவாரியாக உச்சரிக்கப்பட்டு வருகிறது. 'ஜனாதிபதி' தேர்தல் வரும் ஜூன் மாதம் நடைபெறக் கூடும்.

'புதிய ஜனாதிபதியாக யாரைத் தேர்ந்தெடுப்பார் ராஜீவ்?' என்ற கேள்வி, இப்போதுள்ள தில்லிக் குளிரில் சூடான கேள்வியாக எழுந்துள்ளது.

ஆர். வெங்கட்ராமனை மரியாதையாக 'ஆர்.வி.' என்றே தெற்கே அழைத்தாலும் வட இந்தியர்கள் 'ஆர். வெங்காட்டரமான்' என்றே வாயார அழைக்கிறார்கள்.

ரேடியோவிலும், டீ.வி.யிலும் அடிக்கடி ஆர்.வி. பற்றிய செய்திகள் திணிக்கப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கிறபோது, ஜனாதிபதி பதவிக்குத் தன்னை ஆர்.வி. தயார்ப்படுத்திக் கொள்கிறாரா? என்று நினைக்கத் தோன்றும்.



ஆர்.வி. ஜனாதிபதி ஆவாரா?

நடைபெறும் என்ற சடங்குகளை வழக்கம் போல் தேர்தல் கமிஷன், வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் அறிவிக்கும். அதன்பின்னர், இ. காங்கிரஸ் கட்சி தன் பலத்தைக் காட்டி, ஒரு நபரைத் தேர்ந்தெடுக்கும். அந்த ஒரு நபரை ராஜீவ் என்ற ஒரு நபர்தான் தேர்ந்தெடுப்பார் என்பது வேறு விஷயம்.

'எதிர்க்கட்சி வேட்பாளர் யாராவது உண்டா? உங்கள் விருப்பம் என்ன? எங்கள் ஆளைத் தேர்ந்தெடுக்கலாமா?' என்றெல்லாம் எதிர்க் கட்சி நண்பர்களைக் கூட்டி விவாதம் நடைபெறும். 'சரி... நாங்கள் யாரையும் நிறுத்தவில்லை' என்றால் இ. காங்கிரஸின் விருப்பத்திற்குரியவரே ஜனாதிபதி ஆவார். இன்றேல், ஓட்டு வேட்டைதான்! இன்றைய சூழ்நிலையில், இ. காங்கிரஸின் மெஜாரிட்டி.



* பகவதி: ஆசை இல்லை.



நாருல் ஹசன்

நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்

ஜனாதிபதி பதவி என்பது வெறும் 'ரப்பர் ஸ்டாம்ப்' உத்தியோகம்தானே! இதற்கென்ன அரசியல் ஹேஷ்யங்கள், ஜோசியங்கள் என்று நினைப்பவர்களும், உயர் மட்டத்தில் தில்லியில் உலவுகிறார்கள்.

ஆனால், ஜனநாயக நாடான இந்தியாவின் ஜனாதிபதி, மற்ற நாடுகளின் தலைவர்கள் மதிக்கக் கூடிய பெருமை பெற்றவர். 1982ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற சர்தார்ஜிக்கு பதவிக் காலம் ஜூலை மாதத்துடன் முடிவடைகிறது. தேர்தல்



* இந்திராவின் ராஜதந்திரம்.





* அடுத்த துணை ஜனாதிபதி?— எஸ். பி. சவான், மோஹினா கித்வாய்.

எதிர்க் கட்சியின் வயிற்றைக் கலக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை. காரணம், இ. காங்கிரஸில் சரத் பவார் காங்கிரஸ் இணைந்ததோடு, காஷ்மீர்க் காதலரும் கூட்டு சேர்ந்துள்ள சூழ்நிலை. அத்துடன் தலையாட்டும் தமிழக முதல்வர் வேறு இருக்கும்போது எதிர்க் கட்சிக்கு இடமிருக்குமா என்ன?

ஜனாதிபதி வட இந்தியாவைச் சேர்ந்தவர் எனில், துணை ஜனாதிபதி தென்னகத்தின் திருவிளக்காய் இருந்து வருவது தொடர்ந்து நிகழ்ந்து வந்திருக்கிறது. அல்லது இப்படியும் அப்படியும் மாறிமாறித்தான் இருக்கும். இதற்கிடையில், 'மைனாரிட்டி' வம்சத்தார் என்று சொல்லப்படும் 'முஸ்லிம்' பிரிவைச் சேர்ந்தவர்களும், ஜனாதிபதி அல்லது துணை ஜனாதிபதி நாற்காலிகளைக் கவனமாகப் பிடித்துக் கொள்வார்கள்.

இந்தப் பின்னணியில் ஆர். வி.க்கு ஜனாதிபதி மாளிகையில் வாழக்கூடிய யோகம் உண்டா? ஜாதக கிரக பலன்கள் எப்படியோ, இ. காங். வட்டாரத்தில் ஆர்.வி.க்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. அவர் விடுதலைப் போராட்ட கால பாரம்பரியத்தைச் சேர்ந்தவர். அறிவு முதிர்ச்சி கொண்டவர். பல்வேறு இலாகாக்களை நிர்வகித்தவர். தமிழகத்தில் தொழில் புரட்சிக்கு வித்திட்டவர். இந்தியப் பிரதிநிதியாக ஐ.நா.வுக்குச் சென்றவர். இ. காங்கிரஸ் கட்சியில் பல நாட்களாய், குழப்பம் ஏதும் விளைவிக்காமல், காலம் கழித்து வருபவர். நேரு, வல்லப பந்த் போன்றோருடன், பிறகு இந்திரா காந்தியுடன், தற்போது ராஜீவ் காந்தியுடன் சாதுர்யமாகவே பழகி நல்ல பெயர் எடுத்திருப்பவர். நிதி அமைச்சராகவும், கண் தொந்தரவு ஏற்பட்ட பின் பாதுகாப்பு அமைச்சராகவும், பின்னர் 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்திய நாட்டின் துணை ஜனாதிபதியாகவும் ஆனவர். 1989 ஆம் ஆண்டு வரை அவருக்கு நிச்சயமாக இந்தப் பதவி உண்டு. இதற்கிடையில் அவருக்கு 'ப்ரமோஷன்' வர வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இ. காங்கிரஸ் கட்சியில் மூத்த தலைவராகத் திகழ்ந்து வருகிற ஆர்.வி.க்கு, அக் கட்சியிலேயே எதிர்ப்பு இல்லை. 'காது பொட்டு கமலபாதி' (காதில் சந்தனம் இட்டுக் கொள்வதால்) பிரணாப் கடிதம் விஷயத்தில் காலைவிட்டு வாரி விழுந்தார். பீகார் பாபுஜி ஜெகஜீவன்ராமும், ஜனாதிபதி பதவியை நினைத்துக்கொண்டே உயிரைத் துறந்தார். எனவே, ஆர்.வி.க்கு எதிராக சீனியர்கள் எவரும் இப்போதைக்கு இல்லை. எனவே இ. காங்., ஆர்.வி.யை ஜனாதிபதியாக ஆக்குவதில் ஆர்வத்தோடுதான் காணப்படுகிறது.

பாவம்! ஆர்.வி.க்குக் காக்காய் பிடிக்கத் தெரியாது. கொடுத்த வேலையைச் செய்து கொண்டே காலத்தைக் கழிப்பவர். இன்னும் சொல்லப் போனால் ஜனாதிபதி பதவி கிடைக்காவிட்டாலும் துணை ஜனாதிபதியாகவே இருந்து, ராஜ்ய சபாவில் மணியடித்துக் கொண்டு, பரிசளிப்பு விழாக்கள், புத்தக வெளியீட்டு விழாக்கள், பட்டமளிக்கும் விழாக்கள் ஆகியவற்றில் சிரித்த முகத்துடன் கலந்து கொண்டு அபாரமான ஆங்கிலப் பேச்சால் அனைவரையும் கவர்ந்து, வாழ்க்கையை ஓட்டக் கூடியவர்.

அதுசரி, ஆர்.வி.க்கு எதிராக வேறு யாரையாவது இ. காங்கிரஸ் சிபாரிசு செய்யுமா? வேறு யார் பெயர் அடிபடுகிறது? என்றால் நீதிபதி பகவதியின் பெயர் முணுமுணுக்கப்படுகிறது. அதோடு, 'மைனாரிட்டி' இனத்தவரான முகமது யூனஸின் (தற்போது தில்லி சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சி அமைப்பின் தலைவர்) பெயரும் அடிபடுகிறது. இதில் பகவதிக்கு, ஜனாதிபதி பதவி மீது ஆசை இருப்பதாய்த் தெரியவில்லை. சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக இருந்தவருக்கு, இப்பதவி 'போரடிக்கலாம்.' முகமது யூனஸுக்கு மைனாரிட்டி முத்திரையைத் தவிர வேறு சிறப்பம்சங்கள் கிடையாது.

மைனாரிட்டிக்கு ஜனாதிபதி பதவி கொடுத்தால், அவர்கள் பிரச்னை முடிந்துவிடும் என்ற கணிப்பெல்லாம் இன்று பொய்த்துப் போய்விட்டது. சர்தார்ஜி ஜெயில்சிங்கை ஜனாதிபதி ஆக்கிவிட்டால், பஞ்சாப் பிரச்னை தீர்ந்து போகலாம் என்று எண்ணியே இந்திரா காந்தி அவரை நியமித்தார். 'அவரின் ராஜ தந்திரம்தான் என்னே?' என்று பாராட்டியவர்கள் பலருண்டு. ஆனால், பஞ்சாப் பிரச்னை ஓயவே இல்லை. அதனால் சர்தார்ஜிக்கும் பிரச்னைதான் ஏற்பட்டது.

துணை ஜனாதிபதியாக இருக்கும் ஆர்.வி. ராஜ்ய சபாவை நடத்துவதில் பெரும் புகழ் பெற்றுவிட்டவர். ஜாம்பவான்களான வாஜ்பாய், அத்வானி போன்ற பெரும் தலைகளை எல்லாம் மரியாதையாக நடத்தி அவர்களின்.



ஆர். வி.க்குக் கண் ஆபரேஷன் செய்த பிரபல கண் மருத்துவர் டாக்டர் பத்ரிநாத்திடம் அவரது கண் பார்வை பற்றிக் கேட்டபோது 'எக்ஸலண்ட்' என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விட்டார். அந்த அடிப்படையில் ஆர்.வி. ஜனாதிபதியாவதற்கான தகுதியைப் பற்றிய சந்தேகங்களை எழுப்புவோருக்கு இதைவிட வலுவான பதில் தேவையில்லை!

தில்லி வாழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள்?



என். வி. கிரி:

"ராஜீவுடைய நோக்கில் ஆர்.வி.க்கு வயது தடையாக இருக்கும் என்று நினைக்கிறேன். இன்றுள்ள சூழ்நிலையில் ராஜீவுக்குப் பக்கபலமாக ஆணித்தரமான கருத்துக்களுடன் வேகமாகச் செயல்படுகிற அரசியல் பலம் கொண்ட நடுத்தர வயதினர் ஒருவரே ஜனாதிபதியாய் ஆகக் கூடும்.

ஜோதி சுந்தர்:

நாட்டின் வெளியுறவுக் கொள்கைக்கு அதிக முன்னுரிமை தருகிற ராஜீவ் காந்தி, சர்வதேச நெருக்கடிகளுக்கு ஏற்ப அனுபவம் வாய்ந்த ராஜதந்திரியை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். பாகிஸ்தான் அதிபருக்கு இந்திய நாட்டின் மீது ஒரு கண் — அதுவும் போர்க் கண். மேலும் அரபு நாடுகளிடம் நம் உறவு அவ்வளவு பிடிப்பான நிலையில் இல்லை. அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய வல்லரசுகளின் போக்கினைப் புரிந்து கொள்ள வேண்டும். இவற்றிற்குப் பொருத்தமானவராகத் தற்போதைய மேற்கு வங்காள கவர்னரும், சிறந்த கல்வியாளரும், முன்னாள் சோவியத்தூதருமான பேராசிரியர் நூருல் ஹஸனை ஜனாதிபதி ஆக்குவதில் பலருக்கும் ஆர்வம் ஏற்படக் கூடும். அவர்கள் அதை ராஜீவ் காந்தியின் காதில் போட்டு வைக்காமலா இருப்பார்கள்?



அன்பை நிரம்பவும் பெற்றுவிட்டவர். அண்மையில் பஞ்சாபில் பஸ் ஒன்றில் பயணம் செய்த 26 பேரைக் கொன்ற சம்பவம் பற்றி ராஜ்ய சபாவில் நடந்த விவாதத்தை முறையாக நடத்தியவர் ஆர்.வி. அந்த விஷயத்தில் ஆர்.வி.க்கு ஏகப்பட்ட பாராட்டுக்கள். அதே நாள் லோக் சபா உறுப்பினர்கள் படுத்தியபாடு இருக்கிறதே...!

ஆர்.வி.க்கு எதிர்க் கட்சிகளிலும் நண்பர்கள். அவர்களுடைய அன்பு கலந்த மரியாதை அவருக்கு உண்டு. மேலும், முன் அறிவிப்பு ஏதுமின்றிக் காலை பத்து மணி முதல் ஆர்.வி.யை எல்லா பார்லிமெண்ட் உறுப்பினர்களும் சந்திக்க முடியும். அவரின் திறமையில் எவருக்கும் ஐயம் இல்லை.

ஒரே ஒரு ஆட்சேபணை மட்டும் அவரைப் பொறுத்தவரை எழுப்பப்படக்கூடும். அதாவது, அவரின் கண் பார்வை. 76 வது வயதை முடித்துவிட்ட ஆர்.வி. இன்னமும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உற்சாகமாக இருப்பது உண்மை. கண் பார்வைக் கோளாறு மட்டுமே அவரைக் கொஞ்சம் பாதித்து வந்தது. கடந்த ஆண்டு அவருக்குக் கண் அறுவை சிகிச்சை நடந்து, தற்போது வெகு நேரம் உழைக்கக் கூடிய அளவிற்கும், வெகுநேரம் படிக்கக் கூடிய அளவிற்கும் பார்வையைத் திரும்பப் பெற்றுள்ளார். எனவே கண் பார்வை, வயது இவை இரண்டுமே அவருக்குத் தடையாய் இருக்க முடியாது; இருக்கக் கூடாது. மேலும் இந்திய ஜனாதிபதி என்றாலே கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போட வேண்டியவர்தானே! ஆண்டு அனுபவித்த பிறகு வயதான காலத்தில் சொகுசு வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காகவும் தரப்படும் பதவிதானே!

இ. காங்கிரஸ் மாநிலங்களில் மட்டுமின்றி இ. காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத எதிர்க்கட்சி மாநிலங்களிலும் நல்ல மரியாதையைப் பெற்றிருக்கிறார் ஆர்.வி.

எனவே, வரும் ஜூலை மாதம் பிரம்மாண்டமான ராஷ்டிரபதிபவனில் ஆர்.வி. குடியேறுவதற்கு வாய்ப்புகள் பிரகாசமாகவே உள்ளன.

பி.வி. நரசிம்மராவ் ஜனாதிபதியாய் வரக்கூடும் என்ற நினைப்பு, பிழைப்பைக் கெடுக்கக் கூடியது. காரணம் ஜனாதிபதி, துணை ஜனாதிபதி ஆகிய இருவரையும் தென்னிந்தியராக ஏற்று, தென்னிந்தியர்களை அவ்வளவு உயரத்தில் வைத்துப் பார்க்கும் மனப்பக்குவம் 'க்யா ஹாலே சாஹேப்'களுக்கு இன்னமும் வரவில்லை.

ஆர்.வி.யின் துணை ஜனாதிபதி பங்களா அமைந்துள்ள மௌலானா ஆசாத் ரோட்டிலிருந்து ஜனாதிபதி மாளிகைக்கு அவர் குடியேறியதும் திருமதி மோஷினா கித்வாயோ, எஸ்.பி. சவானோ துணை ஜனாதிபதியாகப் பதவியேற்கலாம். பேராசிரியர் நூருல் ஹஸன், முகமது யூனஸ் ஆகிய இருவரின் பெயர்களும் ஜனாதிபதி பதவிக்கு மட்டுமின்றி துணை ஜனாதிபதி பதவிக்கும் பேசப்படுகின்றன. அதில்லாவிட்டால் இது என்று. இரண்டில் ஒன்று. இருவரில் ஒருவருக்குக் கிடைத்தால் யோகம்தான்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள இராஜமடம் கிராமத்தில் பிறந்த ஆர்.வி.க்கு எப்படியும் இந்தியாவின் இராஜ இடம் கிடைத்திடும் வாய்ப்பு.....

இப்போதைக்கு நிச்சயமாய் இருக்கிறது.

— தில்லி ஜெயமகன்

ஆர்.வி. புகைப்படம்: சுபா


1986
1987
திரிபுரா
பஞ்சாப்
அஸ்ஸாம்
இலங்கை
கூர்க்கா
எப்படித் தான் புல்லாங்குழல் கச்சேரி செய்து சமாளிக்கப் போகிறேனோ?
இந்த ரௌடிங்களை ஒழிக்காமெ விடப் போறதில்லே!
கள்ளச் சாராயம்
கள்
சாராயம்



கல்கி

1987 ஜனவரி 4
மலர் 45 இதழ் 23
அக்ஷய மார்கழி 20



ஜனநாயகப் படுகொலை!

ஜனநாயகம் என்பது சட்டத்தின் ஆட்சி மட்டுமல்ல. சிறந்த மரபுகள் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்; புதிய நல்ல மரபுகள் உருவாக்கப்படவும் வேண்டும். இதைக் கருத்தில் கொள்ளாமல், 'எனக்குத்தான் மெஜாரிட்டி பலம் இருக்கிறதே என்னை யார் அசைக்க முடியும்?' என்ற நோக்கில், ஆளும் கட்சியும் தலைமையும் நடந்து கொண்டால், அது பாசிசத்தை விடக் கொடுமையான சர்வாதிகாரமாகிவிடும். தமிழக சட்டமன்றத்திலிருந்து, பத்து தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் வெளியேற்றப்பட்டிருப்பது, இத்தகைய ஓர் எதேச்சாதிகாரக் கொடுங்கோன்மைதான்; ஜனநாயக படுகொலைதான்.

ஆளும் கட்சி தன் இஷ்டத்துக்குத்தான் நடந்து கொள்ளும்; எதிர்க் கட்சியை லட்சியமே செய்யாது எனில், சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியினர் வந்து அமர அவசியமேயில்லை. பெரும்பான்மைக் கட்சியினர் மட்டும் வந்து கூடினால் போதும். ஆனால், நாடாளுமன்ற ஜனநாயகத்தை உருவாக்கியவர்கள் அப்படி எண்ணவில்லை. ஆளும் கட்சியே பெரும்பான்மை பலம் பெற்றிருந்தாலும் சிறுபான்மையினர் சார்பாகப் பேசும் எதிர்க் கட்சிகளுக்கு மதிப்பளித்து, அவர்கள் கருத்துக்களையும் கேட்டறிந்து, இயன்ற மட்டில் அவற்றை ஏற்கவும் முன் வர வேண்டும் என்றே கருதினர். அதனால்தான் சட்ட சபையில் எதிர்க் கட்சியினரும் இடம் பெறுகின்றனர்.

ஆனால், எம்.ஜி. ஆர். இந்த மரபுகளையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டார். சற்றும் யோசனையோ, தயக்கமோ இன்றிப் பத்து எதிர்க் கட்சி எம்.எல்.ஏ.க்களைச் சட்டசபையிலிருந்து வெளியேற்றும் தீர்மானம் கொண்டு வந்து, மிருக பல மெஜாரிட்டி உதவியுடன் நிறைவேற்றி வைத்தும் விட்டார். முன்னர் சபாநாயகர் பாண்டியன் ஏழு எம்.எல்.ஏ.க்களின் பதவிகளைப் பறித்தபோது, 'இது சபாநாயகரின் தனிப்பட்ட முடிவு; ஆளும் கட்சிக்கும் இதற்கும் சம்பந்தமில்லை' என்றுகூட எண்ணினோம். ஆனால் இப்போதோ, 'ஆளும் கட்சி வேறல்ல, சபாநாயகர் வேறல்ல' என்று நிரூபிப்பதே போல், முன்னர் சபாநாயகர் தீர்ப்புக்கு உள்ளான ஏழு பேரோடு, மேலும் மூவரைச் சேர்த்து, மொத்தம் பத்து எம்.எல்.ஏ.க்களை, ஆளும் கட்சி தனது அசுர பலப் பெரும்பான்மை உதவி கொண்டு வெளியேற்றிவிட்டது. பாண்டியனின் தீர்ப்புக்குத் தப்பித் தவறி, ஆளுனரின் அங்கீகாரம் கிடைக்காமல் போய்விட்டால், என்ன செய்வது என்று கவலைப்பட்டு விஷயத்தைச் சந்தேகத்துக்கிடமின்றித் தீர்த்து வைத்துவிட்டார் எம்.ஜி. ஆர்.!

உங்கள் இல்லத்துக்குள் நான் நுழைந்தால், உடனே என்னைத் 'திருடன்' என்று நீங்கள் குற்றம் சுமத்திவிட முடியாது. எனக்குத் திருட வேண்டும் என்ற நோக்கம் இருந்ததை நீங்கள் நிரூபித்தாக வேண்டும். அதேபோல் கருணாநிதிக்கும் மற்ற தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கும் அரசியல் சாசனத்தை அவமதிக்கும் எண்ணம் இருந்ததாக நிரூபணமாக வேண்டும். 'எங்களுக்கு அந்த நோக்கமே இல்லை' என்கிறார் கருணாநிதி. 'அரசியல் சாசன அவமதிப்புத்தான்' என்று வேறு பலர் கூறுகின்றனர். உண்மை எது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு, நீதிமன்றத்துக்கு விடப்பட்டுள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பு வெளிவரும்வரை காத்திருக்க விரும்பாத பத்திரிகைகள் பல, 'தி.மு.க.எம்.எல்.ஏ.க்கள் செய்தது தவறு' என்று தாமே தீர்ப்பு வழங்கியுள்ளன. இது முறையா என்பது ஒருபுறமிருக்க, இப்படி அவசரப்பட்டுத் தீர்ப்பு வழங்கியுள்ள தேசிய நாளிதழ்கள் கூட, அதற்காகச் சபாநாயகர் பாண்டியன் அளித்த தண்டனை மிக அதிகமானது, தேவையற்றது என்றே ஏகமனதாகக் கருத்துத் தெரிவித்துள்ளன. பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் இதே கருத்தைத்தான் எதிரொலித்துள்ளனர். அதேபோல், இப்போது அ.தி.மு.க., தனது அசுர பலப் பெரும்பான்மையைப் பயன்படுத்திப் பத்து எம்.எல்.ஏ.க்களைச் சட்டமன்றத்திலிருந்து வெளியேற்றியுள்ளதும் அனைவராலும் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. ஒருவர்கூட இதனைத் 'தவறுக்கு ஏற்ற தண்டனை' என்று ஒப்புக் கொள்ளவில்லை. நிதானத்துக்குப் பேர் போன 'ஹிந்து' பத்திரிகைகூட பிரெஞ்சுப் புரட்சியின்போது பயன்படுத்தப்பட்ட 'கில்லோடென்' என்ற தலைவெட்டி இயந்திரத்தின் படத்தைப் போட்டுப் பக்கத்தில் எம்.ஜி. ஆரை உட்கார்த்தி வைத்துள்ளது! தலைகள் உருளுவதைக் காட்டாதது ஒன்றுதான் குறை!

இந்தச் சூழலில் நியாயமாக எம்.ஜி. ஆர். அரசு, தனது செயலுக்கு வருந்தி, எம்.எல்.ஏ.க்களை வெளியேற்றி நிறைவேற்றிய தீர்மானத்தைச் சட்டசபையிலேயே மற்றொரு தீர்மானத்தின் மூலம் வாபஸ் பெறுவது உசிதமாக இருக்கும். ஆனால் அத்தகைய பெருந்தன்மையை இன்றைய ஆளும் கட்சியிடம் எதிர்பார்க்க முடியாது. ஆளும் கட்சியிடம் ஆணவம் மிகுந்து நியாயத்தை எதிர்பார்க்க முடியாமல் போகும்போது, ஜனநாயகத்தையும், மக்கள் நலனையும் நீதிமன்றங்கள்தான் காப்பாற்ற வேண்டும். காக்கும் என்று நம்புகிறோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்றத்
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மாதம் ஒரு மாவட்டம்



கல்கி ஏற்கும் சமுதாயப் பணி

சேலம்

மாவட்டத்திற்கு வருகிறோம்!

சேலத்து மாம்பழத்தின் சிறப்பு பற்றியும், திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் பற்றியும், எத்தனையோ சிறப்பு வாய்ந்த தேசத் தலைவர்கள் தங்கியிருந்து தேசத் தொண்டு புரிந்த புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்தின் சிறப்பு பற்றியும் நாம் யாருக்கும் புதிதாகச் சொல்லிப் புரிய வைக்கத் தேவையில்லை. ஆனால் மக்களின் பிரச்னைகளைச் சொல்லித்தான் ஆக வேண்டும். அவற்றுக்குத் தீர்வு காணப் போராடித்தான் ஆக வேண்டும். அதற்காகத்தான் கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியில், பன்னிரண்டாவது மாவட்டமாகச் சேலம் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

எனவே, சேலம் மாவட்டம் முழுவதிலுமுள்ள பிரச்னைகள் அல்லது அவரவர் ஊர்ப் பிரச்னைகள், இல்லையெனில் தனி மனிதர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் ஆகியவற்றோடு, அரசியல்வாதிகளுடைய — அமைச்சர்களுடைய — அதிகாரிகளுடைய மெத்தனப் போக்குகளையும், சமூக விரோதிகளின் அட்டகாசங்களையும் சுருக்கமாக எழுதி, உங்கள் முழுமையான முகவரியோடு கல்கி அலுவலகத்திற்கு அனுப்புங்கள். இவற்றோடு உங்கள் மாவட்ட வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும், உங்கள் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள சாதனைகளையும் சேர்த்தே எழுதலாம்.

கல்கி அலுவலகத்திற்கு வரும் உங்கள் ஒவ்வொருவருடைய கடிதமும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, அவற்றில் முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து, பிப்ரவரி மாத மத்தியில் நமது கல்கி பிரதிநிதிகள் சேலம் மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்வார்கள்; உங்களைச் சந்தித்துப் பேசுவார்கள். அவர்கள் வரும் தேதி பற்றிய முழு விவரங்களும் பின்னர் தனித் தனிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்படும்.

சுற்றுப் பயண முடிவில், கல்கி பிரதிநிதிகள், சேலம் மாவட்டக் கலெக்டரைச் சந்தித்துத் தாங்கள் சேகரித்த பிரச்னைகளுக்குரிய விஷயங்களைப் பற்றி விவாதித்துப் பதில்களைப் பெறுவார்கள். அவையெல்லாம் மார்ச் மாதக் கல்கி இதழ்களில் செய்திகளாகவும் பேட்டிக் கட்டுரைகளாகவும், புகைப் படங்களாகவும் பிரசுரமாகும்.

எல்லாவற்றையுமே பிரசுரித்துவிட முடியாது என்பது உண்மைதான் என்றாலும், நியாயமான பிரச்னைகள், அத்தனையும் கலெக்டரிடம் எடுத்துச் சொல்லப்படும். அதன் மூலம் அரசின் கவனத்தையும் அதிகாரிகளின் கவனத்தையும் திருப்ப முடியும் என்பதோடு, நிகழ் கால நிஜங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் மூலம் சகோதர மக்களிடையிலும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியுமல்லவா! உடனடியாக எழுதுங்கள்.

சேலம் மாவட்டம் பற்றிய பிரச்னைகளும், குறைகளும், அநீதிகளும், அக்கிரமங்களும் தவிர, சாதனைகளும் ஆலோசனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 20.1.87.

உறையின் மேல் 'மாதம் ஒரு மாவட்டம்—சேலம்' என்று அவசியம் குறிப்பிடுதல் வேண்டும்.

பி.கு: புதுக்கோட்டை மாவட்டம் பற்றிய பரபரப்பூட்டும்செய்திகளும்பேட்டிகளும் புகைப்படங்களும் ஜனவரி 18, 25 தேதியிட்ட கல்கி இதழ்களில் பிரசுரமாகும்.

சின்னச் சின்ன கனவுகள்

10

"உங்களுக்கு – ஆட்சேபனை – இல்லேன்னு – நான் – உங்களைக் – கல்யாணம் – பண்ணிக்கலாம்னு...."

பாண்டியனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் தனித்தனியே தன்னைச் சுற்றி நின்று துள்ளுவது போலிருந்தது இந்திராவுக்கு. திடீரென்று புரண்டு வந்த வெள்ளத்தில் சிக்கிக் கொண்டதுபோல் உணர்ந்தாள். அவள் என்ன பதில் சொல்கிறாள் என்று கேட்பதற்காகவோ என்னவோ தெருவோடு ஓடிக் கொண்டிருந்த நாய் ஒன்று நின்று, நிமிர்ந்து பார்த்தது.

என்ன பதில் சொல்வது?

ஒரு சைக்கிள் 'கிணுங் கிணுங்' என்று மணி அடித்து வழி கேட்டது.

"ஓரமா வந்துடுங்க...." பாண்டியன் சைக்கிளிலிருந்து அவளைக் காப்பாற்ற அணைத்து ஒதுக்கலாமா என்பதுபோல் யோசனையுடன் கையை நீட்டி — தயங்கினான். இந்திரா ஓரம் ஒதுங்கிக் கொண்டாள்.

என்ன பதில் சொல்வது? சரேலென்று எடுத்து வீசும் பதிலா இது?

நந்தகுமார் ஸ்கூலில் இந்நேரம் பொறுமையின்றித் தவித்துக் கொண்டிருப்பானே என்ற எண்ணம்தான் குறுக்கில் வந்து நின்றது.

"கேட்கக் கூடாததைக் கேட்டுட்டேனா?"

பாண்டியன் அவள் மனத்தைக் காயப்படுத்திவிட்டோமோ என்ற அச்சத்தோடு கேட்டான்.

இந்திரா பதில் சொல்ல முடியாமல் தவித்தாள். எனக்கு மட்டும் என்று ஏன் எல்லோரும் கூரிய அம்புகளை எடுத்துக் கொள்கிறார்கள்? முதலில் முதலாளி! இப்போது பாண்டியன்! ஆனால் அடிமனத்தில் முதலாளியின் மீது எழுந்த அதே கோபம் பாண்டியன் மீது கிளர்ந்தெழவில்லை என்ற உண்மை உறைத்தது. அவள் மனத்தின் மிருதுவான பகுதியை எல்லாமாகச் சேர்ந்து குழப்ப, அகன்ற கண்களில் மெல்ல நீர் திரண்டது.

"என்கிட்டே என்ன வேணா பேசலாம்னுதானே இப்படி ஒரு கேள்வியைக் கேட்டீங்க?" வார்த்தைகள் விழுமுன் கண்ணீர் கன்னத்தில் உருண்டு விழுந்தது.

"இல்லேங்க. நிச்சயமா இல்லேங்க...." பாண்டியன் அவசரமாகக் கழுத்திலிருந்து கைக்குட்டையை உருவி வியர்த்துப் போன முகத்தைத் துடைத்துக் கொண்டான். "நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக் கேட்பீங்களா?" இந்திராவை எப்படியும் சமாதானப்படுத்திவிட வேண்டும் என்ற அவசரம் குரலில் இருந்தது.

"யோசிக்காம தடால்னு கேட்டுடலே நான். உங்களைப் பத்தி நெறைய தெரிஞ்சுக்கிட்டதால்தான் அப்படி ஒரு....."

"என்ன பெரிசாத் தெரிஞ்சிடுச்சு உங்களுக்கு?"

"கோபமாப் பேசறீங்க. உங்க வீட்டுக்காரர் இறந்து போனது ஒரு விபத்தில. அந்த ஆக்ஸிடெண்ட் அவரை மட்டும் அழிச்சுடலே, உங்க சந்தோஷத்தையும், எதிர்காலத்தையும் சேர்த்து அழிச்சிடுச்சுன்னு நீங்க நெனைக்கறீங்க. நியாயம் தான். போக வேறே எடமில்லாம அண்ணன் வீட்டுக்கே வந்துட்டீங்க. ஜெயபாலுக்கு வெளியில் கோபம் இருந்தாலும், 'தங்கச்சியையும், அவள் பையனையும் இன்னும் ஒரு வாரத்தில வெளியே துரத்திடணும்'னு பெண்டாட்டி சொன்னது கவலையா இருக்குடா'ன்னு என்கிட்டே சொன்னான். வேலைக்குச் சேர்த்துவிட்டேன். அதையும் விட்டுட்டு மறுபடியும் அவங்ககிட்டேயே போய் நிக்கறீங்க."

"எனக்கு உடம்பு முடியலே. வேலைக்குப் போகலே. அது தப்பா?" முதலாளி பற்றி இவனிடம் சொல்வதால் இவனுக்குக் கோபம் வந்து சண்டைக்குப் போய் இவன் வேலையே பறி போய்விடப் போகிறதே என்ற பயம் வேறு உண்மைக்கு வேலி போட்டது.

"வேலைக்குப் போகாதது தப்பில்லேங்க. ஆனா வீட்ல பாரமா இருக்கோம்கற குற்ற உணர்ச்சி உங்களுக்கு.... அதைச் சமயோசிதமா உங்க அண்ணனும் அண்ணியும் அப்பப்ப ஊதி விடறாங்க. என் எதிர்க்கவே திட்டு வாங்கறீங்க. விடிஞ்சதிலேர்ந்து வேலை வேலைன்னு உடம்பைத் தேய்ச்சுக்கறீங்க. நந்துவுக்கு

இன்னும் நல்ல படிப்பு கொடுக்க முடியலேன்னு ஏங்கறீங்க. ஆயுசுக்கும் இப்படியே இருக்கப் போறீங்களா?''

''என் விதி அப்படி இருந்தால் என்ன செய்ய முடியும்?''

''நீங்க விதிங்கறீங்க. எனக்கு என்ன தோணுது தெரியுமா? ஓர் அழகான புறாவைக் கொண்டு போய்க் கூண்டில் அடைச்சு வெச்சிருக்கிற மாதிரி தோணுது. வெளியே ஒண்ணும் சொல்ல முடியாமல் அந்தப் புறா 'பக்கும்' 'பக்கூம்'னு முனகற சத்தம் எனக்குக் கேக்குது.''



''அதுக்காக நீங்க சிபிச் சக்கரவர்த்தியா ஆயிட்டீங்களா?'' நாக்கு 'அவனை மறுத்துப் பேசு' என்று ஆணையிட்டாலும், உள் மனத்தில் அவனுடைய நேர்மை தைத்தது.

''நான் இன்னும் அவ்வளவு தூரத்துக்குப் போகலீங்க. வெளியே வர வழியே கெடையாதுன்னு புறா நெனைக்க வேண்டாம்னு கூண்டோடக் கதவை மட்டும் தெறந்து விட்டிருக்கேன். வெளியே வந்து பறக்கறதும், பறக்காம உள்ளேயே பதுங்கறதும் உங்க பிரியம்....''

இந்திராவின் அழுகை நின்று போயிருந்தது. புருவங்கள் முடிச்சிட்டு, முடிச்சிட்டு விலகின.

''நந்து என்னை இந்நேரம் தேடிட்டிருப்பான்'' என்றுள், விலகி நடக்கத் துவங்கி.

''நீங்க உடனே பதில் சொல்லணும்னு அவசியமில்லே. யோசிச்சே சொல்லுங்க''

கைக்குட்டையை மறுபடியும் கழுத்துப் பட்டையாகச் செருகிக் கொண்டு, தெருவோரம் நிறுத்தியிருந்த சைக்கிளை ஸ்டாண்டிலிருந்து விடுவித்தான் பாண்டியன்.



இந்திரா வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

நந்தகுமார் மைதானத்தின் வாசலைப் பரபரப்பாகப் பார்த்தான். நூறாவது முறையாக ஏமாந்தான். அம்மா ஏன் இன்னும் வரவில்லை?

மைதானத்தின் நுழைவாயிலில் தோரணம் கட்டியிருந்தது. வர்ண முக்கோணக் காகிதங்கள் சணல் கயிறுகளில் வௌவால்களாகப் படபடத்தன. அவசரத் தங்க எழுத்துக்கள் 'மாவட்ட ஆட்சியாளர் அவர்களே வருக வருக' என்று சாயந்திர சூரியனைப் பிரதிபலித்து வரவேற்றன. உள்ளூர் நாதஸ்வரம் சுருதி கிடைக்காமல் தேடிக் கொண்டிருந்தது. ஒலி பெருக்கிகளில் டி.எம். சௌந்திரராஜன் ஜலதோஷத் தொண்டையோடு தேய்ந்த பாடலைக் கதறிக் கொண்டிருந்தார்.

மேடையில் நாற்காலிகள் திரும்பத் திரும்ப ஒழுங்கு படுத்தப் பட்டன. மேஜை விரிப்பில் சமீபத்திய இஸ்திரி. பூஜாடி. செருகி வைக்கப்பட்ட சிகப்பு மலர்கள். கண்ணாடி டம்ளர்களில், பிளாஸ்டிக் தட்டு மூடிய தண்ணீர்.

எச்.எம். மேடையேறினார். ஒரு சிட்டிகை எடுத்து மூக்கில் உறிஞ்சினார். மைக்கைப்பிடித்து அதன் சிறு கட்டங்கள் வலை பின்னிய கொண்டையை நிமிர்த்தினார்.

"ஹலோ... மைக் டெஸ்டிங். ஒன், டூ, த்ரீ..." என்றார்.

"அதுக்கு மேல் அவருக்குத் தெரியாதுடா..." என்று ஒரு பையன் கிண்டலடிக்க எல்லோரும் ரகசியமாகச் சிரித்த போது, நந்தகுமார் அந்தச் சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை.

'அம்மா சீக்கிரம் வாயேன்.'

வாசலில் சர்ரென்று ஜீப் வந்து தேய்ந்து நின்றது.

மார்பின் குறுக்கே சிவப்புப் பட்டி வைத்த ஊழியர் ஜீப்பிலிருந்து முதலில் இறங்கி ஜரூர் செய்ய, கலெக்டர் இறங்கினார். சின்னப் பையன் போல் இருந்தார். விளிம்

பில்லாத கண்ணாடி வழியே பார்வையை அலைய விட்டார். கட்டம்போட்ட சட்டையை பாண்ட்டுக்குள் விட்டிருந்தார். சிரித்தார். கூடியிருந்தவர்களுக்குக் கையசைத்தார்.

அதற்குள் ஒரு கூட்டம் சேர்ந்து கொண்டது.

"அய்யா எங்க தெருவில் ரெண்டு மாசமா பொட்டுத் தண்ணி வரலே, அடி குழாய் ரிப்பேராகிப் போனப்புறம், யாரும் கவனிக்கலே...." என்று ஏராள கையொப்பங்கள் இட்ட மனுக்களோடு துரத்தினார்கள் ஜனங்கள்.

சிரிப்பு கலையாமல் எல்லாவற்றையும் வாங்கி வாங்கி கலெக்டர் தன் பி.ஏ.விடம் நீட்டினார். எச்.எம். பதறிமற்றவர்களை விலக்கி வழி பண்ணிக் கொடுக்க, மேடையை நோக்கி நடந்தார்.

கூட்டத்திலிருந்து ஒதுங்கியிருந்த இரண்டு பேர் மட்டும் கலெக்டரை ஆத்திரம் மாறாமல் பார்த்தார்கள். சாராயப் பெருமூச்சுகளை விட்டார்கள். காத்திருந்தார்கள்.

நந்தகுமார் மறுபடியும் வாசலைப் பார்த்தான். 'அம்மா, அம்மா' என்று துடிப்பாகத் தொண்டைக்குள் ஜபித்தான். தோளில் கை விழ, திரும்பினான். எச்.எம்!

"மேடைக்கு வாடா.... நீதான் வரவேற்புரை பேசணும்..."

"சார் ஒரு நிமிஷம் சார். எங்க அம்மா வந்துடட்டும் சார்" என்று பதறப் பதற மேடைக்குத் தள்ளிப் போகப்பட்டான்.

'நீராரும் கடலுடுத்த....' என்று தமிழ்த் தாய் வாழ்த்து ஆரம்பித்து, எல்லோரும் எழுந்து நின்றபோதுகூட அம்மாவைக் காணோம். அடி நாக்கில் அழுகை தயாராக, கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

'உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து' வாழ்த்தும் வரியில் பாண்டியன் வாசலில் தென்பட்டான். சைக்கிளை நிறுத்தி விட்டு, கூட்டத்தின் விளிம்பில் நின்று கொண்டான்.

'இந்தச் சுருட்டை முடிக்காரர்கூட நான் ப்ரைஸ் வாங்கறதைப் பார்க்க வந்தாச்சு. அம்மாவை இன்னும் காணோமே....'

"இப்போது வரவேற்புரை. B. நந்தகுமார்."

அறிவிப்பு என்பதைவிட எச்சரிக்கை போல் இருந்தது எச்.எம்.மின் குரல். வேறு வழியில்லாமல் மைக்கின் அருகே போய் நின்றான். கடைசி கடைசியாய் வாசலைப் பார்த்து ஏமாந்தான். நழுவும் டிராயரை ஒற்றைக் கையால் ஏற்றிக் கொண்டான்.

"மாதம் மூன்று முறை மழை பொழிய வேண்டும் என்ற கடமையிலிருந்து இயற்கையே தவறிப் போகலாம். ஆனால் உங்கள் கடைமைகளிலிருந்து என்றும் தவறாத மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியாளர் அவர்களே...." என்று ஆரம்பித்தபோது, ஒத்திகைப்படி மாணவர்களின் கைதட்டல்கள் உற்சாகமாகக் கிளம்பின.

"இந்தச் செவிட்டுக் கலெக்டரா கடமை தவறாதவன்?" கொதிப்பாய் இருந்த அந்த இரண்டு பேரில் ஒருவன் பற்களை நறநறத்தான். இப்போது தள்ளாடல் அதிகமாகிப் போக, மணலில் அமர்ந்து கொண்டு கண்களை ஓட்டி அந்த அரைச் செங்கல்லைத் தேர்வு செய்தான்.

"டேய், அதை எடுரா...."

அடுத்தவன் கல்லை எடுத்து மடியில் ரகசியப்படுத்தினான். "மேல் குப்பத்துப் பசங்களோட சமாதானமாப் போகணும்னு போலீஸோடு வந்து மிரட்டினவன்தானே இவன்? என் ரத்தம் கொதிக்குதடா வடிவேலு. மூஞ்சைப் பாரு, முட்டைக் கண்ணாடியும், மொளகா மூக்குமா...." பீடியைப் பற்ற வைத்தான்.

"எங்களை இந்த அளவுக்குக் கௌரவிப்பதை எண்ணி நாங்கள் மிகவும் கர்வப்படுகிறோம்..." நந்தகுமார் பேச்சின் முடிவில் இருந்தான். கண்கள் வாசலுக்கே குறி வைத்திருக்க, போலீஸ்காரர்கள்தான் தென்பட்டார்கள். சோம்பலாக லத்தியால் பூட்ஸ்களில் தட்டிக்கொண்டிருக்க, அவன் 'அம்மா' இன்னும் வரவில்லை.

எச்.எம். வாயைப் பொத்திக் கொண்டு, கலெக்டரின் பின்னால் போய்க் குனிந்து காதருகில், "மொதல்ல பிரைஸ்லாம் குடுத்துடலாங்களா?" என்றார். கலெக்டர் கையிலிருந்த ரோஜாவை முகர்ந்து புன்சிரிப்பால் ஆமோதித்தார்.

எச்.எம். மேடையோரம் இருந்த இன்னொரு மைக்கைப் பற்றிக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"டேய் வடிவேலு, மாமன் குறி எப்படின்னு இன்னிக்குப் பாரு. கலெக்டர் மண்டை டணால்னு ரெண்டாப் போவப் போவுது, பார்...." இங்கே இவர்கள் தயாரானார்கள்.

"பேச்சுப் போட்டி. முதல் பரிசு B. நந்தகுமார்..." என்றார் எச்.எம்.

நந்தகுமார் கீழே அமரப் போனவன், அப்படியே எழுந்து மேடைக்கு வேகமாகப் போனான். கலெக்டர் மாறாத புன்னகையுடன் கையில் பரிசுப் பொருளுடன் காத்திருக்க, வாசலைப் பார்த்தான். சந்தோஷம் மின்னல்களாய் உடம்பில் ஓடிற்று. டிராயரை இழுத்துவிட்டுக் கொண்டான்.


அம்மாதானே அது? அம்மாவேதான். அம்மா, பார், நான் கலெக்டர் கையால் பரிசு வாங்குகிறேன் பார்.

நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு, இன்னும் ஓர் அடி நெருக்கமாக எடுத்து வைக்க —

ஃப்ளாஷ்!

அதே நேரம் அந்தக் கல் பறந்து வந்தது. தன் இலக்கில் திடீரென்று குறுக்கிட்ட நந்தகுமாரின் நெற்றியை ஆக்ரோஷமாகத் தாக்கியது. உடன், அவன் நெற்றியில் சிவப்பு பீறிட, ஆயிரம் நட்சத்திரங்கள் மின்ன, "அம்மா!" என்று அத்தனை ஒலிபெருக்கிகளிலும் அவன் குரல் உச்சமாய் அலறியது.

(தொடரும்)



பதில் தெரிஞ்சா

''என்னைப் பத்தி முழுக்க நான் சொல்லிடறேன். உங்களுக்குத் திருப்திப்பட்டா பெண்ணை வரச் சொன்னாப் போதும்!''

பனிச்சென்று பட்டுக் கத்தரித்த மாதிரி அந்த வெங்கடேசன் பேசியது ராஜாவுக்குப் பிடித்தது.

எண்ணெய் பிசுக்குப் படிந்த அடுக்களைச் சுவரின் பின்னால் பாதி தன்னை மறைத்துக் கொண்டு அம்மா நின்றாள்.

''சொல்லுங்கோ!''

''ஓர் ஆட்டோமோபைல் வொர்க் ஷாப்பில் நான் சாதாரண மெக்கானிக். ஏகப்பட்ட வண்டிகளைப் பழுது பார்க்கிற கடுமையான உழைப்பு. என்னோட உதயமே பெரும்பாலும் பட்டறையில்தான். ராத்திரி பத்தாகும் வீடு திரும்ப. மாசம் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பேன். கடன் எதுவும் இல்லை. சொத்துக்களும் அதே இல்லைதான்'' நீளமாகப் பேசி நிறுத்தியவன், சற்று இடைவெளி விட்டான்.



"என்னோட இருக்கிறது ஒரே அம்மா. அறுபத்தஞ்சு வயசான அவளோட பிதுரார்ஜித சொத்துக்கள், குளிர் காலத்துல ஆஸ்துமா, வெயில் காலத்தில் மூட்டுப் பிடிப்பு. என் படிப்பு எட்டாவது ஃபெயில். ஆனா வரப் போற பொண்ணைக் கண்ணுல மண்ணு படாம காப்பாத்த முடியும். வேறென்ன?"

ராஜா பேச நினைத்து, தொண்டை மேடு ஊஞ்சலாடி நிற்க,

''எதையும் எதிர்பார்க்கமாட்டேன். கட்டின புடைவையோட கோயில்ல வைச்சுத் தாலி கட்ட ரெடி!''

'பார்வையில் எண்ணங்களைப் படித்துவிடும் ராட்சஸன்!' ராஜாவுக்கு சந்தோஷமாக இருந்தது.

''இருங்கோ, வர்றேன்.''

எழுந்து உள்ளே வந்தான்.

விஜி நிமிர்ந்து பார்த்தாள்.

''பேசினது காதுல விழுந்ததா?''

''ம்!''

''ஒப்புக்கலாமா?''

''உன் அபிப்ராயம் என்னண்ணா?''

''இவனைவிட ஒரு நல்ல புருஷன் இந்தப் பூமியில உனக்குக்கிடைப்பான்னுதோணலை. கடுமையான உழைப்பாளி. ஒளிச்சு வைச்சுப் பேசத் தெரியாத தெளிவு. என்ன நினைப்போம்னு யூகிச்சு, பட்டுனு பதில் சொல்ற தொலை தூரப் பார்வை. நான் நீயா இருந்தா இப்பவே கட்டுடா தாலியைன்னு சொல்லிட்டுக்கையைப்பிடிச்சுடுவேன், கெட்டியா!''

''ஆனா.... விஜி எஸ்ஸெல்ஸி படிச்சிருக்காளேடா!'' — இது அம்மா.

''இருந்தா என்ன? சம்பாதிக்கிறது அவன் தானே. இவளோட ஊத்த எஸ்ஸெல்ஸிக்கு எவன் வேலை குடுத்தான்?''

''அப்ப சரி!''

''என்ன விஜி, உனக்கு இஷ்டம்தானா?''

''என் நல்லது, கெட்டது ஒனக்குத் தெரியாதாண்ணா? உன் இஷ்டம்.

வெளியே வந்தான். மெல்ல வெங்கடேசனை நெருங்கி, தோளில் கை சரித்துத் தன்னோடு அணைத்துக் கொண்டான். ''கன்கிராட்ஸ் மாப்ளே!'' என்றான்.

...ங்க...

தேவிபாலா

''அது இப்ப வேணும். நடக்கட்டும்!''

''தீர்மானம் பண்ணியாச்சே!''

''இருக்கட்டும். அத்தாட்சி கழுத்துக்கு வரட்டும். அதிக சந்தோஷம்கூட சில சமயம் சங்கடம்தான்!''

''விஜி ஸ்கூல் முடிச்சு, ஸ்டெனோகிராபியும் பாஸாயிருக்கா. நிறைய அப்ளிகேஷன் போட்டிருக்கா. கல்யாணத்துக்குப் பின்னால் வேலை கிடைச்சா போகலாமா?''

''அவசியம்னு எனக்குப்படலை! என்னோட ஆயிரத்துல ஆகா... ஆகா....னு குடித்தனம் பண்ணலாம். வட்டம் போட்டுக்கிட்டு வாழப் பழகினோம்னா சந்தோஷம் நிலைக்கும். வசதிகள் அதிகப்படியானா போதையோனு படுது. இன்னும்.... இன்னுங்கற ஏக்கம் முடியறதேயில்லை. கல்யாணம் முடியட்டும். அதைப் பத்தித் தீர்மானிக்கலாம்.''

''உங்கம்மாவைக் கலந்துட்டு, நிச்சயதார்த்த விஷயமா தேதி குறிச்சு எழுதுவீங்களா?''

''அதையும் நீங்களே தீர்மானிக்கலாமே. எனக்கு ஆட்சேபணையில்லை!''

சூடான காப்பியை வாய்க்குள் சரித்துக் கொண்டு, விஜியை ஒருமுறை பார்த்து, மெலிதான சிரிப்பின் மூலம் சம்மதத்தைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

வெங்கடேசன் தெருமுனையைத் தாண்டும் வரை வாசலில் இருந்த ராஜா, உள்ளே வந்ததும்,

''சார் ரிஜிஸ்தர் போஸ்ட்!''

''எனக்கா?''

''இல்லீங்க, தங்கச்சிக்கு!''

விஜி வந்து கையெழுத்திட்டு அதைப் பெற்றுக் கொண்டாள். படபடப்பில் தாறுமாறாகக் கவரைக் கிழித்து, ஒட்டியிருந்த லெட்டர் பகுதியும் பிய்த்துக் கொண்டு வர, அவசரமாகப்பிரித்தவள், வேகமாகவிழிகளை ஓடவிட்டு,

பூமியிலிருந்து ஓரடி எழும்பி நின்றாள்.

''அண்ணா, வேலைக்கான ஆர்டர்!''

ராஜா சட்டென அதைப் பறித்தான்.

அந்தப்பிரபலதனியார் மருத்துவமனையில் ஆபீஸ் பகுதியில் ஸ்டெனோ செகரெட்டரி உத்யோகம்.

''ஆயிரத்து நூறு ரூபாய் சம்பளம்!''

''அசுர ஜாதகம்டீ அந்த வெங்கடேசனுக்கு. கால் வச்ச ராசி, வேலைக்கான உத்தரவையும் கொண்டு வந்துட்டானே!''

அதற்குள், அம்மா, அதை அக்கம்பக்கமெல்லாம் சடுதியில் ஒலிபரப்புச் செய்ய, விஜி ஸ்லோ மோஷனில் மிதந்தாள்.

அண்ணா, எங்கிட்ட டிரெஸ் சரியா இல்லை. அது ரொம்ப டீஸண்ட்டான ஹாஸ்பிடல்! புடைவை எடுக்கணும்!''

''வாங்கிரலாம் விஜி. வெங்கடேசன் எந்த டிமாண்டும் பண்ணலை. ஆனா நீ வேலைக்குப் போக அவன் சம்மதிப்பானான்னு தெரியலை. அதுல அவனுக்கு அவ்ளோ இஷ்டம் இருக்கிறதாத் தெரியலை!''

விஜி பதில் எதுவும் பேசாமல் உள்ளே போய்விட்டாள்.

வெங்கடேசனைப் பார்க்கப் புறப்பட்டான்



அருள்வாக்கு



நாம் இப்போது நான்கு விதங்களில் பாபம் செய்கிறோம். உடம்பால் பல கெட்ட காரியம்; வாயால் புரளிப் பேச்சும் அசத்தியமும்; மனத்தினால் கெட்ட நினைவுகள்; பணத்தினால் செய்கிற பாவத்தைச் சொல்லவே வேண்டாம்.

எந்த நான்கால் பாவம் செய்தோமோ, அந்த நான்காலுமே புண்ணியம் செய்யப் பழக வேண்டும்.

உடம்பைப் பரோபகாரம், பகவானைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரிப்பது இவற்றில் ஈடுபடுத்திப் புண்ணியம் செய்ய வேண்டும்.

வாயால் பகவந்நாமாவைச் சொல்லிப் புண்ணியம் செய்ய வேண்டும். 'சம்பாதிப்பதிலேயே பொழுதெல்லாம் போய் விடுகிறது. இதற்கு அவகாசம் இல்லையே' என்பீர்கள். சம்பாதிப்பது கிருகஸ்தர்களுக்கு அவசியம்தான். ஆனால் யோசித்துப் பார்த்தால் அதற்கே பொழுது முழுதும் போய்விடவில்லை என்று தெரியும். வீண் பேச்சு, பரிகாசம், வேடிக்கை பார்ப்பது, நியூஸ் பேப்பர் விமரிசனம் இவற்றில் எவ்வளவு பொழுது வீணாகிறது? அதையெல்லாம் பகவந் நாமா ஸ்மரணையில் செலவிடலாமே! இதற்கென்று தனியே பொழுது ஏற்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும் பரவாயில்லை. காரியாலயத்துக்கு பஸ்ஸிலோ, ரயிலிலோ போகும்போது பகவந் நாமாவை ஜபித்துக் கொண்டே போகலாமே! ஓடி ஓடிச் சம்பாதிப்பதில் ஒரு பைசாக்கூடப் பிற்பாடு உடன் வராதே. மறு உலகத்தில் செலாவணி பகவந் நாமா ஒன்றுதானே?

மனசு பகவானின் இடம். அதைக் குப்பைத் தொட்டியாக்கியிருக்கிறோம். அதைச் சுத்தப்படுத்தி மெழுகி பகவானை அமர வைத்து நாமும் அமைதியாக அமர்ந்துவிட வேண்டும். தினமும் ஐந்து நிமிஷங்களாவது இப்படி தியானம் செய்ய வேண்டும். லோகமே முழுகிப் போனாலும் நிற்காமல் நடக்க வேண்டிய காரியம் இது. ஏனெனில் லோகம் முழுகும் போதும் நமக்குக் கைகொடுப்பது இதுதான்.

பணத்தைக் கொண்டு பகவானுக்காகவும் ஏழைகளுக்காகவும் பல விதங்களில் தர்மம் செய்து புண்ணியம் சேர்க்க வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

ராஜா.

விஜி வேலைக்குப் போகத் தொடங்கி ஒரு மாதத்துக்கு மேல் ஆகிவிட்டது.

எந்தப் பிடித்தமும் இல்லாமல், முதல் மாதமே முன்னாங்கிப் பத்தையாய்ச் சம்பளத்தை எடுத்து வந்து அம்மாவிடம் தந்தாள்.

"அம்மா, வர்ற வெள்ளிக்கிழமை நாள் நல்லாயிருக்கு! நிச்சயத்தை முடிச்சுட்டா, அடுத்த மாசமே சத்திரம் பாத்துடலாம்!" — ராஜா.

"இவள் வேலை விஷயமா அந்தப் பிள்ளை என்ன சொன்னான்?"

"ரொம்ப கண்ணியம்மா அவன். இப்ப எதுவும் சொல்ல எனக்கு உரிமை இல்லை. என் மனைவியான பின்னால் சொல்லிக்கறேன்னு சொன்னான்!"

"ஆனால்தானே!"

"விஜி என்ன சொல்றே நீ?"

"அண்ணா கோச்சுக்காதே. நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக் கேள்! இப்ப என் நிலைமையே வேறே. அப்ப நான் வேலையில்லாதவளா இருந்தேன். இப்ப நல்ல உத்யோகத்துல, நல்ல சம்பளம் வாங்கறேன். என் அந்தஸ்துக்குத் தகுந்த மாதிரி...."

"ஓஹோ, வெங்கடேசன் பத்தலையா?"

"நிஜத்தைப் பேசித்தானே ஆகணும்? எட்டாவது கூட பாஸ் பண்ணாத அவர் நாளைக்கு என் புருஷனாகி, என்னோட வெளியே வரும்போது, என் சிநேகிதர்களுக்கு நடுவில் என் தலை குனியாதா?"

"இந்தத் தலை அப்பக் குனியலையோ?"

"புரிஞ்சுக்காமல் பேசறே நீ!"

"உன் தகுதிக்கு என்னை அண்ணான்னு சொல்லிக்கலாமா? வீட்டில் வேட்டி, பனியனோட நான் நிற்கலாமோ?"

"இண்டல் போதும்! கல்யாணம் வாழ்க்கை. ஏன் என்னை வற்புறுத்திப் பேசறே? என் விருப்பத்துக்கு விடேன்!"

"இதோ பாரு விஜி, 'உன் இஷ்டம்னு' என்னை நேத்திக்கு நம்பின நீ, வேலை கிடைச்ச உடனே உன் விருப்பத்துக்கு விடச் சொல்றே. நேத்திக்குச் சரியா இருந்த ஒரு மெக்கானிக் இந்த நிமிஷம் தாழ்ந்துவிட்டான். ஒரே மாசத்துல வந்த அற்புதமான வளர்ச்சி. என் பாராட்டுக்கள்!"

"அண்ணா, நான்...."

"இரு. நான் பேசி முடிச்சுர்றேன். இனிமேல் உன் விஷயத்தில் நான் தலையிடப் போறதில்லை. உனக்காக நான் மாப்பிள்ளை பாக்கவும்போறதில்லை. என் அளவில் வெங்கடேசன்தான் மாப்பிள்ளை. ஆளை விடு!"

"நீ பேசும்போது நானும் பேசித்தான் ஆகணும். நான் ஒருத்தரைத் தேர்ந்தெடுத்தாச்சு! அவரும் சீர்திருத்தவாதிதான். கட்டின புடைவையோட இந்த வெங்கடேசன் வரச் சொன்னா, அந்தப் புடைவையைக் கூட அவரே வாங்கித் தந்து கட்டிட்டு வரச் சொல்லுவார். மாசம் மூவாயிரம் சம்பளம், படிப்பு எம்.பி.ஏ. சொந்தமா வீடு, பேங்க்

'தேன்' பண்ணை!

சோவியத் ரஷ்யாவின் ஆல்மா அட்டாவில் தேன்களைப் பாதுகாப்பதற்காக, தனிப் பண்ணை ஒன்று உள்ளது. இதில் 16000 க்கும் அதிகமான தேன்களைப் பாதுகாப்பாக, தனித்தனிப் பெட்டிகளில் அடைத்து வளர்க்கின்றனர். ஒரு கிராம் தேள் நஞ்சின் விலை மூன்று லட்ச ரூபாய்....!!

நன்றி: ஸ்புட்னிக்

தகவல்: ராஜேஸ்வரி

பேலன்ஸ்....''

அம்மா வாயைப் பிளந்தாள்.

''சரின்னு சொல்லுடா ராஜா. நமக்கென்ன, அவன்தான் சாகவதமா? விஜி சந்தோஷமா இருந்தால் பத்தாதா. வரச் சொல்லுடா அந்தப் பிள்ளையை!''

''சரி, வசதி போல் செய்!''

வெறுப்புடன் ராஜா நகர்ந்தபோது, கண் முன்னால் வந்து சிரித்தான் வெங்கடேசன்.

'ஐ ம் ஸாரி வெங்கடேசன், உன்னைப் புறக்கணிக்கிற இந்தப் பாவத்துக்குத் தெய்வம் எங்களைத் தண்டிக்கட்டும்!'

நேரில் போய் ஒரு வார்த்தை சொன்னால் என்னவென்று தோன்றியது.

புறப்பட்டான்.

''நீங்க ஏன் அழறீங்க?''

''இப்படியொருத்திக்குக் கூடப் பிறந்தோமேன்னு!''

''தப்புங்க! வற்புறுத்திப் பெண்ணைக் கட்டி வைக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்'னு பாரதியார் சொன்னது தெரியலையா? அவங்க விருப்பம் அதுனா, அதுல தப்பென்ன? ஏற்றத் தாழ்வுகளுக்கு நடுவில் தாலிக் கயிறு தொங்கினால் ஆபத்துங்க.''

''என்னை மன்னிச்சேன்னு சொல்லுங்க வெங்கடேசன்.''

''ஒரு வகைல நமக்கும் இது பாடம்ங்க. பெண்ணை மறுக்கிற ஆண் வர்க்கத்துக்கு அந்த வலி புரிய வேண்டாமா? ஆனால் பாடம் சொல்ல ஆண்டவன் தேர்ந்தெடுத்தது என்னை எதுக்காகன்னு புரியலே! சரி விடுங்க, காப்பியா டீயா?''

''எதுவும் வேணாம் வரட்டுமா?''

''செய்யுங்க.''

வீட்டுக்கு வந்ததும் அம்மாவின் முகம் அறுந்து தொங்கியது. விஜியின் விசும்பல் சப்தம் கேட்டது.

''ஏன் விஜி அழறே?''

''அதான் எனக்கும் தெரியலேடா ராஜா. வந்த முதல் நானும் கேட்டுக் கேட்டுத் தோத்துட்டேன். சொல்ல மாட்டேங்கறா.''

''விஜி என்ன விஷயம்? மணி இப்ப ரெண்டு. மூணு மணிக்கு அந்தத் தீபக் வரப் போறாரே. இப்படியா அழுது வடியப் போறே?''

''அவன் வர மாட்டான்!''

''ஏன் விஜி?''

''உலகத்துக்குத்தான் அவன் பேச்சிலர். அவன் செட்டப் பண்ணி வச்சிருக்கிற ஒரு பொண்ணு ஆபீஸ் தேடியே இன்னிக்கு காலைல வந்து, நாத்தமா நாறி.... '' சொல்ல முடியாமல் விஜி அழத் தொடங்க,

''ஓஹோ, எல்லாமே சொந்தமா இருக்குன்னு சொன்னே... இதையும் அவன் விட்டு வைக்கலையாக்கும்!''

''அண்ணா என்னைக் கொல்லாதே.''

''இருந்துட்டுப்போகட்டும் விஜி. எம்.பி.ஏ. மூவாயிரம் சம்பளம், நீ தலை குனியாம சொஸைட்டில நடக்கலாமே, உன் ஸ்நேகிதிகள் நடுவுல. இது தனி ட்ராக்தானே, ஒட்டிட்டுப் போகட்டுமே, நஷ்டமா நமக்கு?''

''இப்படிப்பேசறதைவிட என்னைக்கொன்னுடலாம் அண்ணா.''

''உன்னைக் கொல்ல முடியுமா விஜி? நீ மத்தவங்களைக் கொன்னுதானே பழக்கம்?''

''அண்ணா, இதோட நிறுத்து! இப்பவே அந்த வெங்கடேசன் வீட்டுக்கு என்னைக் கூட்டிட்டுப் போ. அவர் கால்ல விழுந்தாவது மன்னிப்புக் கேட்கறேன். அவரையே முழு மனசோட நான் கட்டிக்கிறேன்.''

''ராஜா ஸார் நான் வரலாமா?''

ராஜா திரும்ப, வாசலில் வெங்கடேசன்.

''வாங்க, உங்களைத் தேடி நாங்களே வர இருந்தோம்!''

''பையை மறந்து விட்டுட்டீங்க. தர வந்தேன்!''

''மறந்தது பையை மட்டுமில்லே!''

''புரியலே.''

சொன்னான். முழுவதும் சொன்னான்.

அமைதியாக நின்றான் வெங்கடேசன்.

''பதில் சொல்ல வேண்டியது நீங்கதான் வெங்கடேசன்.''


''என்ன சொல்லணும்?''

''இப்படிக் கேட்டா?''

''நான் ஆட்டோமோபைல் ஷாப்ல மெக்கானிக். டயர் பழுதுபடும்போது ஸ்டெப்னி பார்த்திருக்கேன் நிறைய. இப்ப என் நிலைமை என்ன, அந்த ஸ்டெப்னிதானா? புது டயர் வந்தால் மறுபடியும் என் நிலை மாறாதுன்னு என்ன உத்தரவாதம்?''

''.............''

''இதோ பாருங்க, அடி வாங்கிட்டு அடுத்த கன்னத்தைக் காட்ட நான் யேசு இல்லே. உலகத்துக்கு ஒரு யேசு போதும். யதார்த்தமா பேசுவேன். அதேசமயம், விலக்கப்பட்ட பின்னால், மறுபடியும் மனசு மாறிச் சேர்த்துக்கற உத்தேசம் வந்தால் சரின்னு சொல்லுவேன்னு நீங்க எப்படி எதிர்பார்க்கலாம்? நான் மகாத்மா இல்லே. ரத்தமும் சதையுமான மிடில் கிளாஸ் ஆத்மா! அந்த எம்.பி.ஏ.க்கு ஒரு சின்ன வீடு இருந்ததால் விஜி அவரை ஒப்புக்கலே. அவரை மனசுல ஏற்கெனவே வரிச்ச விஜிக்கு நான் யாரு இப்ப? சின்ன வீடா? பதில் தெரிஞ்சா பட்டறைக்கு வாங்களேன். நான் வரட்டுமா?''


அலாவுதீன் ஏழை என்பதால் அரசன் தன் மகளை அவனுக்கு மணம் முடித்துத்தர முடியாது என்கிறான். எனவே, பூதம் இரவோடு இரவாக அலாவுதீனுக்கு அழகான மாளிகையை அமைக்கிறது.





பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 200/– ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2000/– மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 200/– அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D–76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்–612 001.

இந்த நன்கொடைக்கு 80G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.

முதல் பரிசு பெற்ற கவிதை

* காதலி!
* கலப்படமானது
நம் இதயம் மட்டுமல்ல
சுவாசிக்கும் காற்றும்தான்!
* நாம் மௌனமாய் அழியும்
நாக சாகியில்
வசிக்கின்றோம் அன்பே!
* இங்கு சுவாசிக்கும் இதயங்கள்
கரித் துகள்களால்
மூலாம் பூசப்பட்டிருக்கின்றன!
* தெரியுமா தேவி!
இளைய பாரதங்களின்
இருமல் ஒலிகள்
பாராளுமன்றத்தின்
செவிகளைத் தீண்டுவதில்லையாம்!
* நீ புற்று நோயால்
பூத்துப் போனதற்காக
நான் வருந்திக் கொண்டிருக்கின்றேன்!
எனது இதயம்
சல்லடைத் துளைகளானதற்காக
நீ புலம்பிக் கொண்டிருக்கிறாய்
* கலங்காதே கண்ணே!
கவிதையாயிற்றே நம் காதல்
அதனால் —
கல்லறை வாசகம்
கம்பீரமாய் அமையும்!

— எஸ். விநாயகமூர்த்தி,
XII-A. அரசினர் மேல்நிலைப் பள்ளி,
கன்னிகாபுரம், சென்னை — 12.

16.11.86 கல்கி இதழுக்கான அட்டைப்படக் கவிதை

கலங்காதே கண்ணே!

அன்று
போபாலில்
மனிதனை விழுங்கிவிட்ட
அரக்கப் புகைக்கு
இன்னுமா
அடங்கவில்லை பசி?

விஷக் காற்றை
சுவாசிப்பவனின்
நுரையீரலுக்குள்
உன் கல்லறையா?

ஓ... தேசமே
சுவாசிக்கக்கூட
ஒருத்தனுக்குச்
சுதந்திரம் கிடையாதா?

— இ. கோவிந்தராசு.
II BGL
டாக்டர் அம்பேத்கார்
அரசு சட்டக் கல்லூரி,
புதுச்சேரி — 1.

இரண்டாம் பரிசு பெற்ற கவிதை

பூக்களிலும்
மகரந்தங்களாய்
புகைத் துகள்கள்
தாய்ப் பாலுக்கு
முன்னரே —
புகையை உண்ணும்
சிசுக்கள்!!
காற்றுக்கே
பஞ்சமானதால்
நோய்களைச் சுவாசிக்கும்
துணையிரல்கள்!?

ஓ.....!
எத்தனை பேர்
வயிற்றைக் கழுவிக் கொள்ள
வாழ்க்கையிலேயே
கரி பூசிக் கொண்டிருக்கின்றனர்?!!

— இரா. முத்துசாமி (பி.எஸ்ஸி)
முதலாமாண்டு
ராஜா துரைசிங்கம் அரசு
கலைக் கல்லூரி, சிவகங்கை.

உதிக்கும்
சூரியன் கூட
எங்கள்
கண்களுக்குத் தெரியவில்லை...
எங்கள்
கிராமத்தின் மீது
புகைப் போர்வை
போர்த்தப்பட்டுள்ளதால்...

அரசியல்வாதிகளின்
கண்களுக்கு இன்னும்
அகப்படவில்லை
எங்கள் கிராமம்...
அவர்கள் மீது
பணப் போர்வை
போர்த்தப்பட்டதால்....

ராஜ கணேஷ் (XII-D)
அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி,
சென்னை

ஓங்கி நிற்கும்
இப்புகை போக்கிகள்
நச்சுக் குழாயாகப்
பரிணமித்து
டி.பி முதல் புற்று நோய் வரைப்
பிரசவிக்கும்!
வயல் வெளிகள் புகையுடன்
உறவாடியதால்,
உழவர்கள் புகையை
அடுப்படிகளில்
மறந்தனர்!

நச்சுக் கருமையேறி
இறுகிப் போன இதயங்கள்
குமுறி வெடிக்கும்போது
இக்குழாய்கள்
நொறுங்கிப் போகும்!

— ப. அப்துல் ராசிக்,
பி.எஸ்ஸி வேதியியல் (இரண்டாமாண்டு)
தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில் (குமரி மாவட்டம்)





ஒற்று
ஒரு

எஸ். பொன்

அந்த நகரத்து மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த நாள் வரப் போகிறது! இந்த வருஷத்தைப் போல் எந்த வருஷத்திலும் அவர்கள் இப்படி எதிர்பார்த்துக் காத்திருந்தது கிடையாது!

'காந்தி ஜெயந்தி' வருஷா வருஷம்தான் வந்து போகிறது! ஆனால் இந்த வருஷம் மட்டும் அதற்கென்ன அப்படி ஓர் எதிர்பார்ப்பு!

இந்த வருஷம் — ஒரே மேடையில் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து, சர்வ கட்சிக் கூட்டமாக நடத்தப் போகிறார்கள்...! 'இதெப்படி சாத்தியமாகும்?' எனப் பலர் நம்பாமலும் கூட இருந்தார்கள்! ஒரே சுவரொட்டியில் எல்லாக் கட்சியினரின் பெயரையும் கண்டபிறகு.... அவர்களது ஆவல் ரொம்ப அதிகமாயிற்று! அந்த ஊரில்



மயடன் விழா

ஹுசாமி

பெரிய மைதானமாக இருந்த இடம் ஒன்று தான். முந்தைய பல வருடங்களெல்லாம், காலை, மதியம், மாலை எனப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு கட்சிக்காரர்களும் அந்த மைதானத்தில் அந்தத் தினத்தைக் கொண்டாடுவார்கள். அதன் பிறகு.... கட்சிகள் அதிகமாகிவிடவே, அக்டோபர் 1 முதல் 7 வரை ஒரு வார காலத்திற்கு, அதே இடத்தில் மாறி மாறி ஒவ்வொரு கட்சியாக காந்திக்கு விழா எடுத்தன.... ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு நாள் என்றால் ஏழு நாட்கள் எப்படிப் போதும்...? ஆகவேதான் கடைசியில் எல்லோரும் கூடி இப்படி ஒரு முடிவு செய்து, 'சர்வக் கட்சிக் கூட்டம்' போட ஏற்பாடாயிற்று!

அவரவர் கொடிகளை நடுவதற்கு மேடைக்குப் பின்னால் இடம் ஒதுக்கினர். நீளமாக...



உதவி ஆசிரியர்: நம்ம பத்திரிகையோட இலவச இணைப்பா காலண்டர் கொடுக்கிறோம்கிறது நம்ம எதிரி பத்திரிகைக்குத் தெரிஞ்சதும்.....

ஆசிரியர்: என்ன பண்றாங்களாம்...?

உதவி ஆசிரியர்: அவங்க பத்திரிகையோட இலவச இணைப்பா ஆணி—சுத்தியல் தர்றாங்களாம்!

மனைவி: இந்த வருஷம் காலண்டர் செலவை மிச்சம் பண்ணிட்டேன்!

கணவன்: எப்படி?

மனைவி: ஒரு பட்டுப் புடவை எடுத்தால் ஒரு காலண்டர் இலவசமுங்க. போறு ஒரு காலண்டர் போதுமுன்னு ஒரு பட்டுப் புடவை எடுத்திட்டேன்.

''உன்னோட நண்பன் அறை பூரா அம்மன் காலண்டர், தேவி காலண்டரா மாட்டியிருக்கான்னு சொல்றியே, அவ்வளவு பக்திமா?''

''ஆமாமாம், திரும்பின பக்கமெல்லாம் ஜீனத் அமன், ஸ்ரீதேவி காலண்டரா மாட்டி வைச்சிருக்கான்!''

''கடைக்காரர்கள்கிட்டே ஓசிகாலண்டருக்குச் சிரிச்சச் சிரிச்சு, இப்போ முகத்தில் சிரிப்பு மாறவே மாட்டேங்குது, ஏதாவது ட்ரீட் பண்ணுங்க, டாக்டர்!''

— கீழை அ. கதிர்வேல்

வெகு நீளமாக.... அதிலிருந்து ஆரம்பித்தது மனஸ்தாபங்களும், சிறு சிறு சண்டைகளும்! இடம் ஒதுக்கியும் கொடி மரங்கள் நடப்படாமலேயே காலந்தாழ்த்தினர்....! முதலில் அந்தக் கட்சிக் கொடிக் கம்பம் நடட்டும். அதற்கப்புறம் அதைவிட ஒரு அடி உயரமாக நமது கொடிக்கம்பத்தை நட்டுக் கொள்ளலாம் என்ற காரணத்திற்காகவே கொடிக் கம்பங்கள் நடப்படாமல் இருந்தன! கடைசியில் அவர்களுக்குள் கூடிப் பேசி, எல்லாக் கொடி மரங்களும் ஒரே உயரமுடையன வாக்கப்பட்டு, வரிசையாகக் கொடிகள் பறக்கவிட ஏற்பாடாயிற்று! அடுத்து...மேடை மேல் ஆசனங்களில் யார் யார் எங்கெங்கு அமர்வது? என்பதற்கான சர்ச்சைகள்!

''நடு ஆசனம்தான் எங்கள் தலைவருக்கு.''

''முதல் ஆசனம் எங்கள் கட்சிக்கு...''

''கடைசி சீட்டில் எங்க தலைவர் உட்கார மாட்டார்.''

இப்படி.....

''வட்ட மேஜை மாநாடு'' போல ஒரு வட்ட மேஜையைப் போட்டு, அதைச் சுற்றிலும் ஆசனங்களைப் போட்டுக் கொண்டால், முதல் எது? நடு எது? முடிவெது? அப்படிச் செய்யலாமே....'' என்றுகூட ஒருவர் வேடிக்கையாகச் சொன்னார்!

யார் முதலில் பேசுவது? முடிவில் பேசுவது யார்? என்பது குறித்து ஒரு நீண்ட விவாதம்.

சீட்டுக் குலுக்கிப் போட்டு அதன்படி பேச வேண்டும் என்பதை எல்லோரும் ஒத்துக் கொண்டனர்.

எந்தக் கட்சிக்காரர் தலைமை வகிப்பது என்பதில் நீண்ட நேரம் விவாதிக்க வேண்டியதாயிற்று! அதற்குச் சீட்டுக்குலுக்குவதைப் பலபேர் ஒத்துக் கொள்ளவில்லை! கட்சி சார்பற்ற அவ்வூர்ப் பெரிய மனிதர் ஒருவரை — விழாச் செலவுகளை ஏற்றுக் கொள்பவராக இருக்க வேண்டும் — தலைமை தாங்கக் கூப்பிட்டுக் கொள்ளலாம் என்பதை ஒருவழியாக ஒப்புக் கொண்டனர்.

அப்படித்தேர்ந்தெடுத்தவர், தன் பெயரை ஜாதிப் பெயரோடு சேர்த்துப் போட்டால் தான் ஆயிற்று என்று கூறி அப்படியே அவர் பெயர் சுவரொட்டியில் பிரசுரமாயிற்று! அதுவும் உண்மைதான்! ஜாதியில்லாமல் அவர் பெயரை மட்டும் போட்டால், யார் அவர்? என்றுதான் கேட்பார்கள்! ஆனால் அவரது பெயரைக்கூடப் போடாமல், அவரது ஜாதியை மட்டும் போட்டால்கூட, அவர்தான் என்பதைத் தெரிந்து கொள்வார்கள் அவ்வூர் மக்கள்....! ஆயிரம் ஐந்நூறு என்று செலவு செய்துவிட்டு, யார் எவர் என்றுகூட மக்களுக்குத் தெரியாமல் போகக் கூடாதல்லவா? பேச்சாளர்களின் போக்கு வரவுச் செலவுகள், அந்த அந்தக் கட்சியைச் சேர்ந்தது என்ற முடிவைக்கூட அரை மனத்துடன்தான் ஏற்றுக் கொண்டனர். கடைசியில் மிக முக்கியமானதாக ஒரு விஷயம் எல்லோருமாகப் பேசி முடிவு செய்து கொண்டனர்.

''எந்த ஒரு கட்சியையும் தாக்கிப் பேசக் கூடாது!'' ''தாக்கிப் பேசக்கூடாது என்றால், பின் பேசுவதற்கு என்ன இருக்கிறது?'' என்று பிரபலமான சில பேச்சாளர்கள்கூட யோசித்தனர்; எப்படியோ சமாளிக்கலாம்... என்று தங்களுக்குள் சமாதானமாயினர்!

அந்த நாள் வந்துவிட்டது! அக்டோபர் இரண்டு! முதன்முதலாக 'தலைமை தாங்கும் பதவி' கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் அவ்வூர்ப் பெரியவர், நாலைந்து ஆட்களை வைத்துக் கொண்டு காலையிலிருந்தே அந்த மைதானத்தை முற்றுகையிட்டுவிட்டார்.

மேடை போட்டாயிற்று. அந்த அந்தக் கட்சித் தொண்டர்கள் ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டு, மேடைக்குப் பின்புறம் குழி தோண்டி, தங்கள் தங்கள் கட்சிக் கொடிகளை நட்டுக் கொண்டிருந்தனர். மேடையின் முன்புறமாக இரண்டு பெரிய வாழை மரங்களை நட்டனர். பச்சை நிறத்தைக் கண்டவுடன் அருகே வந்த ஓர் ஆட்டுக் குட்டி அந்த வாழை மரத்தைக் கடிக்க ஆரம்பித்தது! பின்னால் கொடி நட்டுக் கொண்டிருந்தவன், ஓடி வந்து தன் கையில் இருந்த கடப்பாரையால் அந்த ஆட்டுக் குட்டியை ஓர் அடி அடித்தான்! சரியான அடி! 'ம்மே'' என்ற சப்தத்தோடு கீழே விழுந்த அந்த ஆட்டுக் குட்டியின் வாயிலிருந்து கொஞ்சம் ரத்தம் வடிந்தது! அதற்குள் அதன் உயிர் போயிருந்தது!

யாரோ போய்ச் சொல்லி.... ஆட்டுக் குட்டியின் சொந்தக்காரன் வந்துவிட்டான், மீசையை முறுக்கிக் கொண்டு! 'ஆட்டை அடித்தவனை'க் கூப்பிட்டு... உங்க கட்சியிலேயிருந்து, இந்த ஆட்டுக்கு உண்டான பணத்தை வாங்கிக் கொடுத்துவிடு' என்று தலைமை தாங்கப் போறவரே சொல்லிவிட்டார்!

அவன் போய் 'மன்றத்தில்' விபரம் சொல்லி ரூபாய் கேட்டான்! கட்சி அதற்கு ஒத்துக் கொள்ளாமல் போகவே, அவன் கையிருப்பில் அறுபது ரூபாய் குறைந்தது! அந்தக் கட்சிக்கு ஒரு தொண்டன் குறைந்தான்! ஆம்! அவன் உடனே வேறு கட்சிக்கு மாறிச் சென்றுவிட்டான்!

கூட்டம் ஆரம்பமாயிற்று! தலைவர் 'வெள்ளை சொள்ளை'யாக நடு ஆசனத்தில் அமர்ந்திருந்தார். இடப்புறமும் வலப்புறமும் ஒவ்வொரு கட்சிக்காரராக வந்து உட்கார்ந்தனர். அவர்களில் பலபேரிடம் பட்டை சாராய நெடியும், பிராந்தியின் வாசமும் 'கம கம'த்தன! ஒருவர் 'ஏவ்! ஏவ்' என்று ஏப்பம் விட்டுக் கொண்டேயிருந்தார்! கோழிக் கறியை அதிகமாகத் தின்று.... ஜீரணமாகாததின் விளைவு!

பத்துப் பதினைந்து பெண்கள் கீழே உட்கார்ந்திருப்பதையே பார்த்துக் கொண்டு, ''பெண்கள் கூட்டம் ரொம்பக் கம்மியா இருக்கே'' என்றார் ஒருவர் ரொம்பக் கவலையுடன்!

''அதற்காகத்தான் சொன்னது, யாராவது ஒரு நடிகரையாவது, நடிகையையாவது தலைமைக் காட்டச் சொல்லியிருக்கலாம்'' என்றார் நீளத் துண்டு போட்டவர்!

கடைசி சீட்டில் இருந்தவர் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு 'குப் குப்' பெனப் புகைவிட்டார்!

ஒவ்வொருவரும் ஆளுக்கு இரண்டு நிமிஷம்தான் பேசினர்! அவர்களால் அவ்வளவுதான் பேச முடிந்தது! அவர்கள் பேச்சில், காந்தி சுதந்திரத்திற்கு முன்பே உயிர் நீத்தாரா? அல்லது சுதந்திரம் கிடைத்த பிறகு உயிர் நீத்தாரா? என்பது பற்றிக்கூட ஒருவருக்கு ஐயம் வந்தது!

'காந்தி காலத்தில் கதர்த் துணி இருந்தது' என்றார் ஒருவர்! இப்போது கதரேயில்லை என்பது அவர் எண்ணம்! கதர் அணிந்தவர்கள் யாருமே மேடையிலும் இல்லை. கடைசியில்.... கூட்டம் முடிந்து, 'ஜனகன மன' பாடும்போது, உட்கார்ந்திருந்த ஒரு கட்சிக்காரர் அவசரமாக 'சேரை'ப் பின்னுக்குத் தள்ளும்போது, அங்கு மாட்டியிருந்த காந்தி படம் கீழே விழுந்து உடைந்ததை யாரும் கவனிக்கவில்லை! மேடையிலிருந்தோர் ஒற்றுமையுடன் 'தலைவ'ரின் வீட்டுக்குப் 'பிரியாணி' சாப்பிடச் சென்று கொண்டிருந்தனர்!

புதுக் கவிதைப் போட்டி-10

11.1.87 கல்கியின் அட்டைப் படம் உங்களுக்கு எல்லாம் ஓர் இனிய ஆச்சரியமாக இருக்கும். அந்த அழகிய அட்டைப் படம் தூண்டும் உங்கள் கற்பனையின் துணையுடன் ஒரு புதுக் கவிதை எழுதி அனுப்புங்கள். பிளஸ் டூ மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமே இப்போட்டி.

* தபால் கார்டின் ஒரு பக்கத்தில் 8 — 10 வரிகளில் கவிதை அடங்க வேண்டும்.
* கார்டின் மறுபக்கத்தில் உங்கள் பள்ளி அல்லது கல்லூரி முத்திரையைப் பெற வேண்டும்.
* உங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாகக் குறிப்பிடுங்கள்
* விலாசப் பகுதியில் புதுக் கவிதைப் போட்டி — 10 என்று மறவாமல் குறிப்பிடுங்கள்.
* கவிதைகள் 19.1.87 க்குள் எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பி வையுங்கள்.

முதல் பரிசு: ரூ 100/—

இரண்டாம் பரிசு: ரூ 25/— தவிர ஆறு மாதங்களுக்கு கல்கி இலவசம்

தவிர, பிரசுரமாகும் அனைத்துக் கவிதைகளுக்கும் சன்மானம் உண்டு.

10

மோகம் என்பது இதுதானே?

உஷா சுப்பிரமணியன்

கடந்த சில மாதங்களாக ஞானசுந்தரியின் மனத்தைப் பலவிதமான பயங்கள் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன. லோகேஸ்வரியின் திருமணத்தை எப்படியும் தை மாதம் முடித்து விடலாம் என்று அவள் நம்பியிருந்தாள். நித்யாவுக்குப் பரீட்சை முடிந்து, வேலை கிடைக்காமல் எப்படி ஞானம் கல்யாணம் செய்யறது?'' என்று சுந்தரம் அவளுக்குப் புரிய வைத்தார். ''ஏங்க, மருமவனுக்கு இருபத்தி நாலு வயசாகிறதே. நீங்க இருபத்தி ஒரு வயசிலேயே பி.ஏ. முடிச்சுட்டீங்களே?'' என்று அவள் சந்தேகத்துடன் கேட்டாள்.

''அப்பொழுதெல்லாம் மாணவர்கள் ஒழுங்காக காலேஜுக்கு வந்தாங்க. அப்பா, அம்மாவுக்குப் பயந்து பாடம் படிச்சாங்க. காலேஜுங்களும் அரசியல் கலப்பில்லாமல் நேரத்தோட பரீட்சையும் வெச்சு, ரிசல்டும் போட்டாங்க. இப்பத்தான் எல்லாமே மாறிடுச்சே...'' என்று சுந்தரம் பெருமூச்சு விட்டார். என்னதான் கால தாமதம் என்றாலும் நித்யானந்தன் சென்ற ஆண்டாவது பட்டப் படிப்பை முடித்திருக்க வேண்டும். ஞானத்தின் வாயை அடைத்தாலும், அவர் மனத்தில் எழுந்த கேள்வியை அடைக்க முடியவில்லை. அக்கா சிவகாமியிடம் பேச முற்பட்ட போதெல்லாம் அவளும் ஒரு பாட்டம் அழுதாள். ''இந்தப் படிப்புப் படிக்கலேன்னு யாரு அழுதாங்க? ஊரோட நெலத்தைப் பார்த்துக்கிட்டு, கறிகாய் பயிரிட்டுட்டு இருக்கக் கூடாதா?'' என்று புலம்பினாள்.

முதலில் புலம்பலாக இருந்த அவள் குறை சமீப காலத்தில் கோபமாகவும், வெறுப்பாகவும் மாறி இருந்தது. அதுவும் சென்ற முறை நித்யா ஊருக்கு வந்து திரும்பியதிலிருந்து அவள் மிகவும் ஆத்திரத்திலிருந்தாள். ''அவனைப் பத்தி எங்கிட்டே ஒண்ணும் கேட்காதே'' என்று சீறி விழுந்தாள். பத்து நாட்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி அனைத்திற்கும் சிகரமாக அமைந்துவிட்டது.

சிவகாமியின் கணவர் மிகவும் சாது. ஒருவிதத் தாழ்வு மனப்பான்மையுடன் ஒதுங்கி விடும் சுபாவம் வேறு. அதனால் சிவகாமி எல்லா விஷயத்திலும் தம்பியின் ஆலோசனையையே நாடுவாள். அன்று சிவகாமி படபடப்புடன் சுந்தரத்தை நாடி வந்து,—தன் கையிலிருந்த கடிதத்தை அவரிடம் தந்து விட்டு, மௌனமாகி நின்றாள்.

கல்லூரி முத்திரையுடன், ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தைப் படித்த சுந்தரம் திகைத்து நின்று விட்டார். 'அன்புள்ள பெற்றோருக்கு' என்றுதுவங்கியிருந்தது கடிதம்:

''கல்வி என்பது பொறுப்பான, அறிவுள்ள எதிர்காலப் பிரஜைகளை உருவாக்கும் சாதனமாகும். கல்விச் சாலைகள் பண்பு பயிற்றுவிக்கும் கருவிகளாகும். இவ்விரண்டையும் மரியாதையுடன் அணுகும் மாணவனே நல்ல இளைஞனாக உருவாக முடியும்.

உங்கள் மகனும், பி. ஏ. பொருளாதாரம் இரண்டாம் ஆண்டு மாணவனுமான நித்யானந்தன் கடந்த ஓராண்டாக வகுப்புக்கு ஒழுங்காக வராமலிருப்பதுடன், மாணவர்களைத் தூண்டி விடுவது, கல்லூரிக்குள் கண்ணியமற்று நடப்பது, கல்லூரிக்கு வெளியே பொதுச் சொத்துக்களின் மீது கல்லெறிந்து நாசப்படுத்துவது போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளான். நாங்கள் பலமுறை வாய்ப்பளித்தும் அவன் திருந்த முயலாததுடன், கல்லூரி முதல்வரையே நேரடியாகத் தாக்கவும் முயற்சி செய்துள்ளான். இந்த நிலையில் போலீஸுக்குச் செய்தி சென்று அவனைக் கைது செய்துள்ளனர். இதற்குக் கல்லூரி நிர்வாகம் பொறுப்பல்ல. அதோடு கல்லூரியின் ஒழுக்கக் கட்டுப்பாட்டு விதிகளின்படி கல்லூரியிலிருந்தும், ஹாஸ்டலிலிருந்தும் அவன் உடனடியாக நீக்கம் செய்யப்படுகிறான். கல்லூரிக்கு வெளியிலான அவன் கண்ணியமான நடவடிக்கைக்கு இனி பெற்றோர் என்ற முறையில் நீங்கள் பொறுப்பேற்பீர்கள் என நம்புகிறோம்.''

சுந்தரம் தயங்கித் தயங்கிச் சகோதரியிடம் ஒவ்வொரு வார்த்தையாக மொழி பெயர்த்துக் கூறினார். அவராலேயே இந்தச் செய்தியை நம்ப முடியவில்லை. அடிப்படையில் கண்ணியமாக இருந்த ஒருவன், திடீரெனக் கல்லூரிக்குச் சென்ற காரணத்தால் மட்டும் மாறி விடுவானா? அப்படி மாற வேண்டிய

அவசியம்தான் என்ன? அவரும் இதே சென்னைக் கல்லூரியில் விடுதியில் தங்கிப் படித்தவர்தானே. இந்த மாற்றம் ஏன், எப்போது துவங்கியது. மகனைப் பற்றிய இந்த அதிர்ச்சியை அக்கா எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறாள்? "அக்கா, நான் வேணு ஒரு நடை மெட்ராசுக்குப் போய் விசாரிச்சுட்டு வரட்டா...? போலீஸ், கைது என்றெல்லாம் எழுதியிருக்காங்களே.. ஜாமீனில் வெளியஎடுத்துட்டு வரலாமே... அவன் கையிலே பணமிருக்கோ, இல்லேயோ...?"

ஒரு சில நிமிடங்கள் பதில் பேசாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள் சிவகாமி. அவள் பளிங்கு முகத்தில் பச்சை நரம்புகள் புடைத்து நின்றன. நெற்றியில் சுருக்கம் கோலம் போட்டது. திடீரென்று உள்ளே திரும்பி, "ஞானம், ஞானசுந்தரி" என்று அழைத்தாள். ஏற்கெனவே கதவுக்குப் பின் ஒளிந்திருந்த ஞானம் வெளியே வந்தாள்.

சிவகாமி சுந்தரத்தையும், ஞானத்தையும் நேரே கண்ணுக்குள் பார்த்தாள். "சொல்றேன் கேளுங்க. உங்க வீட்டு மாப்பிள்ளை இனிமேல் எப்புள்ளையில்ல. அப்போ அ ... வடி. போலீஸ்னு. நம்ம வம்சத்திலில்லாத வழக்கமாக ஒரு புள்ளை கெட்டழிஞ்சானே, அவனை ஜாமீன்ல வெளியே எடுக்க வேண்டிய அவசியமும் இல்லே: ஜெயில்லே கூழ் தின்னு, உதை பட்டாவது புத்தி வருதா பார்ப்போம். அப்படியும் வரல்லேன்னு, அவன் தலைவிதின்னு கைகழுவி விட்டுவிடுவோம். திசை தெரியாமல் போறகாட்டாற்றை யாரும் கட்டுப்படுத்த முடியாது. வழிகாட்டியாச்சு... மீறிப் போனால் அது அவன் பாடு... ஆனா இனிமேல் அவன் அம்மா, அப்பான்னு எங்க கையை எதிர்பார்த்து நின்னா, ஒரு சல்லிப் பைசாப் பெயராது. அவன் தப்புத் தண்டா செய்தாலும் அதுக்கு நாங்க பொறுப்பில்லே. தோளுக்குமேல் வளர்ந்த புள்ளைக்கு, அப்பா, அம்மா துணையில்லே. அவன் மனசாட்சிதான் துணை.... அந்தக் கடிதாசியைக் கிழிச்சுப் போடு தம்பி... அவன் எக்கேடு கெட்டோ ஒழியட்டும்.." என்று நிச்சயமாகச் சொன்னாள்.

"அக்கா!" சுந்தரம் குறுக்கிட்டார்.

"புரியுது. நீ என்ன கேட்க வர்றேன்னு புரியுது. என் பொண்ணுக்குப் பரிசம் போட்டு



முதன் முதலில் நடிகருக்கான ரசிகர் சங்கம் 1902ல் லண்டனில் ஆங்கில நடிக ரான லெஸ்லி வால்லர் என்பவருக்கு ஏற்படுத்தப்பட்டது. சங்க உறுப்பினர் கள் எந்தக் கோரிக்கைக்காகவும் உதவிக் காகவும் தன்னை நாடுவதில்லை என வாக் களித்த பிறகே தனக்குச் சங்கம் அமைக்க லெஸ்லி வால்லர் சம்மதித்தார்!

— எஸ். விஜயா சீனிவாசன்

வச்சிருக்கயே, பிள்ளையைக் கைகழுவிட்டா எப்படின்னு கேக்கப் போறே இல்லையா... பிள்ளை ஒழுங்கா இருப்பான், பெற்றவங் களுக்குக் கௌரவம் தருவான்னு நினைச்ச போது நிச்சயதார்த்தம் செஞ்சேன். ஆனால் இனிமே சொல்றேன் கேளு.... இவனை நம்பாதே....''

''அது எப்படிங்க.....'' ஞானம் குறுக்கிட் டாள்.

''ஆமா... வாத்யாரை இன்னிக்குத்தாக்கற பையன் நாளைக்குப் பொஞ்சாதியை அடிக்க மாட்டான்னு என்ன நிச்சயம். அப்படிப் பட்ட புள்ளையை நம்பிப் பெண்ணைக் குடுக் கப் போறியா. வீட்டுக்கு அடக்கமாப் பொண்ணை வளர்த்திருக்கே, எம்புள்ளை அவளை நடுத்தெருவிலே நிறுத்தமாட்டான்னு என்ன நிச்சயம்... கல்யாணத்தை நிச்சயம் செய்த பிறகு, முறிக்கிறது வழக்கமில்லை தான். ஆனா லோகு என் மகள் மாதிரித்தான். அவள் வாழ்க்கையை நானே கெடுக்கலாமா... என் கழிசடைப் புள்ளைக்குக் கல்யாணமும் வேணும், ஒண்ணும் வேணும். தையல் நாயகி மகன் சம்பந்தத்திற்குக் கட்டிக் கொடு. நான் வெளக்கமாப் பேசி முடிக்கிறேன்.''

உள்ளேயிருந்தபடியே இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த லோகேஸ்வரிக்குத் 'திக்' என்றது. தையல்நாயகி அத்தையின் பிள்ளை திருஞானசம்பந்தனின் வேஷ்டி கட்டிய உருவமும் பட்டை பட்டையாக விபூதி பூசிய முகமும், குள்ளமும் ஒடிசலு மான உருவமும் அவள் கண்முன் தோன்றின. அவள் அழகெங்கே.... சம்பந்தத்தின் நோஞ் சான் தோற்றமெங்கே... பொருத்தமில்லாத பிள்ளையை அவள் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா என்ன.... இந்தச் சம்பந் தத்திற்கு அவள் உடன்படப் போவதில்லை. அப்பா மட்டும் பேச்சு ஆரம்பிக்கட்டும். அவள் கட்டாயம்எதிர்க்கத்தான் போகிறாள். ஆமாம். நித்யா அத்தான் அப்படி என்ன பெரியதப்புச்செய்ததற்காக அத்தை அவரைத் தன் பிள்ளையே இல்லை என்னும் ரீதியில் பேச வேண்டும்? எதற்கும் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டும் என்று நினைக்கும் இந்தக் கூட்டத்திலிருந்து அவர் மாறி அவசிய மானதை எதிர்க்க வேணும்என்று நினைப்பது என்ன தவறு? சுதந்திரப் போராட்டத்துக்கு ஜெயிலுக்குப் போனால் பெருமை, ஹிந்தியை எதிர்த்துக் கைது செய்யப்பட்டால் அந்தஸ்து, கல்லூரி நிர்வாகத்தை எதிர்த்துப் போராடி னால் மட்டும் அவ்வளவு பெரிய குற்றமா? அத்தை ஆத்திரத்தில் என்ன பேசினாலும் நான் கவலைப்படப் போவதில்லை. நித்யா அத்தானைத் தவிர யாரையும் திருமணம் செய்து கொள்ளப் போவதும் இல்லை. மரத் தடியில் நித்யா அவள் கையைப் பற்றியதும் இடையை வருடியதும் அவள் நினைவில் வந்து உணர்வு நாளங்களைத் தாக்கியது. மணந்தால் நித்யா அத்தானை மணப்பது இல்லாவிட்டால் திருமணம் செய்து கொள் ளாமலே இருப்பது என்று லோகேஸ்வரி முடிவெடுத்தாள்.

சிவகாமியின் வேகத்தையும், ஆத்திரத்தை யும் கண்ட சுந்தரம் அவளை நிதானமாகச் சமாதானப்படுத்தினார். ''இதுக்கெல்லாம் மனசை விட்டுடாதீங்க அக்கா. இள ரத்தம், எதைச் செய்தாலும் வேகமாகச் செய் யணுங்கற ஆத்திரம். நித்யா திருந்திடுவான். காலேஜிலிருந்து விலக்கிட்டாங்கன்னு கவ லைப்பட வேண்டாம். இப்பல்லாம் தபால் வழியே படிச்சுச் சுலபமாகப் பட்டம் வாங்க லாம். நான் ஒரு நடை அத்தானைக் கூட்டிக் கிட்டுப் பட்டணம் போய்ப் பார்த்துட்டு வர்றேன்.''

''வேண்டாம்'' சிவகாமி மூர்க்கமாய் மறுத்தாள். அதோடு மகனைப் பற்றிய பேச்சை மேலும் தொடர விரும்பாதவளாக வீட்டுக் கும் கிளம்பிப் போனாள். சுந்தரமும், ஞானமும் குழப்பத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். செல்வம் அதிகமில்லாவிட்டாலும், கலக்கம் இல்லாமல் தெளிவான ஓடை போல் சென்று கொண்டிருந்த அவர்கள் வாழ்வில் திடீ ரென்று ஏன் இவ்வளவு குழப்பம் தோன்று கிறது. லோகேஸ்வரியின் மனத்தில் இவ் வளவு ஆண்டுகளாக நித்யானந்தத்துடன் திருமணம் என்ற ஆசையை விதையாய் விதைத்து வளரவிட்டுவிட்டு, திடீரெனப் படர்ந்த செடியையே பிடுங்கிப் போடுவதா? சுந்தரம் காத்திருந்து பார்க்கலாம், அவசரப் பட்டு எந்தக் காரியமும் செய்ய வேண்டாம் என்று முடிவெடுத்தார். ஆனாலும், அத்தை யின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த மகள் வருத்தப்படுவாளே, அவள் மனம் துவளுமே என்ற எண்ணம் அவர் மனத்தை மிகவும் வாட்டியது.

ஞானசுந்தரி தன்னைவிட அதிகமாகவே பாதிக்கப்பட்டு, உடல் தளர்ந்து, மனம் சோர்ந்து நிற்பதைக் கண்டார். அவள் தோளில் மெல்லக் கையைப் போட்டார். ''கவலைப்படாதே ஞானம். எல்லாம் சரி யாகப் போயிடும்.''

''அக்கா எப்படிப் பேசிட்டுப் போறாங்க, பாருங்க. அவங்க பெண்ணைப் பெத்து வச் சிருந்தா அப்படிப் பேசுவாங்களா?''

சிவகாமி பேசியதிலே எதுவும் தப் பில்லை. தன் பிள்ளை என்பதற்காக எதையும்

N.S.K.
பில்டர்ஸ்



உங்களுக்கு வழங்கும்

பண்டிகைக்கால சிறப்புப் பரிசுத் திட்டம்

15.12.86 முதல் 31.1.87 வரை

சிறப்பு பாதுகாப்பு. ரூ 25,000/- அதற்குமேல் உள்ள டெபாசிட்டுகளுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற வீட்டுமனை பத்திரம் அளிக்கும் திட்டம்.

கீழே குறிப்பிட்டுள்ளபடி தங்களுக்கு கிடைக்கும் பரிசு கூப்பன்களை, தங்கம், வெள்ளி நகைகளாகவோ அல்லது பட்டு புடவையாகவோ மாற்றிக் கொள்ளலாம்

பரிசுக் கூப்பன்கள்		
டெபாசிட்	5 வருடம்	குறிஞ்சி
Rs. 5000/-	Rs. 200/-	Rs. 150/-
Rs. 10,000/-	Rs. 400/-	Rs. 300/-
Rs. 25,000/-	Rs. 1,000/-	Rs. 750/-
Rs. 50,000/-	Rs. 2,000/-	Rs. 1,500/-
Rs. 1,00,000/-	Rs. 4,000/-	Rs. 3,000/-

(இச்சலுகை 31.1.87 வரை மட்டுமே)

பிக்ஸட் டெபாசிட் திட்டம்:

1 வருடம்	2 வருடம்	3 வருடம்	5 வருடம்
20%	21%	22%	24%

குறிஞ்சி டெபாசிட் திட்டம்:

உங்களுடைய முதலீடு 42 மாதங்களில் இருமடங்காகிறது
(இச்சலுகை 31.1.87 வரை மட்டுமே)

கூடுதல் போனஸ் வட்டி:

3 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற 1%, 6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற 2%, 12 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற 3%.

பாங்க் கேஷ் சர்டிபிகேட்:

18%	19%	20%	24%

(இதற்கு பரிசு கூப்பன் அனுமதி இல்லை)

N.S.K. பில்டர்ஸ்

38-B, பர்கிட் ரோடு தி. நகர். சென்னை-600 017. போன்: 445252.

எதிர்கால சேமிப்பிற்கு என். எஸ். கே.

அவ மூடி மறைக்கல்லே. லோகுவையும் தன் மகளாகத்தானே பாவித்துப் பேசறு.''

''எனக்கு ஒண்ணும் புரியலேங்க....'' சிவகாமி விசும்பத் துவங்கினுள். ''போன தடவை நித்தியானந்தம் ஊருக்கு வந்திருந்தப்ப, லோகு காதுக் கம்மலும் ஜிமிக்கியும் போன இடம் தெரியாம மறைஞ்சுதே. அப்பவே எனக்கு ரொம்ப அபசகுனமாப்பட்டதுங்க. கோவிலுக்குப் போனவ காதுத் திருகு ரெண்டும் ஒரு சேர எப்படிக் கழண்டு விழும். இதிலே ஏதோ கெட்ட சூசகம் இருக்குமோன்னு பயந்தேன். குருக்களய்யாவைக் குறி கேட்கலாம்னு சொன்னேன். நீங்கதான் வேணும்னுட்டீங்க. ஏதாவது பரிகாரம் அப்பவே செஞ்சிருந்தா இப்படியெல்லாம் ஆகியிருக்காதுங்க.''

''எதுக்குனு பரிகாரம் செய்யறது. காதுக் கம்மல் தொலைந்ததுக்கா, நித்யானந்தன் ஒழுங்காக் காலேஜுக்குப் போகணும்னு! பரிகாரம் செய்து நம்ம விருப்பப்படி எல்லாத்தையும் மாத்திக்க முடியும்னு, தலைவிதின்னு ஒண்ணு எழுதியிருக்கவே மாட்டானே... கவலைப்படாதே ஞானம். மேலே ஒருத்தன் இருக்கான். நாம் யாருக்கும் ஒரு கெடுதலும் இந்த ஜென்மத்திலே செய்யல்லே. எல்லாம் நல்லபடி முடியும் பாரு.'' வாய் பேசினுலும் அவர் மனத்தில் அப்படி நல்லபடியாக முடிய வேண்டுமே என்ற ஆதங்கம் நிறைய இருந்தது.

''என்ன வாத்யாரய்யா.... பள்ளிக்கூடம் போகல்லியா. ஓகோ இன்னிக்கு இரண்டாம் சனிக்கிழமையில்லே. வாத்யாருங்க பாடு யோகம்தான். வருஷம் முழுக்க முழுப் பரீட்சை, அரைப் பரீட்சை, கால் பரீட்சை, அரையே அரைக்காப் பரீட்சை என்று சும்மா வீட்டிலே உட்கார்ந்திருக்கலாம். ''தமிழ்ச் செல்வனும், பன்னீர்ச் செல்வமும் மிக சுவாதீனமாகக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைய, ஏற்கெனவே மனம் கொந்தளித்துக் கொண்டிருந்த சுந்தரம் வெடித்தார். ''ஆமா, நாங்கள்ளாம் உழைக்காம, வீட்டிலே உட்கார்ந்து, தூங்கி, பொறத்தியானுக்கு வால்பிடிச்சுத்தான் சோறு சமைச்சுச் சாப்பிடறோம். யாரு பேசறதுங்கற விவஸ்தையில்லே....?''

தமிழ்ச் செல்வன் அவரை அலட்சியத்துடனும், வெறுப்புடனும் பார்த்தான். ஞானத்தின் முகத்தைப் பார்த்துச் செயற்கையாக முகம் மலர்ந்து, ''அய்யா கோவமா இருக்காப்பல. நீங்க கொஞ்சம் வீட்டுப் பக்கம் வாங்க. பேசணும்...'' என்றான்.

''யாரும் எங்கேயும் வரமாட்டாங்க'' என்று சுந்தரம் குரலெடுத்துக் கத்தினுர்.

''அட..... ஸ்டூடண்ஸ்களைக் கத்திக் கத்தி, வாத்யாரய்யாவுக்கு அதே பழக்கமாயிடுச்சு. அவரு சொல்றதும் சரிதான். தாய்க்குலம் தேடி வரக் கூடாது. நாங்களே அப்புறம் வந்தாப் போச்சு'' திரும்பி நடந்த 'பிரமுகர்'களின் துண்டு தரையில் எழுதியிருந்த கோலத்தை அழித்து, சித்திய மாவாக்கியது.

(தொடரும்)



ஏமாந்தவர்கள்...

அந்த இரு இளம் பெண்களுக்காக எத்தனையோ கதவுகள் திறந்து விடப்பட்டிருக்கின்றன. கண் தானம் கேட்க வந்த அவர்களுக்கு உயிரையே தானமாகத் தரவும் சில வாலிபர்கள் முன்வந்ததுண்டு.

திறந்த நிலையில் நின்ற கதவுகள் அவர்களை வரவேற்க, அந்தப் பெரிய வீட்டுக்குள் நீலாவும் மாலாவும் நுழைந்தபோது முப்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் நாற்காலியில் அமர்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார்.

''நீங்களெல்லாம் யாரு?''

''பெண்கள்! தெரியலையா?''

அவர் சிரித்தேவிட்டார்.

நீலமணிக் கண்களைச் சுழற்றி நீலாதான் முதலில் விஷயத்துக்கு வந்தாள். ''நாங்க கண் அன்பளிப்பு வங்கியிலேர்ந்து வந்திருக்கோம், கண் தானம் பெறுவதற்காக....''

''ஓஹோ!''

''இருண்டு கிடக்கும் எத்தனையோ பேருடைய வாழ்க்கையிலே உங்களாலே ஒளியேற்றி வைக்க முடியும்.''

''அப்படியா?''

''பெரும்பெரும் தலைவர்களெல்லாம் கண் தானம் கொடுக்க முன் வந்திருக்காங்க. பிரதமர் ராஜீவ் காந்தியையே உதாரணமா எடுத்துக்கோங்களேன்'' என்றாள் மாலா.

''நாம் இறந்த பிறகும் பிறருக்குப் பயன் படக் கூடிய ஒரே உறுப்பு கண்தான்'' என்று நீலா மேலும் விளக்கினாள்.

அவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''நான் என்னவோ தரமாட்டேன்னு சொன்ன மாதிரி நீங்களெல்லாம் பேசிக்கிட்டே போறீங்களே... தானத்திலேயே உயர்ந்தது கண்தானம்னு எனக்கும் தெரியும்'' என்று பட்டென்று பேசினார்.

''ஐயய்யோ! வித்தியாசமா எடுத்துக்காதீங்க. உங்க நண்பர்களுக்கும் எடுத்துச் சொல்ல உதவுமேன்னுதான் இதெல்லாம் சொல்றோம்'' என்றாள் மாலா.

''அப்படீன்னா நீங்க ஓர் ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட வேண்டியிருக்கும்'' நீலா ஃபாரத்தை நீட்டினாள்.

''அவ்வளவுதானே.... அதுக்கு முன்னாலே ஒரு சந்தேகம்....'' என்று இழுத்தார்.

''கேளுங்க சார்'' இருவரும் கோரஸ் பாடினார்கள்.

''தற்கொலை செய்துக்கிட்டவங்க கண் கூடப் பிறருக்குப் பயன்படுமா?''

''ஏன் சார் அப்படிக் கேட்கறீங்க?''

''நான் வாழ்ந்துதான் என்ன பண்ணப் போறேன்'' அவர் விரக்தியாகப் பேசினார். அவர் முகத்தில் சோகம் தாண்டவமாடியது.

''நீங்க உங்க கண்ணையே தியாகம் செய்யறவர். உங்களுக்கு அப்படி ஒரு நிலை ஏற்படக்கூடாது'' என்று நீலா அன்பு ததும்பினாள்.

''ஐயோ, என்னைத் தியாகி ஆக்கிடாதீங்க. இத்தனை நேரம்.... இவ்வளவு நேரம்...

''என்ன சார்!''

''உங்க கால்கள் எங்கே இருக்குன்னு மட்டும் காட்டுங்க! நான் விழுந்து மன்னிப்புக் கேட்கணும். உங்களையெல்லாம் ஏமாத்திட்டேன்.

''சார் நீங்க....''

''ஆமாம். பார்வை இழந்தவன். மன்னிச்சோம்னு ஒரு வார்த்தை சொல்லுங்க.''

''கண்ணிருந்தும் குருடர்களா நாங்கதான் நடந்துக்கிட்டோம்!''

அந்த இரு பெண்களின் கண்களிலும் கண்ணீர் ததும்பியது.

— கே. எம். சம்சுதீன்

பெரியவர் சொல்லிக் கொண்டே வந்தார்.

கோபம் அலைபாய்ந்த தன் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அவர் கூறிய பாதையிலெல்லாம் வண்டியைச் செலுத்தினான் மனோகரன். முட்செடிகள் இருமருங்கிலும் ஆலமரமாய்ப் பேயாட்டம் போட்டுக் கொண்டிருக்க, அதன் நடுவே கோடு கிழித்தவாறு சென்ற குறுகிய பாதையின் இருட்டை, ஹெட்லைட்டின் வெளிச்சம் விலக்கியபடி இருந்தது.

"யோவ்.... இன்னும் எத்தனை தூரமய்யா போவணும்....?" கேட்டபடியே வேகத்தைக் குறைத்தான் மனோகரன்.

"இன்னும் கொஞ்சந் தூரம்தான் தம்பி...!" கெஞ்சும் விதத்தில் பதிலளித்த அப்பெரியவர், "கோபிச்சுக்காதீங்க தம்பீ...

"ஏன் தம்பீ.... வண்டி வருமா?"

"எங்கே போவணும்?" உற்சாகமாகக் கேட்டான்.

"அஞ்சு முக்கு வரைக்கும் போகணும். அங்கே போயி ஒரு பிரசவ கேஸைக் கூட்டிக்கிட்டுப் பெரியாஸ்பத்திரி வரைக்கும் போகணும்! எவ்வளவு ரூவா கேட்கறே....?"

இப்போது வண்டியில் வரும் பெரியவர்தான் கேட்டார்.

அவரைப் பார்த்தான் மனோகரன். அழுக்கடைந்த வேட்டியும், தோளில் கிடந்த கிழிந்த துண்டும் கலைந்த தலைமுடியும் அவர் ஏழை என்று சொல்லாமல் சொல்லியது. அந்தப் பெரியவரைப் பார்த்தவுடன் பரிதாபப்பட்டு விட்ட அவன்,

"நாற்பது ரூபா கொடுங்க...." என்று நியாயமான வாடகை கேட்டான்.

ஆட்டோ

கா.சு.வேலாயுதன்

பாவி மக, அவ வெளியே இருந்த தேதியைச் சரியா நியாபகம் வெச்சுக்காம.... இன்னும் குழந்தை பிறக்கப் பத்து நாளாகும்னு சொல்லி ஏமாத்திட்டா....! இப்ப நடு ஜாமத்துல வயத்தை வலிக்குதுன்னு உக்காந்துட்டா. அவ புருஷனும் குடிகாரப் பய.... இன்னும் வீடு வந்து சேரலே.... ம்.... என்ன செய்யறது? புள்ளைப் பேறு நேரங் காலம் பார்த்துட்டா சாமி வருது?" என்று அங்கலாய்க்கவும் செய்தார்.

அதன்பின்பு சிறிது நேர மௌனம். ஆட்டோவின் இரைச்சல் மட்டும் அந்தக் காட்டு வெளியில் எதிரொலித்தபடி இருந்தது! மனோகரனுக்கு மெல்லவும் முடியாத, விழுங்கவும் முடியாத நிலை....

நாளை அவசரமாகத் தன் தங்கையின் பிரசவச் செலவுக்காக அம்மாவிடம் நூறு ரூபாய் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தான். அதற்காக மாலை மணி நாலிலிருந்து ஓயாமல் அலைந்தும் ஒரு வாடகை கூட கிடைக்கவில்லை. தன் ஒருநாள் வாடகைக் கலெக்ஷனைப் பிடித்துக் கொண்டு, அப்புறம் தன் தங்கையின் பிரசவச் செலவுக்குப் பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவன் மனம் குறியாய் இருந்தும், வீண் அலைச்சல் அவனை ஆரம்பத்திலேயே சோர்ந்து போகச் செய்தது. எனவே வேறு வழிதோன்றாமல் தன் மாமூல் ஆட்டோ ரிக்ஷா ஸ்டாண்டில் தன் வண்டியை நிறுத்தியிருந்தான்.

அப்போது சரியாக மணி இரவு பதினொன்றரை....

"நாற்பது ரூவாயா.....?" அவர் அதற்கே வாயைப்பிளப்பதை அந்தக்கரிய இருட்டிலும் அவருடைய குரல் சுட்டிக் காட்டியது.

"ஏம்ப்பா.... கொஞ்சம் குறைச்சுக்கக் கூடாதா....?" என்று மேலும் அவர் கேட்டார்.

"என்ன பெரியவரே.... அஞ்சுமுக்கு இங்கிருந்து பதினஞ்சு கிலோமீட்டர். அங்கிருந்து பெரியாஸ்பத்திரி ஏழு கிலோ மீட்டர்.... அப்புறம் வெயிட்டிங் சார்ஜ் எல்லாம் வேறே வரும்....! இராத்திரி நேரத்துலே நான் நாற்பது ரூபா வாடகை கேட்கறேன்னு, ஏதோ பிரசவக் கேஸுங்கற பரிதாபத்துலதான்... தெரிஞ்சுக்க...." என்றவன்,

"சரி சரி.... எதுக்குக் கச,கசன்னு பேசிட்டு? முப்பத்தஞ்சு ரூபா கொடுத்துடு! இதுவே மீட்டர் சார்ஜை விடக் குறைவாத்தான் இருக்கும்னு நெனைக்கிறேன். சரி, வண்டியிலேறு....!"

பெரியவர் சற்று நேரம் யோசித்தவர், மேலே ஏதும் பேசாமல் வண்டியிலேறி உட்கார்ந்துவிட்டார்.

இப்போது அவர் சொல்லும் பாதையையெல்லாம் பார்த்தபிறகு, மனோகரனுக்கு ஏன் இந்த வாடகைக்கு வந்தோம் என்றிருந்தது. அதுவும் முப்பத்தைந்து ரூபாய்க்கு...! 'நம்ப ஆட்டோ ஸ்டாண்டுலே யாருமே இந்த வாடகைக்கு இவ்வளவு தூரம் வரமாட்டாங்க!' அவன் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டன.

"தம்பீ.... இதோ இந்த இடந்தான், வண்டியை ஓரமா நிறுத்துங்க....!" என்று கைகாட்

டியபடி கத்தினார். உடனே மனோகரன் வண்டியை அப்படியே ஓரங் கட்டித் திருப்பி நிறுத்தினான். கிழவர் சற்றும் தாமதிக்காமல் இருளில் குதித்து வெளியே ஓடினார்.

மனோகரன் ஆட்டோவின் முன்புறத்தில் அப்படியே சாய்ந்து நின்றபடி தன் பேக்கட்டில் இருந்த கணேஷ் பீடியை எடுத்து உதட்டில் செருகிக் கொண்டு, தீக்குச்சியைக் கிழித்தான். அதன் ஒளிபட்டு எதிரே தெரிந்த குடிசை ஒன்றிலிருந்து இரண்டு மூன்று உருவங்கள் வெளிவருவதைக் கண்டு, பீடியைப் பற்ற வைக்காமல் அப்படியே நிறுத்திவிட்டு, குடிசையிலிருந்து வெளிப்பட்ட உருவங்களையே கவனித்தான்.

''டேய், குஞ்சப்பா எழுந்திரிடா.... உம் பெண்டாட்டியைக் கூட்டிக்கிட்டு ஆஸ்பத்திரி போறேன். துணைக்குக் கூட வாடா.....!''

''ம்.... அம்மாவைக் கூட்டிட்டுப் போ!'' படுத்திருந்த உருவம் எழுந்திருக்காமலே பதில் சொன்னது.

''ம்.... பெண்டாட்டி வலியால துடிச்சிட்டிருக்கா..... இந்நேரம் வரைக்கும் குடிச்சுட்டு ஊர் சுத்திட்டு வந்துட்டு இப்பத் தூக்கத்தைப் பாரு....! வாடான்னு.....''

வெளியே படுத்திருந்த அந்த உருவத்தைப் பிடித்திழுப்பது அந்தப் பெரியவர்தான்!

ச்சூ.... தூரப்போ அப்பாரு.....!'' படுத்திருந்தவன் உதறிய உதறலில் தடுமாறிக் கீழே விழுந்தார் பெரியவர். தடுமாறியபடியே எழுந்தவரை குடிசையினுள்ளே நின்ற பெண்மணி ஓடி வந்து தாங்கிக் கொண்டு:

''அவனைப் போயி ஏன் எழுப்பறீங்க? அவனே குடிகார நாயி.... அவனை நம்பினு....'' மேலும் ஏதோ கெட்ட வார்த்தையில் திட்டியவள், ''நடங்க நாம போகலாம், அருக்காணி.... மெதுவா எழுந்திரிச்சு வாம்மா....!''

அவள் அழைப்புக் குரல் கேட்டு வந்த அருக்காணியை அவள் தாங்கியபடி, கையைப் பிடித்து நடத்தியபடி ஆட்டோவை நோக்கி வந்தாள். ஆனால் அந்தப் பெரியவரோ அந்தக் குடிகாரனிடம் மேலும் ஏதோ வலுக்கட்டாயமாகக் கேட்டுக் கொண்டேயிருந்தார்.

''டேய் சாயந்தரம் கூலி வாங்கின பணம் எங்கேடா....?''

கத்தினார். அவன் பதில் பேசவில்லை. பெரியவர் விடவில்லை. அவனை உலுக்கினார்.

''டேய்.....!'' மீண்டும் கூப்பிட்டார்.

''ம்....!''

''எங்கேடா கூலிப் பணம்?''

''கூலியுமில்லே, ஒண்ணுமில்லே, போ! நூத்தம்பது ரூபாக் கெடைச்சது. அதுல அம்பது ரூபாய்க்கு ஒரு 'ஆப்பு' வாங்கிக் குடிச்சிட்டேன். மீதியை நம்ப பரமசிவன் கிட்டே சாராயக் கடனுக்காகக் குடுத்துட்



'வ்' எதற்கு?

'உ' என்றால் உலகநாத பிள்ளை
'சி' என்றால் சிதம்பரனார்
'வ' என்றால்

அவர் பிறந்த ஊரா?
இல்லை! 'வந்தே மாதரம்'
என்பதைக் குறிக்கத்தான் 'வ' என்று
சேர்த்துக் கொண்டார்!

வ.உ.சி. மாவட்ட தொடக்கவிழாவில் சொன்னவர் 'குமரி அனந்தன்'

தகவல்: சிவ. மகேந்திரன்

டேன். பேசாமப் போவியா....!'' மேலும் ஏதோ உளறினான். பெரியவர் உண்மையிலேயே அதிர்ந்தார். வேறு வழியின்றி ஆட்டோவுக்குத் திரும்பினார்.

''என்னங்க.... செலவுக்குப் பணம் எவ்வளவு வச்சிருக்கீங்க....?'' ஆட்டோவில் போகும்போது, கூட வந்த அந்தப் பெண் சரசு கேட்டாள்.

''ம்....!'' என்று ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்ட பெரியவர்,

''இருவத்தஞ்சு ரூபாதான் இருக்கு சரசு.... இந்தப் பாவி மகன், குடிகாரப் பய, நூத்தம்பது ரூபா கூலிப் பணத்தையும் குடிச்சுப்புட்டு வந்து படுத்துக்கிடக்கானே, நான் என்ன செய்வேன்....!'' என்று புலம்பினார்.

''ஆட்டோவுக்கு வாடகை எவ்வளவு...?'' சொன்னார்.

''முப்பத்தஞ்சா! மீதி ரூபாய்க்கு என்ன பண்ணுவீங்க.....?''

''எப்படியோ சரி பண்ணணும்...!''

விரக்தியுடன் அவர் கூறியது, மனோகரனின் மனத்தில் முள்ளாகக் குத்தியது.

'நமக்கு இன்று வாடகைப் பணம் கிடைக்குமா?' எழுபது ரூபா பேச வேண்டிய வாடகையை முப்பத்தஞ்சு ரூபாக்குப் பேசியிருக்கோம். அதுவும் இப்படியா?'

மனத்திற்குள் முணுமுணுத்துக்கொண்டே வண்டியைக் கவர்ன்மென்ட் ஆஸ்பத்திரிக்குள் நிறுத்தினான்.

நீண்ட நேரமாகிவிட்டது.

அந்தப் பெண்ணை அட்மிட் செய்த பிறகு இப்போது குழந்தைகூடப் பிறந்திருக்குமோ என்னவோ, ஆட்டோவுடன் மனோகரன் மையிருட்டில் மரத்தடியில் நின்றுகொண்டேயிருந்தான். அவன் மனத்தில் கோபச் சுடர் தீ ஜ்வாலையை வீசிக் கொண்டிருந்தது.

.... முதலில் இந்தக் கிழவன் நம்மை அனுப்பி விட்டல்லவா சென்றிருக்க வேண்டும்? இன்னும் என்னதான் செய்து கொண்டிருக்கிறான்....? ம்....! பணமில்லேன்னு சொல்லிப் புலம்பிட்டே வந்தானே.... ஏதாவது அப்படியே வேறு வழியில் புகுந்து ஓடி விட்டானோ?

அப்போது —

அவனது எண்ணத்தை மாற்றும் விதமாக வேர்க்க, விறுவிறுக்க அவனை நோக்கி வந்தார் அப்பெரியவர். வந்தவுடன் —

''தம்பீ....'' என்றிழுத்தார். மனோகரன் அவரை எரித்து விடுபவன் போல் பார்த்தான்!

''தம்பி.... தப்பு என்னோடதுதான். பொறுத்துக்குங்க. நான் எம் பையன் சம்பளத்தை நம்பி மோசம் போயிட்டேன். இப்ப..... வந்து...... இந்தாங்க இதுதான் எங்கிட்ட இருக்கு. கோபப்படாம வச்சுக்குங்க. உங்களுக்கு நாளைக்கு இதே இடத்துல மீதிக் காசை.....

அவர் முடிக்கவில்லை. அவர் நீட்டிய ரூபாய்த் தாள்களை வாங்கி எண்ணியவன் ஆத்திரத்தின் எல்லையை அடைந்தவனாக,

''யோவ், எதுக்கய்யா இருபது ரூபா? எனக்கு வர்ற ஆத்திரத்துல நீயுமாச்சு, உன் வாடகையுமாச்சு.... ஏய்யா உனக்கெல்லாம் எதுக்கய்யா ஆட்டோ....? ஆட்லேயே பிரசவம் பார்க்கிறதுதானே....?''

என்று மேலும் மேலும் மனோகரன் திட்டிக் கொண்டே போவதைப் பார்த்த கிழவர் நடுங்கிப் போனார். உடனே —

''இருங்க தம்பீ.... ஒரு நிமிஷம்.... வந்துடறேன்....'' என்று கூறிவிட்டுப் போக எத்தனித்தார். 'டக்'கென்று அவர் சட்டையை எட்டிப் பிடித்துக் கொண்டான் மனோகரன்.

''எங்கேய்யா நழுவப் பார்க்கறே?'' விழிகளை உருட்டியபடி கேட்டான்.

''தம்பீ, சாமி சத்தியமா நான் எங்கேயும் போகமாட்டேன். போனவுடனே பணத்தோட வந்துடறேன்.''

அவருடையகெஞ்சலில்ஒருவிதநம்பிக்கை பிறக்க, அவர் சட்டையிலிருந்து கையை எடுத்தான் மனோகரன். பெரியவர் மறுபடியும் அந்தப் பிரசவ வார்டினுள் சென்று மறைந்தார்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது....

பெரியவர் சொல்லி விட்டுச் சென்ற ஒரு நிமிஷம் ஓடி எத்தனையோ நிமிஷங்களை விழுங்கிவிட்டன! அதற்குமேலும் பொறுமை தாங்க மாட்டாமல் டிரைவர் மனோகரன் பிரசவ வார்டை நோக்கி வேகமாக நடந்தான். அங்கு பல்வேறு விதமான மருந்து வாசனைகளும், பச்சிளங் குழந்தைகளின் அழு குரலும் கேட்டதேயொழிய அந்தப் பெரியவரை மட்டும்காணவேயில்லை. கடைசியாக —

டாக்டரின் அறையை நெருங்கியவன் அதனுள்ளிருந்து பேச்சுக் குரல் கேட்கவே நிதானித்தான். அறையினுள் ஒலித்த குரலில் வண்டியில் வந்த பெரியவரின் குரலும் கலந்திருக்கவே கூர்ந்து கவனித்தான்.

''ஐயா.... தயவு செஞ்சு இப்போதைக்கு

ஒரு ஐம்பது ரூபா குடுங்கய்யா....! அப்புறமா எம் மருமக ஆபரேஷன் முடிஞ்சவுடனே அதுக்கு வர்ற இனும் பணத்துலே அதைப் புடிச்சுக்குவீங்களாம்.... ஆட்டோக்காரர் வேறே தொந்தரவு பண்றார்.''

''யோவ் பெரியவரே! என்னய்யா உன்னோட இந்த அர்த்த ராத்திரியிலே பெரிய ரோதனையாப் போச்சு.... ம்.... உன் மருமகளே இப்ப இங்கே அட்மிட் பண்ணினதே பெரிய விஷயம். அதுல குழந்தைய ஆபரேஷன் பண்ணி எடுத்து, அதுவும் செத்துடுச்சு. இதுதான் முதல் பிரசவம்னு வேறே சொல்றே? இந்த நிலைமையில எப்படிய்யா கு.க. ஆபரேஷன் செய்யறது? நீ இவ்வளவு தூரம் கெஞ்சறதுனால நாளைக்கு ஆபரேஷன் வச்சுக்கலாம்னு நெனச்சேன். நீ என்னடான்னா, ஆபரேஷன் செஞ்ச பிறகு கொடுக்க வேண்டிய இனாமை இப்பவே கேட்டு தொந்தரவு பண்றியே....!''

டாக்டர் உச்ச ஸ்தாயியில் பேசியது அந்தக் கட்டட வராந்தாவில் எதிரொலித்தது! இதையெல்லாம் கூர்ந்து கவனித்த மனோகரனுக்கு முன்பு இருந்த கோபம் தூர ஓடி ஒளிந்து கொண்டது. பெரியவர் மேல் திடீரென்று ஒருவிதப் பச்சாதாபம் தோன்றி மறைந்தது.

நமக்கு வாடகை கொடுக்கக் காசில்லாமல், தன் மருமகளின் பிரசவத்தில் குழந்தை இறந்து பிறந்தும், அவளுக்குக் கு.க. செய்யத் துணிந்துவிட்டாரே இப்பெரியவர்! பாவம், இவருடைய வேதனைகளை கண்முன்னே கண்டும், நாம் இரக்கப்படாமல் போய்விட்டோமே.... நாம் மனிதாபிமானமே இல்லாமல் அவரை அளவிற்கதிகமாகவே பணம் கேட்டுத் துன்புறுத்திவிட்டோமோ....? சரி, அதுதான் போகட்டும். இந்த டாக்டரும் மனிதர்தானே, படித்தவர்தானே, அந்தப் பெரியவர்மேல் கொஞ்சம் இரக்கம் காட்டக் கூடாதா? குழந்தையேயில்லாத பெண்ணுக்கு கு.க. செய்ய நேரம் குறித்துவிட்டாரே...!

எண்ணங்களை மனத்தினுள் ஓடவிட்டவன் மனத்தில் என்ன தோன்றியதோ விருட்டென டாக்டரின் அறைக்குள் பிரவேசித்தான். டாக்டரை ஏறிட்டுப் பார்த்தவன் பார்வையில், 'நீயெல்லாம் ஒரு டாக்டரா?' என்ற ஏளனம் மின்னியது.

''தம்பீ.... அதுக்குள்ள நீங்க இங்கே...!'' வார்த்தைகளால் தடுமாறிய பெரியவரின் கையைப் பிடித்த மனோகரன், ''பெரியவரே, இந்தாங்க நீங்க கொடுத்த ரூபா கூட என்னோட இருபது ரூபாவும் இருக்கு. செலவுக்கு வச்சுக்குங்க. எனக்காகக் குழந்தையில்லாத ஒரு பெண்ணுக்கு ஆபரேஷன் செய்ய வேண்டாம். நல்லபடியாக் கவனிச்சு வீட்டுக்குக் கூட்டிட்டுப் போங்க. அடுத்த பிரசவத்துல யாவது அவங்களுக்கு ஒரு வாரிசு நல்லபடியா உருவாகட்டும்....!''

என்று கூறியபடி தன்னிடமிருந்ததையும் அவரிடமே கொடுத்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்து வெளியேறினான்.

ராஜாஜி வாழ்க்கை வரலாறு—III
ராஜ்மோகன் காந்தி

அமைதிக்குக் களங்கம்!



15

குதிரைப் பந்தயத்தைச் சூதாட்டம் என்ற முறையிலே ஸி.ஆர். முன்பு எதிர்த்திருந்தார். ஆனால் கல்கத்தா குதிரைப் பந்தய நிர்வாகிகள் 'கவர்னர் கோப்பை'யை வழக்கம் போல் அவர் வந்து வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது ஒப்புக் கொண்டார்! இதற்கு ஒரு வாரம் கழித்துப் புதிதாக நிறுவப்பட்டிருந்த 'இந்தியா சுதந்திரக் கோப்பை'யையும் தமது கரத்தாலேயே வழங்கினார்! கல்கத்தா குதிரைப் பந்தயத்தை நிர்வகித்தவர்களில் பெரும்பாலோர் பிரிட்டிஷ் வர்த்தகர்கள். அந்தச் சமுதாயத்தின் நம்பிக்கையைத் தொடர்ந்து நிலை நிறுத்திக் கொள்ள அவர் இப்படிச் செய்ததாகத் தோன்றியது.

இதனைப் பத்திரிகைகள் பெரிதாக வெளியிட்டன. பூனாவிலிருந்து/ வல்ஜி தேசாய் என்ற காந்தியவாதி, "ஸி. ஆர். இந்திய சுதந்திரத்தை அசிங்கப்படுத்துகிறார்" என்பதாக அவருக்கே கடிதம் எழுதினார். ஸி. ஆர். தமது பதில் கடிதத்தில், "ஒரு குதிரையின் சொந்தக்காரருக்கோ அல்லது பயிற்சியாளருக்கோ ஒரு கோப்பையை வழங்குவது, பல்கலைக் கழகப் பரிட்சையில் முதலாவதாக வரும் மாணவருக்குப் பதக்கங்கள் பரிசளிப்பது போன்றதுதான்" என்று குறிப்பிட்டார். ஆனால் தமது நிலை சரியானது தானா என்று அவருக்கே சந்தேகமாய் இருந்திருக்க வேண்டும். "ஒருவேளை குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தமட்டில் நான் கூறுவது தவறாகக் கூட இருக்கலாம்" என்று ஒப்புக் கொண்டார் ஸி. ஆர்.!

இனக் கலவரங்களுக்கு இடம் தராமல் அமைதி காக்க, ஸி. ஆர். ராணுவத்தினரை ஆங்காங்கே பார்வையாக நிறுத்தி வைத்தார். இது ஒரு தடுப்பு நடவடிக்கையாக இருந்தது. அதே நேரத்தில், திருப்பித் தாக்குவது, பழிக்குப் பழி வாங்குவது என்பதெல்லாம் எவ்வளவு அபத்தமான காரியங்கள் என்பதையும், அன்பே—நல்லெண்ணமே சாசுவதமானது என்பதையும் சித்தாந்தரீதியாக மக்கள் மனங்களில் பதியச் செய்தார். பாகிஸ்தானில் இப்போது பிரதம மந்திரியாக விளங்கிய லியாகத் அலிகான், "நீங்கள் கவர்னர் பதவி ஏற்றதிலிருந்து கல்கத்தா அமைதியாக இருக்கிறது" என்று ஸி. ஆருக்குத் தமது கடிதத்தைத் தொடங்கிவிட்டுத் தொடர்ந்து, கிழக்கு பஞ்சாபின் நிலவரம் பற்றி குறை கூறியிருந்தார். இதற்கு உடனே பதில் எழுதிய ஸி. ஆர்., 'பதிலடி தருவது என்பது கர்வத்தின்பாற்பட்டது' என்றும் 'கொடுமையானது' என்றும் குறிப்பிட்டார். 'வெறுப்பை வளர்த்துக் கொள்வது மதிப்பற்றது' என்றார். பல்தேவ் சிங்கும் பஞ்சாப் படுகொலைகள் பற்றி ராஜாஜிக்குக் கடிதம் எழுதினார். அவர் மேற்கு பஞ்சாபில் நடந்திருந்த வன்முறைகளைச் சுட்டிக் காட்டியிருந்தார். இவருக்கும் லியாகத் அலிகானுக்கு எழுதியது போன்ற பதிலையே ஸி. ஆர். எழுதினார். 'திருப்பித் தாக்குதலுக்கு இடமளிக்கவே கூடாது. அதற்கு அனுமதிப்பது நமது கஷ்டங்களை அதிகரிக்கவே செய்யும்.'

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள வெறுப்பு மறைந்து, அதனிடத்தில் சிநேக பாவத்துடன் கூடிய போட்டா போட்டி ஏற்பட வேண்டும் என்று விரும்பினார் ராஜாஜி. "திறமையான, சிக்கனமான நிர்வாகத்தில் இந்தப் போட்டி மனப்பான்மை இருக்க வேண்டும். இளமை ததும்பும் பாகிஸ்தான் நிர்வாகம், வயதான இந்திய நிர்வாகத்தினை ஆக்கபூர்வமான முன்னேற்றத்தில் தோற்கடிக்குமானால் மிகவும் மகிழ்வேன்" என்றார் ஸி. ஆர். 'கசப்பு உணர்வே இங்கு இல்லை' என்று திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலமே அதனைக் கரைந்து போகச் செய்தார் ஸி. ஆர். ஈத் பெருநாளையும் துர்க்கை பூஜையையும் ஒரே சமயத்தில் கொண்டாடுகிற விதமாக ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியபோது, "பாகிஸ்தான் தனது அந்தஸ்திலும் சக்தியிலும் தாழ்ந்து போக வேண்டும் என்பதே இந்தியாவின் நோக்கம் என்று யாரும் தவறாகக் கணித்துவிட வேண்டாம்! அதேபோல இந்தியா நலிவுற்றுப் போக வேண்டும் என்று பாகிஸ்தான் எண்ணுவதாக யாரும் நம்ப வேண்டாம்" என்று கூறினார் ஸி. ஆர்.

வங்கப் பத்திரிகைகள் இனக் கலவரம் அதிகரிக்க இடம் தராமல் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டதை மனம் விட்டுப் பாராட்டினார் ஸி. ஆர். கல்கத்தாவின் முஸ்லிம் நாளிதழான "ஸ்டார் செய்தி" ஆக்கபூர்வமான தலையங்கம் எழுதியபோது அதன் ஆசிரியருக்கு ஸி. ஆர். ரத்தினச் சுருக்கமாக, "உங்கள் தலையங்கம் படித்தேன்; பாராட்டுகிறேன்" என்று வாழ்த்திக் கடிதம் எழுதினார். இந்தியாவில் வாழும் முஸ்லிம்களை இந்நாட்டுக்கு விசுவாசத்துடன் இருக்குமாறு பலர் வற்புறுத்தி வந்தார்கள். ஆனால் ஸி. ஆர். போல பேசியவர்கள் யாருமில்லை. அவர் சொன்னார்:

"இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் இந்த நாட்டினிடம் விசுவாசமாகத்தான் இருக்கிறார்கள் என்பதை நான் அறிந்திருக்கிறேன். இப்படி விசுவாசத்துடன் இருப்பதில் அவர்கள் மிக உயர்ந்த தியாக மனப்பான்மையுடன் செயல்பட வேண்டியுள்ளது என்பதையும் உணர்ந்திருக்கிறேன். இதில் யாருக்காவது சந்தேகம் இருக்குமானால், அவர்கள் பாகிஸ்தானில் வாழும் ஒரு ஹிந்துவாகத் தன்னைச் சற்று நேரம் கற்பனை செய்து கொண்டு பார்க்கட்டும். அந்த நாட்டின் அரசுக்கும் கொடிக்கும் விசுவாசமாக நடந்து கொள்வதாக அந்த ஹிந்து எண்ணிப் பார்த்துக் கொள்ளட்டும்!"

ஸி. ஆரின் வார்த்தைகளை கல்கத்தா முஸ்லிம் சமூகம் வரவேற்றது. "ஸ்டார் ஆஃப் 'இந்தியா" பத்திரிகை, இந்திய நாட்டில் முதல்முறையாக இந்திய முஸ்லிம்களின் தேசப்பற்றை மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டு ஒரே ஒரு குரலேனும் ஒலித்ததில் தனது ஆழ்ந்த திருப்தியைத் தெரிவித்தது.

இந்த சுமுகமான நிலைமைக்குத் திருஷ்டிப் பரிகாரம் போல சுதந்திர தினத்துக்கு இருபது நாட்களுக்குப்பின் கல்கத்தாவின் அமைதிக்கு ஒரு களங்கம் ஏற்பட்டது! அது காந்திஜியை உண்ணா நோன்பு மேற்கொள்ளவும் செய்து விட்டது!

(தொடரும்)

தமிழாக்கம்: **கி. ராஜேந்திரன்**

வெள்ள நிவாரண நிதிக்கு பம்பாயிலுள்ள சினிமா நட்சத்திரங்கள் பணம் வசூல் செய்தனர். அப்போது முக்ரி என்ற நடிகர் வாயை, "ஆ"வெனத் திறந்து கொண்டிருந்தார். யாரோ ஒருவர் விட்டு எறிந்த காசு, அவருடைய வாய்க்குள் விழுந்தது. அதை அவர் விழுங்கி விட்டார்.

அசோக்குமார்தான் பொருளாளர். அவர் முக்ரிக்குக் கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் எழுதினார்:

"எப்படி இருந்த போதிலும் தாங்கள் விழுங்கிய பணத்தைத் திருப்பித் தந்தேயாக வேண்டும். பொதுப் பணத்தை விழுங்கக் கூடாது என்பது நினைவிருக்கட்டும்."

— எஸ். ரஜினிப்பிரியன்.





கிரிக்கெட் வீரர் 'ரவி சாஸ்திரி' 'நிர்லான்' நிறுவன வேலையை விட்டுவிட்டு, 'டிஸ்கோ' (TISCO) நிறுவனத்தில் சேர்ந்துவிட்டார். சம்பளம் எவ்வளவு தெரியுமா? ஆண்டுக்கு 1½ லட்ச ரூபாய்! அதாவது மாதம் சுமார் 13 ஆயிரம் ரூபாய்!

இருந்தாலும், இவர் திருமணம் செய்து கொள்ளப் போகும் நடிகை 'அம்ரிதா சிங்' இதை ஒரே படத்தில் சம்பாதித்து விடுவாரே!

— சம்பத்குமாரி

ஆதாரம்: ஸண்டே

ரயில்வே யார்டில் ஒதுங்கி நிற்கும் கூட்ஸ் வேகனில் மெதுவாக, மிக மெதுவாக அந்த இளசுகள் காதலில் ஈடுபடுவதைப் பார்த்து, அட இளமை, இனிமை என்று எதிர்பார்க்கும்போது திடீர் என்று அந்தத் திருப்பம்.

அந்த வேன் வந்து நிற்கிறது. கதவு திறந்து ஒரு கதிர்வீச்சுத் துப்பாக்கியால் குறி பார்த்து (ப்ளக், ப்ளக் என்று தண்ணீர் மட்டம் ஏறி இறங்கும் மிஷின் வேறு) ரயில் பெட்டியில் ஒளிரும் எலக்ட்ரானிக் கடிகாரத்தைப் பார்த்துச் சுட —

கோரம்! கோரம்! ரயில் பெட்டி உருகுகிறது. அந்த ஆடையற்ற பெண் உருகுகிறாள். அந்தப் பையன் உருகுகிறான்.

ஆரம்ப ஜோர், ஜோர்தான்.

அந்தத்துப்பாக்கி ஆசாமி ஒரு யூனிவர்சிடியிலிருந்து துப்பப்பட்ட மாஜி புரொஃபஸர். அந்த புரொஃபஸர் இந்தக் கதிர்த் துப்பாக்கியைக் கண்டு பிடித்துச் சுட்டு, பயமுறுத்தி, நகர மேயரிடம் பணம், மேலும் பணம் என்று கறக்கப் பார்க்க,

இந்த புரொஃபஸரைக் கண்டுபிடிப்பதற்காக ஓர் இளம் போலீஸ் அதிகாரி புறப்பட,

கண்ணாமூச்சி, கார்—சேஸிங், கைகலப்பு என்று மாற்றி மாற்றிக் கொண்டு போகிறார்கள்.

இந்த போலீஸ்கார கதாநாயகன் நம் தமிழ்நாயகன்கள் போலவே காதலி இறந்தவுடன் தான் மனிதருக்கு ஆவேசம் வருகிறது. அதற்குப் பின்னர்தான் சடசடவென்று குண்டு மழையாய்ப் பொழிகிறார்.


கடைசியில் அந்தப் பெரிய மெஷின் மெஷினைய் அடுக்கி இருக்கும் தொழிற்கூடத்தில் நடக்கும் சண்டை மனத்தில் கொஞ்சம் திக்திக்கை ஏற்படுத்துகிறது. கடைசி கடைசியில் புரொஃபஸர் தன்வினை தன்னைச் சுடும் பழமொழிக்கேற்ப அவருடைய கதிராலேயே தாக்கப்பட்டு உருகிப் போகிறார்.

சொல்லப்பட்ட கதைக் கருவை வைத்துக் கொண்டு எவ்வளவோ பரபரப்பாக அடுத்தது என்ன, என்ன என்று கேட்கிறாற் போல் படத்தை நகர்த்தியிருக்கலாம்:

இந்தப் படம் என்னவோ, இது எத்தனாவது கொட்டாவி, இது எத்தனாவது கொட்டாவி என்ற கேள்வியுடனேயே நகர்கிறது. ப்ரின்ட் வேறு மகாமட்டம்.

அங்கங்கே பாலைவனச் சோலைகள்!

LIGHT BLAST







ஹரே ராதா, ஹரே கிருஷ்ணா

அடேங்கப்பா, எத்தனை நாளாயிற்று, கமலையும் ஸ்ரீதேவியையும் ஒன்றாய்த் திரையில் பார்த்து! ஸ்ரீதேவியின் முகத்தில் பழைய இயல்பான குறும்பு போய், ஒரு நட்சத்திர அந்தஸ்து திகட்டுவது மட்டும் கஷ்டமாயிருக்கிறது.

டைட்டில்ஸ் போடுமுன் மட்டும் பாரம் புரியத் தெலுங்கு வாசனையோடு ராணுவ ரகசியம், அதைக் காக்க முயன்றவரின் குடும்பமே டுமீல் டுமீல் என்று ஜீப்களை விரட்டிக் காண்பிக்கிறார்கள். அப்புறம், ஆஹா எத்தனை கலகலப்பான காட்சிகள்!

காலேஜில் எலெக்ஷன் போட்டியில் ஜெயித்து, அப்புறம் கல்யாணம் வரை வந்துவிட, கமலும் ஸ்ரீதேவியும் தூள் கிளப்புகிறார்கள். கொண்டையில் சிவப்பு பல்பு கண் சிமிட்ட, குறி சொல்ல வரும் கமல், லேடீஸ் ஹாஸ்டலில் பர்தா அணிந்த பேகமாய் இரவு ஸ்ரீதேவியோடு அதே அறையில் தங்க முனையும் கமல், கல்யாணத்தில் தன்னைப் போலவே ஒரு டூப்ளிகேட் வந்தான் என்று சொல்லப்பட்டதும், உச்சக் குரலில் சத்தம் போடும் கமல், கனவு டூயட் முடிந்ததும், ராஜா வேஷத்தோடு சுற்றிக் கும்மியடித்த குரூப் டான்ஸர்களை, ''உம்.... உம்... போயிட்டுப் பொங்கலுக்கு வாங்க'' என்று கிண்டலடிக்கும் கமல், தான் ஒரிஜினல்தான் என்பதை நிலைநிறுத்த, சர்ர்ர் என்று ஜிப் அவிழ்த்து, இடுப்பு மச்சத்தைத் தூக்கிக் காட்டும் கமல் என்று கமல் புராணம் பாடவே நிறைய பாராக்களை விரயம் செய்யலாம்.

முதலிரவில் மியாவ் என்று பூனை குறுக்கிட, இருவரும் அவசரமாய் விலகுவதும், 'இந்தக் கட்டில் பரம்பரை பரம்பரையா எங்க வீட்ல முதலிரவுக்குப் பயன்படும் கட்டில்' என்று ஸ்ரீதேவி சொன்னதும், ''போகட்டும், பெட் ஷீட்டையாவது மாத்தினாங்களா, இல்லையா?'' என்று கமல் கேட்பதும், கட்டிலைச் சமாதானப்படுத்திப் படுக்கு முன் காலை நேர கொக்கரக்கோ கேட்டு அசடு வழிவதும், நகைச்சுவைக்கு டைமிங் எத்தனை உதவி செய்கிறது?

க்ளைமாக்ஸில் புதையல் தேடி, குரூப்பாய்ப் புறப்பட்டுப் போகும்போதும், அநாவசியமாய் சீரியஸ்னஸ் வந்துவிடாமல் சமாளித்திருக்கிறார்கள். பரபரவென்ற சண்டைக் காட்சிகளிலும், வித விதமான காஸ்ட்யூம்களில் பழைய நடனங்களிலும் கமலஹாசனின் சிரத்தை தெரிகிறது.

இளையராஜாவின் இசையும், வாலியின் 'சாமக்கோழிதான் மச்சான்டி' டைப் பாடல்களும் ஒட்டாமல் ஒதுங்குகின்றன.

நாகரிகம் குலையாத முழுநீள நகைச்சுவைப் படம் கிடைப்பதே அபூர்வம் என்பதால், இந்தப் படத்திற்குத் தைரியமாகச் சிபாரிசு செய்யலாம்.

— ஜெயமன்மதன்

ஸ்மிதா பாடீல்

* எஸ். எஸ். மணி, திருவனந்தபுரம்.

? எம். ஜி. ஆர். என்ன செய்தாலும் அதனை குதர்க்கவாதத்தோடு எதிர்த்துக்கொண்டிருப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? (கல்கி உள்பட)

! 'எம். ஜி. ஆர். எதைச் செய்தாலும் எதிர்ப்பதில்லை; ஆனால் எதிர்க்கப்பட வேண்டிய செயல்களை ஜனநாயகக் கடமை கருதி எதிர்க்காமல் இருப்பதுமில்லை' என்பதை எத்தனையோ தடவை எடுத்துச் சொல்லியும் அதைப் புரிந்து கொள்ளாதது போல் குதர்க்கமாகக் கேள்வி கேட்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? (எஸ். எஸ். மணி உள்பட)

* பழி சுமத்துகிறீர்?





* உயர்வான கவிஞரிடம்



* பெண் குலத்துக்கு



* எதைச் செய்தாலும்...

* மா. அய்யப்பன். விருதுநகர்.

? நாட்டில் ஒரு கட்சி ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பிற கட்சித் தலைவர்களை ஆளும் இ. காங்கிரஸ் கட்சிக்குள் இழுக்கப் பிரதமர் ராஜீவ் முயன்று வருவதாக ஹெக்டே குற்றம் சாட்டியுள்ளது நியாயம் தானே?

! இல்லை. எதிர்க்கட்சிகள் கூடத்தான் ஒருங்கிணைந்து ஜனதா அமைத்தன; பின்னர் பாரத தேசம் அமைக்க முயன்றன. என்ன ஆயிற்று? எல்லாம் நெல்லிக்காய்களாக உருண்டன. ராஜீவும் இதே முயற்சியில்தான் ஈடுபடுகிறார்; ஓரளவு வெற்றியும் பெற்று வருகிறார். எனவே ஹெக்டேயின் பேச்சு பொறாமையால் விளைந்ததாகக் கருதப்படலாமேயொழிய நியாயமாகாது.

* இந்திரா கோபாலன், திருச்சி.

? நாட்டில் ஏதும் கிளர்ச்சி எழுந்தால் ஆளும் கட்சிக்காரர்கள் சுலபமாக அது எதிர்க்கட்சிகளின் விஷமத்தனம் என்று பழி சுமத்தி விடுகிறார்கள். ஹெக்டேயும் இதற்கு விதிவிலக்கல்ல என்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?

! சமீபத்தில் அங்கு நடந்த இனக்கலவரத்துக்குக் காங்கிரஸ்காரர்களின் தூண்டுதல் ஒரு காரணம் என்று ஹெக்டே கூறுவதை முழுவதுமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. குறிப்பிட்ட சிறுகதை ஒரு கன்னடப் பத்திரிகையில் வெளிவந்திருந்தால் மக்கள் சுயமாகச் சீற்றமடைந்து பொங்கி எழுந்ததாகக் கருதலாம். அதுவோ ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்தது. அது பரவலாக மக்கள் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்த, சிலர் முயற்சி எடுத்திருக்க வேண்டும். அந்தச் சிலர் எதிர்க்கட்சியினராக இருந்திருக்கவே அதிக வாய்ப்பு. மேலும் இதே கதை முன்பு மலையாளத்தில் வெளியானபோது ஒரு சிறு சலனம் கூடக் கேரளத்தில் ஏற்படவில்லை என்பதை எண்ணும் போது நமது சந்தேகம் வலுப்படவே செய்கிறது. இதனால் அந்தச் சிறு கதையையோ அது பிரசுரமானதையோ நாம் ஆதரிப்பதாக அர்த்தமில்லை.

* கே. என். ஸ்ரீனிவாஸ், சென்னை — 80.

? ''அவன் பின்னாலேயே போனேன்
'அன்பே' என்றேன்
திரும்பினான்.
அழகில்லை;
குரலில் இனிமையில்லை.
'அன்புத் தங்கையே' என்றேன்!''
— இந்தப் புதுக்கவிதை பற்றித் தங்கள் கருத்து?

! ஓர் அநாகரிகத்தின் விகாரத் தோற்றத்தைத் திரை விலக்கிக் காட்டும் வரிகள் என்றாலும் கவிதைத் தன்மை இவ்வரிகளில் இல்லை; ஸாரி.

* ஆர். சித்ரா, திருச்சி.

? எழுத்தாளர் க. நா. சுப்பிரமணியத்திடம் தங்களைக் கவர்ந்த அம்சம்?

! தன்னால்திட்டித்தீர்க்கப்பட்டஓர் அமைப் பிடமிருந்தேபரிசு பெறமுடிந்தஓர் அசகாயத் திறமை!

* கே. பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன் புதூர்.

? புதுக்கவிதையின் முன்னோடி என்று யாரைக் கூறுவீர்கள்?

! வடிவத்தை மறந்துவிட்டு உள்ளடக்கத் தைக் கவனிப்போமானால் சங்க காலத்தி லேயே புதுக்கவிதை எழுதப்பட்டுவிட்டது. சமீப காலத்துக்கு வந்தால் பாரதிக்குப் பிறகு தான் மற்றவர்கள். இன்றைய குடுமிப்பிடிச் சண்டைகள் அர்த்தமற்றவை.

* லதா ப்ரியன், கோவை.

? அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்; நம் அரசு?

! ஸ்லோ பாய்ஸன் என்று கூறிக் கொண் டிருந்தோம். ஜனவரி 1 ல் முதல் குவிக் பாய் ஸனும் வந்துவிடும். பணக்காரருக்கு ஸ்லோ பாய்ஸன் என்ற ஒய்ன் ஷாப்; ஏழைகளுக்கு குவிக் பாய்ஸன் என்ற கள்ளச் சாராயம்.'

* மு. வே. சத்தியமூர்த்தி, திருமயம்.*

? சட்டத்துக்காக மக்களா? மக்களுக்காகச் சட்டமா?

! சட்டத்துக்கு உட்பட்டு மக்கள் நடக்க வேண்டும் என்பது உண்மையே. ஆனாலும் மக்களுக்காகத்தான் சட்டம் என்பது மறக்கப் படவே கூடாது. அநீதியான சட்டத்துக்கு மக்கள் அடிபணிய முடியாது. ஆளும் கட்சி யினர் மிருக பல மெஜாரிட்டி கொண்டு தங்கள் வசதிக்காகச் சட்டத்தை இஷ்டப்படி மாற்றுகிறார்கள். அதே மிருக பலப் பெரும் பான்மையின் துணையுடன் சிறுபான்மையின ருக்கு அநீதி இழைக்கும் ஒரு சட்டத்தைத் திருத்த முடியாமல் முட்டுக் கட்டையும்போடு கிறார்கள். போராடாமல் என்ன செய்வது? போராட்டத்தின் பின்விளைவுதான் கருணா நிதி சிறையில் இருப்பதும் பத்து தி.மு.க. எம். எல். ஏக்கள் சட்டசபையிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பதும்.

* அருண், ஈரோடு.

? யாருடைய கதைகளை விரும்பிப் படிக்கி றீர்கள்?

! ஆரவாரமில்லாத அமைதியான நடை. தெளிவான தமிழ், வாழ்க்கையைக் கண்ணாடி போல் பிரதிபலிக்கும் திறன், ஆகிய சிறப்

நீங்கள் கேட்டவை — தராசு

பியல்புகளைக் கொண்ட கதைகள் அண்மை யில் ஒரு நூல் வடிவம் பெற்றுள்ளன. (அன் னம் பிரசுரம், சிவகங்கை) சாதாரண மக்க ளின் வாழ்க்கையில் ஏற்படும் சாதாரண நிகழ்ச்சிகள் கூட எவ்வளவு அர்த்தமுள் ளவை என்பதை உணர்த்தும் கதைகள் இவை. மனிதர்களை நேசிக்கும் கதைகள்; அவற்றைப் படிக்கும் நம்மையும் நேசிக்கச் செய்யும் கதைகள். நூலின் பெயர்: "பிரபஞ்சன் கதைகள்." தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் பிரபஞ்சனுக்கு ஓர் உயர்வான தனியிடம் நிச்சயம் உண்டு.

* கே. வி. நாதன், நெய்வேலி.

? மறைந்த நடிகை ஸ்மிதா பாட்டீல் நடிப்பு குறித்து?

! உலகம் போற்றும் அவரது நடிப்பாற்ற லால் பிரகாசித்த படங்கள் பல: பூமிகா, நிஷாண்ட்; மண்டி; ஆக்ரோஷ்; அர்த்... இத்யாதி. 'ஸ்மிதா பாட்டீல் படவிழா' என்றே, அவர் நடித்த படங்களாகவே ஒரு திரைப்பட விழா சென்ற ஆண்டு பிரான் ஸில் நடந்தது. ஒரு தனிப் பெருமை! அவர் நடிப்புத் திறனில் பங்கு கேட்க டைரக்டர்கள் பலர் இருக்கிறார்கள். ஷியாம் பெனகல், சத்யஜித் ரே... இத்யாதி. ஆனால் அவருடைய மனிதாபிமான உணர்வுக்கு அவர் மனம் மட்டுமே காரணம். பெண்களின் நல்வாழ்வுக் காகப் போராடிய அவர், அதே கதைக் கரு கொண்ட 'சுபா' என்ற படத்தில் கடைசி யாகவிரும்பி நடித்தார். சினிமா நட்சத்திரங்க ளுக்கு உரிய தோற்றப் பொலிவு பற்றிய சிந் தனை அறவே இல்லாதவர். அவரது அறையில் பெண் குலத்துக்குப் போராடும் சமூக ஊழியர்கள் சதா வந்து போய்க் கொண்டே இருப்பார்கள். அனாதைப் பெண்களுக்காக உருவான 'பம்பாய் மாதர் கேந்திரத்'துடன் தொடக்க காலம் முதல் தொடர்பு கொண்டிருந்தார். அவர் மறைவு இந்தியத் திரை உலகுக்கு மட்டுமல்ல; இந்தியப் பெண் குலத்துக்கே பேரிழப்பு.

நடிப்பு குறித்து...?

* ரூ. 10 பரிசு பெறுபவர்:

மு. வே. சத்தியமூர்த்தி,
2—12-C, பஜனமடம் வீதி,
திருமயம் — 622 507.
(புதுக்கோட்டை மா. வ.)



"மனிதரில் இத்தனை நிறங்களா?"

'வளையல் சத்தம்' படப்பிடிப்புக்காகப் பாண்டிச்சேரி சிறைச்சாலைக்குச் சென்றிருந்தார் நடிகர் சந்திரசேகர். படத்தில் ஜெயில் சூப்பரின்டெண்டெண்ட்டாக நடிக்கிறார் சந்திரசேகர்.

அவர் சொன்னார்:

''பாண்டி சிறையில் கிட்டத்தட்ட நூற்றி ஐம்பது கைதிகள் இருந்தார்கள். அவர்களில் விருப்பமானவர்கள் படத்தில் நடிக்கலாம். நட்சத்திரங்களுடன் பேசலாம் என்று அனுமதிக்கப்பட்டார்கள்.

''பல்வேறு குற்றவாளிகளுடன் பேசிய போது நான் தெரிந்து கொண்ட விஷயம்: 'நூற்றுக்கு எண்பது பேர் நியாயத்துக்காக உணர்ச்சி வயப்பட்ட நிலையில்தான் குற்றங்களைச் செய்திருக்கிறார்கள்' என்பதுதான். வேண்டுமென்றே திட்டமிட்டுப் பழியுணர்ச்சியுடன் செயல்பட்டுத் தண்டனை பெறுபவர் மிகவும் குறைவு.

மாதிரிக்குச் சிலர்:

இரண்டு ஹோட்டல் சர்வர்கள். இருவரும் நெருங்கிய நண்பர்கள். முதலாளி ஆறு மாதங்களாகச் சம்பளம் கொடுக்கவில்லை. பணத்தேவை காரணமாகக் கேட்டுக் கேட்டுப் பார்த்திருக்கிறார்கள். கிடைக்கவில்லை. ஓர் அதிகாலை நேரம். கல்லாப் பெட்டியைத் திறந்து வியாபாரத்தைத் துவக்கிய ஓட்டல் முதலாளியை டெலிபோன் ஒயர்களால் இறுக்கிச் சாய்த்துவிட்டார்கள். 'முதலாளி குளோஸ்' என்றுதான் இருவரும் நினைத்தனர். இருவரும் போலீஸில் சிக்கினர்.

''பாருங்க, எங்களுக்கு ஒழுங்காகப் பணம் தராத முதலாளி தமக்கு ஆயிரக் கணக்கில் செலவு செய்து வைத்தியம் செய்து பிழைத்துவிட்டார்! நாங்க ஒயரைச் சரியாக இறுக்காமல் மிஸ் பண்ணிவிட்டோம்'' என்றார்கள்.

''சரி, தண்டனை முடிந்து விடுதலையானதும், பழையபடி பழியுணர்ச்சி உங்களிடம் தலை தூக்குமா?'' என்று கேட்டேன்.

''அதெல்லாம் இல்லே சார்! நடந்தது நடந்து போச்சு. கஷ்டப்பட்டதும் பட்டாச்சு. வெளியே போய் நல்ல வேலையாகத் தேடிக் கொண்டு உழைத்துச் சாப்பிடப் போகிறோம்'' என்றார்கள்.

அவர்களது மனமாற்றம் என்னை வியப்பிலாழ்த்தியது.

சித்தப்பா, தப்பப்பா!

ஒரு பதினெட்டு வயதுப் பையன். ஒல்லியான தேகம். பால் வடியும் முகம். அவன் பதினான்கு ஆண்டுகள் தண்டனை பெற்று ஆயுள் கைதியாக அங்கே இருந்தான்.

''இவனைப் பார்த்தால் குற்றவாளி போலவே தெரியவில்லையே?'' என்று ஆச்சரியப்பட்டு, அவனிடம் தோழமையுடன் விசாரித்தேன்.

அவனும் அவனது பதினைந்து வயதுத் தங்கையும் தாய் தந்தை இல்லாத அநாதைகள். சித்தப்பா முறையிலுள்ள ஒருவரது வீட்டில் தங்கியிருந்தார்கள். சித்தப்பா



சித்தப்பாவாக நடக்கவில்லை. மகள் ஸ்தானத்திலிருந்த பெண்ணிடம் அடிக்கடி வம்பு செய்திருக்கிறார். வந்ததே அண்ணனுக்கு ஆத்திரம். செருகிவிட்டார் கத்தியை! சித்தப்பா குளோஸ்!

''உங்க தங்கையை அனாதையாக்கிட்டு ஜெயிலுக்கு வந்துட்டீங்களே?'' என்று அவரிடம் கேட்டேன்.

''இல்லை சார்! கொலை நடந்த பிறகு சொந்தக்காரர்கள் என் தங்கைக்கு நல்ல இடத்தில் மணம் முடித்துவிட்டார்கள். தங்கச்சியும் அவளது கணவரும் அடிக்கடி என்னை ஜெயிலில் வந்து பார்த்துப் போகிறார்கள். நான் கொலை செய்தது உண்மைதான் என்றாலும் என்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதபடி உணர்ச்சி வயப்பட்டு விட்டேன்'' என்றான் அவன்.

மது, மாது!

இன்னொரு ஆயுள் கைதி.

நிச்சயம் விடுதலையானதும் சாமியாராகப் போகக் கூடியவர். அவர் எப்படிப் போலீஸில் சிக்கினார்.

''எல்லாம் விதி சார்! நான் அன்று வீட்டை விட்டுப் புறப்பட்ட நேரமே சரியில்லை! நேராக இங்கே வந்துட்டேன்!'' என்றார்.

அவர் ஒரு வேசியின் வீட்டுக்குச் சென்றிருக்கிறார். அடிக்கடி போகிற வீடாம் அது! இருவரும் குடித்துக் கும்மாளமிட்டிருக்கிறார்கள். காலையில் இவர் வீட்டுக்கு வந்து விட்டார். அவளோ நிரந்தரமாகத் தூங்கி விட்டாள்! போலீஸார் துப்பறிந்து கடைசியாக அவளுடனிருந்தவர் என்ற முறையில்



இவர் மீது கொலை வழக்கு போட்டுவிட்டார்களாம்! ஆயுள் தண்டனை கிடைத்திருக்கிறது.

''விடுதலையானதும் கடவுளை நினைத்து ஒழுங்காக வாழ்வேன். நான் இதுவரை செய்த பாவங்களுக்கு ஆண்டவன் கொடுத்த தண்டனை இது'' என்றார் அவர் வருத்தம் தோய்ந்த குரலில்.

சீட்டாட்டம்!

இன்னோர் அறையில் ஆறு பேர் கூட்டமாக அமர்ந்து சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் விருப்பப்பட்டால் படத்திலேயே நடித்திருக்கலாம் என்றாலும் அவர்களுக்குச் சீட்டாட்டத்திலேயே சுவாரசியம் இருந்தது. நான் அவர்களது அறையைக்





கடந்து சென்றபோது ஒரு கைதி,

''ஹலோ, நாங்களெல்லாம்கூட உங்க ரசிகர்கள்தான். எங்களைப் பார்க்காமலே போறீங்களே?'' என்று சீண்டினான்.

''ஏனய்யா, நான் உங்க அறைக்கு வந்து பேசணுமா? உண்மையான ரசிகனாக இருந்தால் நீங்களல்லவா என்னிடம் வந்து பேசியிருக்கணும்'' என்றேன்.

''மன்னிச்சுக்குங்க சார். சினிமா ஆர்ட்டிஸ்ட்டுன்னு எங்களை மதிப்பாங்களோ மாட்டாங்களோ என்று நினைத்துவிட்டோம். உங்களைப் பார்த்தால் பந்தா இல்லாமல் பழகறீங்க. உங்களை இங்கே சந்தித்ததில் ரொம்ப மகிழ்ச்சி'' என்று கைகுலுக்கினார்கள்.

''சிறையில் சில மணி நேரங்களே நான் இருந்திருந்தாலும் 'மனிதரில் இத்தனை நிறங்களா?' என்று அவர்களைப் பற்றி சதா நினைக்க வைத்துக் கொண்டேயிருக்கிறது!''

பேட்டி:

மன்னை சௌரிராஜன்


ஒற்றைச் சிறுநீரகத்துடன் உயிர் வாழ முடியுமா?

அந்த இளைஞனுக்குப் பதினெட்டு வயதுதான். டொராண்டோ நகரில் ஒரு சாலை விபத்தில் அவன் மரணமடைந்தான்.

விபத்தில் மரணமடைந்த மகனின் உடல் உறுப்புக்களை மற்றவர்களுக்குப் பயன்படும் வகையில் எடுத்துக் கொள்ள மருத்துவர்களை அனுமதித்தபோது அவன் தாய் சொன்னார்:

அவன் எலெக்ட்ரானிக் எஞ்சினீர் ஆகி இந்த சமுதாயத்துக்குப் பணியாற்ற வேண்டும் என்று ஆசைப்பட்டான். அது முடியாமல் போய்விட்டது. ஆனாலும் இந்த விதத்திலாவது அவன் சமுதாயத்துக்குப் பயன்பட முடிந்ததே என்பதில் எனக்குப் பெருமைதான்.''

''அந்த இளைஞனிடமிருந்து இரண்டு சிறுநீரகங்கள், இதயம், கண்கள், முழங்கால் மூட்டுக்கள் — இவற்றை எடுத்து, தேவைப்பட்ட மற்ற நோயாளிகளுக்குப் பொருத்தினோம்'' என்றார் டாக்டர் ஜோஸப் வி. தாச்சில்.



தானம் கொடுப்பவரிடமிருந்து சிறுநீரகம் அகற்றப்படுகிறது.



டாக்டர் தாச்சில்



டாக்டர் துரைசாமி



''அமெரிக்காவில் பலரும் தங்கள் மரணத்துக்குப் பிறகு தங்கள் உடல் உறுப்புக்களுள் தேவையானவற்றை எடுத்துப் பிறருக்குப் பயன்படுத்திக் கொள்ள இசைவு தரும் உறுதிமொழியைக் கார் டிரைவிங் லைசென்ஸில் பதிவு செய்கிறார்கள்'' என்று கூறும் டாக்டர் தாச்சில் தமது டிரைவிங் லைசென்ஸிலும் இப்படி ஓர் உறுதிமொழியைப் பதிவு செய்துள்ளாராம். ஆனால் நமது நாட்டிலோ.....?

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையோடு தொடர்புடைய டாக்டர் எம்.கே. மணி, 'இதுவரை ஏழு குடும்பத்தாரரிடமிருந்து மட்டுமே இறந்தவர்களின் சிறுநீரகத்தைத் தானமாகப் பெற முடிந்திருக்கிறது. இதற்காக மணிக்கணக்காக அவர்களுடன் விவாதித்துச் சம்மதம் பெற வேண்டியிருந்தது' என்கிறார்.

மேற்கத்திய நாடுகளில் சாலை விபத்துக்கள் அதிகமாக இருப்பதால், அடிபட்டவர், இனி உயிர் பிழைக்கமாட்டார் என்ற நிலை உணரப்பட்டவுடனேயே மரணம் அடையப் போகிறவரின் உறவினர்கள் அவரது உறுப்புக்களைத் தானம் செய்ய இசைவு தருகிறார்கள். 'பிரெய்ன் டெத்' என்ற மரண நிலையைச் சட்ட பூர்வமாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

இறந்தவர்களிடமிருந்து கிட்னியை



அகற்றப்பட்ட சிறுநீரகம் பெறுநரின் உடலில் பொருத்தப்பட்டுள்ளது.

ஏங்கியிருப்பார்கள்!

பெங்களூர் நகரில் 'SAARC' மகாநாடு நடந்தபோது, நகரை அழகுபடுத்த சுமார் 600 பிச்சைக்காரர்களைப் பிடித்து, பிச்சைக்கார விடுதிகளில் பூட்டினர்! அங்கு இவர்களுக்கு ராஜ போகமாக சாப்பாடு போடப்பட்டது! காரணம், இம்மாநாட்டுக்காக வருபவர்களுக்காக ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தயாரிக்கப்பட்டிருந்த உணவுகள் நிறைய மிச்சமாகிவிட்டன. இவற்றை வீணாக்காமல், அப்படியே பிச்சைக்கார விடுதிக்கு எடுத்துச் சென்று பிச்சைக்காரர்களுக்கு உணவளித்துவிட்டது அரசு! அடிக்கடி இப்படிப்பட்ட மாநாடுகள் நடக்காதா என்று பிச்சைக்காரர்கள் நினைத்திருப்பார்கள்!

ஆதாரம்: ஸண்டே

— சம்பத்குமாரி

அகற்றுவதற்குச் சட்டபூர்வமான அனுமதி தேவை என்கிறார்கள். இந்தியாவில் மகாராஷ்டிராவில் மட்டும் 'கிட்னி டிரான்ஸ்பிளாண்ட் ஆக்ட்' என்று கொண்டு வந்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலும் இது போல் சட்டம் செய்ய வேண்டும்.

உயிர் பிரிந்து ஒரு மணி நேரத்துக்குள் சிறுநீரகம் உடலிலிருந்து அகற்றப்பட்டாக வேண்டும். அதன்பிறகு இருபத்து நான்கு மணி நேரம்வரை சிறுநீரகத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்கலாம். அதற்குள் வேறு ஒருவருக்குப் பொருத்தியாக வேண்டும். மேலை நாடுகளில்; சில விசேஷமான கருவிகளின் உதவியால், அகற்றப்பட்ட சிறுநீரகங்களை மூன்று முழு நாட்கள் வரை கூடக் கெட்டுப் போகாமல் வைத்திருக்கிறார்கள். எப்படியானாலும் ஓர் உடலிலிருந்து எடுக்கப்பட்ட சிறுநீரகம் எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாக மற்றொருவருக்குப் பொருத்தப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு பலன் அதிகம். மரணமடைந்த ஒரு மனிதரின் இரண்டு சிறுநீரகங்களின் மூலம் இரண்டு மனிதர்கள் புதுவாழ்வு பெற முடியும்.

அப்போலோ மருத்துவமனையில் இப்போது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையை நூறு தடவைக்கு மேல் வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்கள்.

இந்தச் சாதனைகளுக்கு உறுதுணையாக இருந்த டாக்டர்கள் எம்.கே. மணி, ஜோஸப் வி. தாச்சில், துரை சுவாமி ஆகியோரைச் சந்தித்து உரையாடியபோது பல சுவாரசியமான தகவல்கள் கிடைத்தன.

அப்போலோவில், நடைபெற்ற சிறுநீரக மாற்று சர்ஜரிக்காகப் பயன்பட்ட சிறுநீரகங்கள் அனைத்துமே நெருங்கிய உறவினர்களிடமிருந்து தானமாகப் பெறப்பட்டவை. பணம் கொடுத்து வாங்குகிற 'அந்நிய' உறுப்புகளை இவர்கள் ஏற்பதில்லை. அப்படி வந்த சில ஏற்பாடுகளையும் அப்போலோ அங்கீகரிக்கவில்லையாம்.

உறவு அல்லாத அயலாரிடமிருந்து பணத்துக்காகச் சிறுநீரகம் பெறுவது என்பது பம்பாய் போன்ற நகரங்களில் வியாபாரமாகவே ஆகிவிட்டது. கணிசமான தொகையைப் பெற்று லாபம் அடைகிறவர் இதற்கான ஏஜெண்டுகள்தான். நடைபாதை வாசிக்குப் பத்தாயிரம் ரூபாய் கிடைத்தால் அது அவரைப் பொறுத்தவரை மிகப் பெரிய அதிர்ஷ்டம். ஆனால் அதைப் போல் மூன்று மடங்கு பணம் பெற்றுக்கொள்கிறார் இடைத்தரகர்.

ரத்தத்தைச் சுத்தப்படுத்துவதே கிட்னியின் வேலை. ஏராளமான அசுத்தங்கள் அகற்றப்படுகின்றன. நம்முடைய தேவைக்கு அதிகமாக நாம் உட்கொள்கிற உப்புச் சத்தையும் தண்ணீரையும் இது பிரித்து வெளியே அனுப்புகிறது. உணவு செரிப்பதற்குப் பயன்படுகிற அமில வகைகளைப் பிரித்துச் சுத்தப்படுத்துவதும் இதுதான்.

ஒரு சிறுநீரகத்தோடு உயிர் வாழ முடியுமா என்ற அடிப்படைச் சந்தேகமே இன்னும் பல பேருக்கு இருந்து வருகிறது. ஒரு கிட்னியை எடுத்துவிட்டால் அந்தப் பக்கம் எடை குறைந்து போய்விடுமோ என்று கூடப் பொருளற்ற அச்சத்துக்குச் சிலர் ஆட்படுகிறார்கள். இப்படிப் பயப்படுகிறவர்கள் பிறவியிலேயே ஒற்றைச் சிறுநீரகத்துடன் பிறந்தவர்களை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் ஆரோக்கியமாகத்தான் வாழ்கிறார்கள். இந்த மாதிரி இயற்கையாகவே ஒற்றைச் சிறுநீரகம் உள்ள நிலை அறியப்பட்டதன் காரணமாகவே, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை பற்றிச் சிந்தனை எழுந்தது.

சிறுநீரக தானம் செய்பவரின் இரண்டு சிறுநீரகங்களுள் மிக நன்றாக இயங்கும் சிறுநீரகத்தை எடுக்காமல் மற்றதை எடுத்துத்தான் நோயாளிக்குப் பொருத்துகிறார்கள். தானம் தருகிறவருக்கு எந்த இழப்பும் இல்லாத வகையிலேயே இந்த மாற்றுச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

அப்போலோவில் நடைபெற்ற மாற்றுச் சிறுநீரக சர்ஜரி ஒன்றில், ஒரு தாயின் ஓரளவு கெட்டுப் போன சிறுநீரகம் பயன்படுத்தப்பட்டு, மகன் ஒன்றரையாண்டுக்கும் மேலாகச் சுகமாக இருக்கிறாராம். உடன் பிறந்தவர்கள் பலர் இருந்தும், தங்கள் சிறுநீரகத்தைத் தர எவருமே முன்வராதபோது, தாயார்தான் முன்வந்தாராம். அவருடைய சிறுநீரகத்தில் ஒன்று மூன்றில் ஒரு பங்கு நீர்கட்டிச் சேதமாகியிருந்ததாம். அதையே மாற்றாகப் பயன்படுத்த முடிந்திருக்கிறது.

மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதோடு விஷயம் தீர்ந்து போவதில்லை. வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக அந்த நோயாளி மருந்து சாப்பிட்டாக வேண்டும். தவிர்க்கவே முடியாத விஷயம் இது. ஸைக்ளோஸ்

போரின் (cycloxporine) என்கிற மருந்து உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. அதேபோல் இம்யூரைல் (Imurll) என்கிற மருந்தும்பிரபலமானது. இரண்டுமேஇந்தியா வில் தயாராவதில்லை. வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்தாக வேண்டிய நிலையிலேயே இருக்கிறோம். இந்த மருந்திற் காக ஒவ்வொரு மாதமும் நானூறு முதல் ஐந்நூறு ரூபாய்வரை செலவு செய்ய வேண்டி யிருக்கும்.

சாதாரணமாக எழுபது வயதுக்குப் பின்னர் யாருக்கும் மாற்றுச் சிறுநீரகம் பொருத்த வேண்டியதில்லை. ஹோம் டயால ஸிஸ் முறையிலேயே வைத்துக் கொள்ள லாம்.

நீண்ட காலம் வாழ வேண்டிய இளம் வயதுக்காரர்களுக்கு மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதுதான் சிக்கலானது. டயால ஸிஸ் மூலம் வாரம் மூன்று முறை இரத்தத் தைச் சுத்தப்படுத்தியாக வேண்டும். இது அதிகச் செலவு பிடிக்கக் கூடியது. நோயாளிக்கு ஊசி குத்துவதால் ஏற்படக் கூடிய சிரமமும் அதிகம்.

சிறுநீரகம் செயலிழப்பதால் தமிழ் நாட்டில் மட்டும் ஓர் ஆண்டில் 2500 பேர் மரணமடைவதாகச் சொல்கிறார்கள். நூற் றைம்பது கிராம் எடையுள்ள இந்தச் சிறு நீரகம் என்கிற விந்தை உறுப்பு நோய் வரு கிறவரை கவனம் பெறுவதே இல்லை என்பதும் இதற்கு ஒரு காரணம்.

இரத்தப் பரிசோதனை செய்து கொண்டு கொலஸ்டிரால் இருக்கிறதா, சர்க்கரை இருக் கிறதா என்று அறிந்து கொள்கிற மாதிரி, நம்முடைய சிறு நீரகங்கள் சரியாக இருக் கின்றனவா என்றும் முன்கூட்டியே சோதனை மூலம் அறிந்து கொள்ளலாம். தேவையா னால் சிறுநீரகம் பழுதடையாத அளவுக்கு முன்னெச்சரிக்கையாக இருந்து கொள்ள வும் முடியும்.

உயர் இரத்த அழுத்தம் இருந்தால் அதை அலட்சியப்படுத்தக் கூடாது. அது சிறுநீர கத்தைப் பாதிக்கலாம். இரத்தத்தில் சர்க் கரைச் சத்து அதிகமானாலும் ஆபத்து விளையலாம். குழந்தைகளுக்கே கூடச் சிறு நீர்ப் பாதையில் ஏற்படும் நோய்த் தொற்றுக் கள் காரணமாகச் சிறுநீரகம் சேதம் அடையக் கூடும்.

காய்ச்சலுடன் கூடிய குளிர் நடுக்கமும் கைகால்கள் முகம் இவற்றில் ஏற்படுகிற வீக்கமும் சிறுநீர் நோய் தொற்றுக்கான அறி குறிகள். இவை உடனே கவனிக்கப்படாவிட் டால் நாளாவட்டத்தில் சிறுநீரகங்கள் பாதிக் கப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

அளவுக்கு அதிகமாகவும் தேவையில்லா மலும் ஆண்டிபயாடிக் போன்ற மருந்துகளை உட்கொள்வதாலும் சிறுநீரகம் சேதமடை கிறது.

— சுப்ர. பாலன்



"நமக்கு நாமே பூட்டிக் கொள்ளும் விலங்குகள்!

சினிமா பத்திரிகைகளின் கிசுகிசுக்களில் மட்டுமே பிரபலமான ப்ரோதிமா பேடியை நேரில் சந்திக்க நேர்ந்தது. திருவனந்தபுரம் சூர்யா ஃபிலிம் சொஸைட்டி நடத்திய இசை—நடனக் கலை விழாவில் ஒடிஸி நடனம் ஆட வந்திருந்தார். தெளிவான சிந்தனையுடன் அவரது அந்தரங்க வாழ்க்கை பற்றிய சில இக்கட்டான கேள்விகளுக்குக்கூடத் தயக்கமின்றி விடை அளித்தார்.

கே: நாட்டிய உலகில் பிரபலமடைந்து விட்டது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: நாட்டியம் ஆடும் போது, நான் நூறு சதவிதம் கலையில் என்னை இழக்கிறேன். அதைப் பற்றிப் பேச மட்டும் எனக்குத் தெரியாது!

கே: அயல்நாட்டில் உங்களை மிகவும் கவர்ந்த ரசிகர்கள் யார்?

ப: எனக்குப் பிடித்த இடம் ஆம்ஸ்டர்

டாம். அங்கு நடந்த கலைவிழாவில் ஓர் இந்திய உணர்வு ஏற்படுவதற்காக டீ, சமோசா, பரிமாறினார்கள். அதில் வியப் பில்லை. ஆனால் நடனம் பார்க்க வந்தவர் களும் ஏதாவது ஓர் இந்திய உடையில் வர வேண்டும்என்று எண்ணி, குர்தா, பைஜாமா, அல்லது வேட்டி போல் பெட்ஷீட்டைக் கட்டி வந்திருந்தார்கள்! அது எனக்கு அதிசய மாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

கே: வெளிநாட்டவரை மணம் புரிந்திருந் தும் நீங்கள் எப்படி இந்தியாவில் இருக் கிறீர்கள்?

ப: நான் ஆறு மாதம் சுவிட்சர்லாந்திலும் ஆறு மாதம் இந்தியாவிலும் வசிக்கிறேன்.



என்றால் இந்தியாவை விட்டுப் பிரிய முடிய வில்லை. இதுபோல் விழாக்களும் பண்டிகை களும் நிறைந்த ஒரு நாட்டை எங்கும் காண முடியாது. மேலும்என் நாட்டியத்தைமுழுமை யாக ரசிக்கக் கூடியவர்கள் இங்கேதானே இருக்கிறார்கள்? என் இரு பிள்ளைகளும் இங்குதான் சிம்லாவில் படிக்கிறார்கள். அவர் களது விடுமுறைகளின் போது அவர்கள் கூட இருக்க ஆசைப்படுகிறேன்.

கே: நடனம் தவிர உங்களுக்கு வேறு ஏதா வது செய்யப் பிடிக்குமா?

ப: கடினமாக வேலை செய்யப் பிடிக்கும். தோட்டத்தில் கொத்தி, உரங்கள் போடு வேன். தச்சு வேலை செய்யத் தெரியும். பம் பாயில் என் வீட்டில் முக்கால் வாசி நான் செய்த பர்னிச்சர்தான். கார் ரிப்பேர் வேலை ரொம்பப் பிடிக்கும். நிறையப் புத்தகங்கள் படிப்பேன். எழுதுவதும் உண்டு. ஒரு புத்தகம் வெளியிட நினைக்கிறேன். இவை எல்லாவற் றையும் விட ஒடிஸிக்காக ஒரு பள்ளிக்கூடம் கட்ட நினைக்கிறேன். அதில் நானே கொத்தனா ராகச் செயல்பட வேண்டும் என்று ஆசை!

கே: உங்களுக்குப் பாடத் தெரியுமா?

ப: எனக்கு நல்ல குரல் வளம் இருக்கிறது என்றுபண்டிட் ஜஸ்ராஜ்கூறினார். அவரிடமே பாட்டுப் படிக்க ஆரம்பித்தேன். வீட்டில் சாதகம் பண்ண விடியற்காலை ஆரம்பிப் பேன். அப்போது என் இரு குழந்தைகளும் ஓடி வந்து ஒரு துணியால் என் வாயைக் கட்டி விடுவார்கள். எங்களுக்கு இன்றைய தினத்தை உன் பாட்டால் பாழ் அடித்து விடாதே" என்பார்கள். அத்துடன் விட்டுவிட் டேன்.

கே: இன்று இந்தியாவில் வாழும் பெண் களின் நிலைமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: நான் பதினாறு அல்லது பதினேழாவது வயதில் வீட்டை விட்டு ஓடிவிட்டேன். என் தந்தை எனக்குக் கட்டாயமாகத் திருமணம் முடிக்க நினைத்ததே காரணம். சாதாரண மாக மற்ற பெண்களைப் போல, ஒரு பசு மாதிரி, கட்டின இடத்தில் நின்று கொண்டு, சாதுவாகப் புல்லை மென்று கொண்டு, வாழ நான் விரும்பவில்லை. எனது அம்மா ஒரு சராசரி நடுத்தர வர்க்க மனைவி. என் அப்பா தான் அனைத்துக்கும் எஜமான். அவரை. எதிர்த்து அவளால் ஒரு வார்த்தை கூடப் பேச முடியாது. சிறு வயதிலிருந்தே இதை நான் வெறுத்தேன். அப்போது நான் கண் டது, கேட்டது, என்னை அடிமைத்தனத்தி லிருந்து மீட்டது என்று சொல்லலாம். பிரபல சினிமா இசையமைப்பாளர் ஓ.பி. நய்யார் தம் மனைவியைப் போட்டு அடிப்பார். அவள் எங்கள் வீட்டில் உட்கார்ந்து கதறு வாள். பிரபல ஹிந்தி சினிமா நடிகை நிருபா ராய் தம் கணவன் படுத்தும் கொடுமைகளை யும், ஏச்சுக்களையும் மௌனமாகத் தாங்கிக் கொள்வார். அதேபோல் நர்கீஸை அவர் அண்ணன் தம்பிமார்கள் சேர்ந்துதுன்புறுத்தி யதும் எனக்குத் தெரியும். பெண்களால் ஏன் ஆண்களை எதிர்க்க முடியவில்லை? கைநீட்ட முடியவில்லை என்றால் குரலைக் கூட்வா உயர்த்த முடியாது என்று தோன்றும். அதே நிலைமைதான் இன்றும் நீடிக்கிறது. பெண்கள் இன்னும் தங்கள் நிலையை உணர வில்லை. அடிமைத்தனத்தை விடவில்லை.

கே: வீட்டை விட்டு ஓடியபின் என்ன செய்தீர்கள்?

ப: திருமதி ஸ்வாமிநாதன் என்பவரைச் சந்திக்கநேர்ந்தது. அவர்விளம்பரத்துறையில் இருந்தார். அதனால் மாடலிங் செய்ய எனக்கு வழி காட்டினார். அதற்குப் பிறகு கபீர் பேடி யைச் சந்திக்க நேர்ந்தது. ஒரு வருஷம் அவ ருடன் சேர்ந்து வாழ்ந்த பிறகு அவரைத்

திருமணம் செய்து கொண்டேன். பிள்ளைகள் வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகத் தான் அவரை மணம் புரிந்தேன்.

கே: ஒரு பரபரப்பு ஏற்படுத்துவதற்காகத் தான் எதையும் செய்கிறீர்களா?

ப: யாருக்கும் தீங்கு இழைக்காமல், எனக்கு எது சரி என்று படுகிறதோ அதைத் தான் நான் செய்ய விரும்புகிறேன். அது பிறருக்கோ, சமுதாயத்துக்கோ அதிர்ச்சி தந்தால் அதை நான் பெரிதுபடுத்துவதில்லை. நாம் இன்னும் பழைமையில் ஊறிப் போய் இருக்கிறோம். நமக்காக வாழாமல் பிறர் என்ன நினைப்பார்கள் என்றே வாழ்கிறோம். இது வேண்டுமென்றே நமக்கு நாமாகப் பூட்டிக் கொள்ளும் விலங்கு.

கே: கபீர் பேடியைப் பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?

ப: நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டிருந்தோம். என்னைச் சுதந்திரமாகப் பேச, பழக விட்டார். ஆனால் சில வருஷங்களில் அவர் மாறிவிட்டார். என்னை எனக்காக மதிக்காமல் என்னை அவருடைய வெறும் நிழல்போலக் கருதத் தொடங்கினார். நாங்கள் பிரிவதற்கு அதுவே காரணம். என்னை விட்டு விட்டுப் பர்வீன் பாபியுடன் வாழத் தொடங்கினார். பின்னர் அவளையும் விட்டுவிட்டு வெளிநாட்டில் காரோல் என்பவரை மணம் புரிந்தார். அப்போதும் நானும் கபீரும் நண்பர்களாகப் பழகினோம். அவர்கள் தேனிலவுக்கு என்னுடன்தான் பம்பாயில் தங்கினார்கள். பின்னர் காரோலையும், அவள் குழந்தையையும் கூட விட்டுப் போய் விட்டார் கபீர். எனக்குச் 'சீ' என்று ஆகிவிட்டது.

கே: ஒடிஸி நடனத்தைப் படிக்க எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?

ப: நான் நடனம் கற்றதே ஒரு விபத்து போல்தான்! எனக்கு அப்போது இருபத்தாறு வயது ஆகிவிட்டது. இரண்டு குழந்தைகள் வேறு. ஒருநாள் பூலாபாய் ரோட்டில் நடந்த ஒரு ஃபாஷன் பரேடுக்காக டாக்சியில் செல்கிறேன். தவறுதலாக டிரைவர் என்னை பூலாபாய் அரங்கில் இறக்கி விட்டுவிட்டார். அங்கு ஒருவருடைய ஒடிஸி நடனம் நடந்து கொண்டிருந்தது. சரி, போய்த்தான் பார்ப்போமே என்று உள்ளே சென்றேன். ஒடிஸி நடனம் என்னை மிகவும் கவர்ந்தது. எனக்கும் நாட்டியம் ஆட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. நிகழ்ச்சி முடிந்தவுடன், குரு கேலுசரன் மஹாபாத்ராவிடம் என் ஆசையை வெளியிட்டேன். என் ஜீன்ஸ், ஹைஹீல் ஷூ, சிகரெட் இவற்றைப் பார்த்து அவர் எனக்கு நாட்டியம் வராது என்று கூறிவிட்டார். நாட்டியத்திற்காக எதையும் உதறி விடத் தயாராக இருப்பதாக அவரிடம் கூறினேன். புவனேஷ்வர் சென்றேன். தீவிரப் பயிற்சியும், விடாமுயற்சியும், மனஉறுதியும்தான் என்னை இந்நிலைக்குக் கொண்டு வந்து விட்டன.

கே: முன்பு ஒருமுறை 'ஸ்டிரீக்கிங்' செய்ததற்காக இப்போது வருந்துகிறீர்களா?

ப: ஒருநாளும் நான் வருந்தவில்லை. பெண்களைக் கேவலமாகக் கீழ்த்தரமாக நடத்தும் உலகம் இது. என்னுள் பல காலமாக எரிமலையாகப் பொங்கிக் கொண்டிருந்ததெல்லாம் ஒருநாள் வெடித்தது. அந்தச் சம்பவம் நடந்த தினத்தன்று நானும் கபீரும் ஒரு வரவேற்புக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். அப்போது கபீருடன் வேலை பார்க்கும் ஒருவன் வந்து, ''இதுதான் உங்கள் பிரபல மனைவியா?'' என்றான். பின் என்னிடம், ''கபீர் ஷூட்டிங்குக்காக வெளியூர் சென்றவுடன் உன்னைப் பார்க்க வரு



கிறேன்'' என்றான். எனக்குக் கோபத்தில் நரம்புகள் புடைத்தன. அவன் சட்டைக் காலரைப் பிடித்து இழுத்தேன். 'உன் அம்மா, மனைவி, தங்கைக்குக் கூட இதே போலத்தான் உடம்பு இருக்கும். என்னிடம் வேறு ஏதாவது இருக்கிறதா பார்' என்று கத்திவிட்டு ஆடைகளைக் கழற்றி விட்டெறிந்து விட்டு ஓடினேன். அது பெண் இனத்துக்கு இழைக்கப்படும் அநீதியையொட்டி எனக்கு ஏற்பட்ட கோபத்தின் உச்சநிலை. அன்று கபீர், நான் செய்தது சரி என்று ஆதரவாகப் பேசினார். அந்த நிகழ்ச்சி பற்றிப் பின்னாளில் ஒரு தடவை கூட நான் வருத்தப்பட்டதேயில்லை.

கே: பெண்களுக்கு என்ன கூற நினைக்கிறீர்கள்?

ஓர் ஐ. ஜி. யின் அறிக்கை!

தமிழ் நாட்டில் உள்ள காவல் நிலையங்களுக்கு ஐ. ஜி. ஸ்ரீபால் ஓர் அறிக்கை அனுப்பியுள்ளார். அந்த அறிக்கையில் காணப்படும் சில வாசகங்கள்...

"இந்த உலகத்தில் உள்ள அனைத்து மக்களுமே பூமியில் முதன் முதலில் தோன்றிய ஆண் — பெண் இவர்களின் வழித்தோன்றல்களே என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்! அப்படிப் பார்க்கும் போது, நாம் அனைவருமே ஒரே மதம் தான். ஒரே இனம்தான். ஏதேனும் ஒரு வகையில் உறவுக்காரர்கள்தான். இதை ஏன்தான் சிலர் புரிந்து கொள்ள மறுத்து, இனக்கலவரங்களை வளர்க்கி



றார்களோ தெரியவில்லை!

"காவலர்கள் ஜாதி, மத, இன, வேறுபாடுகளைத் தவிர்த்துத் தங்களது கடமைகளைச் சரிவரச் செய்து வரல் வேண்டும்."

தகவல்: அரக்கோணம் ராஜாராம்
உதவி: அரக்கோணம் நகர இன்ஸ்பெக்டர் எல். ராமதாஸ்.

ப: பெண்கள் பிள்ளை பெறும் இயந்திரம் இல்லை. அதற்காக மட்டும் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது. தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள எல்லாப் பெண்களும் பாடுபட வேண்டும். ஒரு லட்சியத் தாயாக யசோதையையும், லட்சிய மனைவியாகச் சீதையையும், லட்சியக் காதலியாக ராதாவையும் படைத்த மனிதன் ஏன் ஒரு லட்சியக் கணவனாக ராமனையும், லட்சியக் காதலனாகக் கிருஷ்ணனையும் படைக்கவில்லை? ஆண் மகனின் சுயநலம் தான் அதற்குக் காரணம்! ஒரு கணவன் அவன் மனைவியுடன் அன்பு, பரிவு, பாசம், சிநேகிதத்தோடு பழகவில்லை என்றால் அவள் அவனுடன் சேர்ந்து வாழ்வதில் அர்த்தமே இல்லை. என்னைப் போல் இருநூறு பெண்கள் இருந்தால் ஆண்கள் தங்கள் சுயநலத்தை உணருவார்கள். ஓர் ஆண் தன் தாழ்வு மனப்பான்மையால், பெண்களை விடத் தான் உயர்ந்தவன் என்று தனக்குத் தானே நிரூபித்துக் கொள்ள அவளை மட்டம் தட்டுகிறான். இந்த நிலைமை மாற வேண்டும். பெண்கள் ஆண்களைவிடக் குறைந்தவர்கள் என்று நினைக்கக் கூடாது. சம உரிமை வேண்டும்.

கே: உங்கள் மறுமணம் பற்றி...?

ப: நான் இப்போது மணம் செய்திருப்பது ஒரு ஸ்விஸ் நாட்டவரை. பெயர் மரியோ. அவர் என்னைவிடப் பெண்ணின உரிமைகளைப் பாதுகாப்பதில் தீவிரமாக இருப்பவர்.

கே: உங்களுக்கும் குருவுக்கும் மனவேறுபாடு இருந்ததாகச் சிலர் கூறுகிறார்களே?

ப: அது உண்மைதான். நான் ஓர் ஒரியா பாட்டிற்கு நடனம் அமைக்க விரும்பினேன். குரு அது ஒடிஸி நடனத்திற்குச் சேராது என்றார். நான் பொருத்தம் என்று நம்பி அதை அமைத்தேன். அவருக்குக் கோபம் வந்து விட்டது. நான் அவருடைய சிஷ்யை இல்லை என்று கூறிவிட்டார். மிகவும் மனம் உடைந்து போனேன். அந்தச் சமயத்தில் எனக்கு ஆறுதல் கூறியவர்கள் இசை மேதைகளான சிவகுமார் சர்மா, பண்டிட் ஜஸ்ராஜ், ஹரிப்ரசாத் சௌராஸியா போன்றவர்கள். நான் சிஷ்யை இல்லையென்று குரு சொன்னாலும், அவர்தான் என் குரு என்று ஏகலைவன் போல என் நடனத்தைத் தொடர ஊக்கம் அளித்தார்கள். ஒரு வருஷம் கழித்துக் குரு என்னை மன்னித்து மீண்டும் என்னை சிஷ்யையாக ஏற்றுக் கொண்டார்.

கே: நடனம் உங்களுக்கு என்ன கொடுத்தது? நீங்கள் நடனத்துக்காக என்ன செய்யவிருக்கிறீர்கள்?

ப: நான் நடனம் ஆட ஆரம்பித்தது முதல் என்னுடைய உலகமே மாறியது. அதுவரை நான் வாழ்ந்த வாழ்க்கை டிஸ்கோவும், பார்ட்டிகளுமாய் இருந்தது. அடியோடு மாறியது. நண்பர்கள் மாறினார்கள். நான் கலைஞர்களை நாடிச் சென்றேன். என்னை மெய் சிலிர்க்க வைத்த ஒரு நிகழ்ச்சியை இப்போது சொல்கிறேன் — மேடையில் ஒரு முறை நான் நடனம் ஆடிக் கொண்டிருக்கையில் யதேச்சையாக என் பார்வை பக்க வாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தவர்கள் மீது விழுந்தது. அங்கு பத்மபூஷன் வி. எஸ். ஜோக், அவர்களுக்கு இடையில் அமர்ந்து என் நடனத்துக்கு வயலின் வாசித்துக் கொண்டிருந்தார்!

நான் வருமானத்துக்காக ஒடிஸி கற்றுக் கொடுக்க விரும்பவில்லை. இப்போது தெருவுக்குத் தெரு நடனப் பள்ளிகள் வந்து விட்டன. அதுபோல் இல்லாமல் கல்வித் தரத்துடன் ஒரு பள்ளியை ஆரம்பிக்க நினைக்கிறேன். நான் செய்யும் எந்தக் காரியத்துக்கும் பிரதிபலன் எதிர்பார்க்கவில்லை. எத்தனை பேர் நம்மைப் பாராட்டினார்கள் என்பதை விட யார் நம்மைப் பாராட்டினார்கள் என்பதில்தான் நான் கவனம் செலுத்துகிறேன்.

பேட்டி: ராஜி கிருஷ்ணமூர்த்தி
புகைப்படங்கள்:
ஆர். கோபால கிருஷ்ணன்





முடிந்துவிட்டதே' என்று வருந்துகிறோம்; நிரவல் முடிந்தால், 'இன்னும் சற்று விரிவாகச் செய்திருக்கக் கூடாதா' என்று ஏங்குகிறோம்; சுவரப் பிரஸ்தாரம் முடிந்துவிட்டால், 'ஏன்தான் முடிந்ததோ' என்று கோபமே வந்துவிடுகிறது! இப்படிப் பாட்டுக்குப் பாட்டு தோன்றுகிறது. அந்த அளவுக்கு சந்தானம் இன்று இசைத் திறனில் உயர்ந்துவிட்டிருப்பதால் அகாடமியில் பிளாக்கில் கூட டிக்கெட் வாங்க நோட்டுகளுடன் சிலர் வளைய வந்தார்கள். ஆனால் விற்பவர்கள்தான் இல்லை! ஒருவேளை 'மூன்று கச்சேரிகளுக்கு மேல் கிடையாது' என்ற சந்தானத்தின் சுயகட்டுப்பாடும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

இந்த ஸீஸனில் ரொம்ப 'கிளாமரா'ன விழா லால்குடிக்கு வெள்ளி வயலின் பரிசளிப்புதான்! கிருஷ்ணகான சபை அரங்கில் தங்க முலாம் பூசிய வயலின் பளபளத்தது என்றால் அதைவிடவும் அதிகமாக அரங்கில் பிரபலஸ்தர்கள் ஜொலித்துக் கொண்டிருந்தார்கள். இங்கேயும் செம்மங்குடிக்குத்தான் பேச்சில் முதல் மார்க்! 'ஜெயராமன் வெள்ளி விழாக் காலமாகக் கிருஷ்ண கான சபையில் ஸோலோ வாசிக்கிறார், ஐம்பது ஸோலோ நிகழ்ச்சிகளை இதுவரை நிகழ்த்தியிருக்கிறார், பெரும் புகழ் பெற்றிருக்கிறார் என்றால் காரணம், அவர் எடுத்த எடுப்பிலேயே ஸோலோ வாசிக்க வந்துவிடவில்லை. பல்வேறு பாடகர்களுக்குப் பக்கவாத்தியம் வாசித்து வாசித்து அவர்களுடைய மேதைத் தன்மைகளையெல்லாம்ரசித்துத்தமதாக்கிக் கொண்டார். அதன் மூலமாகத்தான் இசைத் திறனிலும் புகழிலும் உயர்ந்து வந்திருக்கிறார்' என்பதைநினைவூட்டினார்செம்மங்குடி. இந்த ஞாபகப்படுத்தலுக்கு இன்று அவசியமும் இருக்கத்தானே செய்கிறது! ''லால்குடியின் வாசிப்பு எப்படிப்பட்டது என்றால் பாடகரின் பாட்டுக்கு அனுசரணையாக வாசிப்பதோடு, ஒரு படி, மேலேயும் சென்று, பாடகரின் இசை ஆற்றல் இன்னும் சற்றுப் பிரகாசிக்குமாறு தூண்டிவிட்டுக் கொண்டேயிருப்பார்'' என்று கருத்துச் செறிவோடு பேசினார் செம்மங்குடி.

அன்றைய எதிர்பாராத வியப்பு லதா மங்கேஷ்கர் விஜயம். ''லால்குடியின் இசை ஆற்றலை எல்லாரும் பாராட்டுவார்கள், அவர் நல்லிதயத்தையும் நான் வாழ்த்துகிறேன்'' என்றுகுடும்பநண்பரைப்பாராட்டினார் லதா. ''திருமதி எம்.எஸ். பல ஆண்டுகளுக்கு முன்னால் மீரா திரைப்பட ரிகார்டிங்குக்காக பம்பாய் வந்திருந்தபோது அவர் பஜன் பாடக் கேட்ட சிறுமி நான். அப்போது, 'இந்த அரிய பெரிய கலைஞர் அருகே எப்போதாவது அமரும் பாக்கியம் கிடைக்குமா, உரையாடும் வாய்ப்பு கிட்டுமா?' என்று ஏங்கியிருக்கிறேன்'' என்றார் லதா. லதாவின் அந்தக் கனவு நிறைவானதை ரசிகர்கள் அன்று மேடையில் கண்ணுக்கு மெய்யாகக் கண்டார்கள். அந்த ரசிகர்களைப் பார்த்து, ''நீங்கள் அளிக்கும் உற்சாகம்தான் கலைஞர்களுக்கு டானிக்; நீங்கள் இல்லையேல் நாங்களும் இல்லை'' என்று வாழ்த்தினார் லதா. எல்லாம் ஹிந்தியில்தான். லால்குடி ரசிகர்கள் சிலிர்த்து மகிழ்ந்து, கரவொலி எழுப்பினார்கள். அதிலே தமிழ்ப் பண்பாடு ஒலித்தது!

ஒரு மணி நேரம் ஒன்றரை மணி நேரம் நம்மைப் பலரும் புகழக் கேட்டுக் கொண்டே இருப்பது ரொம்ப சிரமமான காரியம்'' என்று சரியாகச் சொன்ன லால்குடி, ''இந்தப் பாராட்டுக்களையெல்லாம் நான் முன்னுக்கு வரக் காரணமாயிருந்த என் குருநாதருக்கும், என்னைப் பக்கவாத்தியம்வாசிக்கச் சொல்லி வளர்த்துவிட்ட இசை மேதைகளுக்கும், என்னை ஊக்குவித்த விமர்சகர்கள், உற்சாகப்படுத்திய ரசிகர்கள், வாய்ப்பளித்த சபாக்கள் ஆகிய எல்லோருக்கும் எதையும் மிச்சம் வைத்துக் கொள்ளாமல் பகிர்ந்து கொடுத்துவிட்டுப் பழைய ஜெயராமனாகவே இருக்கிறேன்'' என்றார். ஆனாலும் பழைய லால்குடியிடம் இல்லாத ஓர் இலேசான சோகம் இன்றைய லால்குடியிடம் ஒட்டிக் கொண்டிருப்பதை உணர முடிந்தது. அதற்குக் காரணம் 'அவனா, ஆ வன்னாவா என்று ஆராயப் புகவேண்டாம்என்றாலும்சில கச்சேரிகளுக்கு வாசிப்பதாகக்கூறிவிட்டு கான்ஸல் செய்தது சாட்சியமாய் நிற்கிறது!

விழாவுக்குப் பின் நடந்த கச்சேரி, ஜாகிர் ஹுசேனின் தபலாக் கச்சேரியாகவே மாறிவிடாமல் காப்பாற்றிய பெருமை லால்குடிக்கு உண்டு! ஜி. ஜே. ஆர். முழு ஒத்துழைப்புத் தர, ஜாகிர் ஹுசேனின் ஆற்றலை வெளிக் கொணரவும் வழி வகுத்து, அதே நேரத்தில், 'இது வயலின் கச்சேரிதான்' என்று நிலைநாட்டியும் விட்டார். வேலூர் ராமபத்திரனின் மிருதங்கம், தபலா நாதத்துக்குச் சற்று அடங்கிப் போனாலும் ஆற்றலில் சளைக்கவில்லை!

— நமது நிருபர்கள்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032.

Editor: K. Rajendran

Editorial Office: 28, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras-600 034. (Phone: 473389)

Administrative Office: Race Course Road, Guindy, Madras-600 032 (Phones: 431543, 434157 Press: 434190)

கைபடாத சேவரிட் சேமியா
மணக்குமே உங்கள் கைபட்டதும்!



வரிட் சேமியா மிக நவீனமான அயல் நாட்டு
ந்திரங்களால் மிகச் சுகாதாரமான முறையில்
படாமல் தயாரிக்கப்படுகிறது.
யர்தர சம்பா கோதுமை ரவையில் தயாரிக்கப்படும்
வரிட் சேமியா சத்து நிறைந்தது. குழைந்து
ாகாதது. சீக்கிரமாகச் சமைக்கக் கூடியது. மேலும்,
வரிட் சேமியாவை வறுக்க வேண்டிய அவசிய
ல்லை. இது சமைத்த பின்பும் பால்போல் வெண்மை
ாக இருக்கும்!
ிற்றுண்டிகளானாலும், பாயசம் போன்ற விசேஷ
உணவு வகைகளானாலும் சேவரிட் சேமியா உங்கள்
சமையலுக்கு ஊட்டமும் சுவையும் கூட்டுகிறது!
ஆகையினால்தான் குடும்பநலன் கருதும் குடும்பத்
லைவிகள் விரும்பி வாங்குவது சேவரிட் சேமியாவே!



Sista's - UIM.462.85.TMA

முத்தான அம்மா சமைப்பது
சத்தான சேவரிட் சேமியா!

Savorit
சேமியா

